தமிழ்ப் பெண்கவிகள்

6199
THE MADURA TAMIL SANGAM
61199

வித்துவான்
ஸ்ரீமதி P. S. கமலவதனம்

Approved by The Madras T. B. C.
for class use, Non-detailed Study.
Vide Gaz. Page 29 of 4-5-55

ACL-FTS
00181
M.A.B.T.M.O.L.

அல்லயன்ஸ் கம்பெனி
தபால் பெட்டி நெ. 617
மயிலாப்பூர் : : சென்னை-4

உரிமை பதிவு 1955 அணா 15

பொருளடக்கம்

1. தமிழ் மூதாட்டி - ஔவையார்
2. கண்ணனைக் காதலித்தடைந்த கவியரசி
3. கம்பர் வீட்டுப் பணிப் பெண்
4. சோழன் மாதேவி
5. பேயுருக்கொண்ட பெருந்தகையார்
6. அவைக்கு அஞ்சாத அரிவை அம்மைச்சி
7. மதம் அழியாமல் காத்த மங்கையர்க்கரசியார்
8. கணவனுடன் தீப் பாய்ந்த கனிமொழியாள்
9. நைடதத்தின் நயங்காட்டிய நற்றமிழ்ச் செல்வி
10. முடிவேந்தரை அவமதித்த மொய்குழலாள்
11. தந்தையையும் நாட்டையும் இழந்து தவித்த தையலர்
12. பாண்டியன் மாலை பெற்ற பாவையர்
13. மற்றும் சில மணிகளும் மறக்குடி மங்கையரும்
    - i. மாறோக்கத்து நப்பசலையார்
    - ii. ஒக்கூர் மாசாத்தியார்
    - iii. காக்கைபாடினியார் நச்செள்ளையார்

அல்லயன்ஸ் பிரஸ், மயிலாப்பூர், சென்னை-4

தமிழ்ப் பெண்கவிகள்

1. தமிழ் மூதாட்டி - ஔவையார்

"ஔவையாரைப் பாருங்கள்! பெண்பாலாகிய அவர் கல்வியில் வல்ல பெரும் புலவரல்லரா?" என்பதையே, "முற்காலத்தில் தமிழ்நாட்டில் பெண் கல்வி ஏது?" என வினவுவோர்க்கு விடையாகக் கூறுவது வழக்கம். ஔவை யாரை அறியாதார் தமிழ் நாட்டில் எவரும் இரார். கற்றார் - கல்லார், இளையோர் - முதியோர், ஆடவர் - பெண்டிர் அனைவரும் அவரை நன்கு அறிவர். அவர் பெயரும் புகழும் பரவாத இடமில்லை. ஆகலின், அவரது வரலாற் றையும் பாடற் சிறப்பையும் ஈண்டு விரித்துக் கூற வேண்டுவதின்று. அங்ஙனம் கூறப் புகின் அதுவே ஓர் தனி நூலாக முடியும். ஆகலின், "ஆடவரோடொப்ப, பெண்டிரும் பண்டைக் காலத்தில் கல்வியிற் சிறப்புற்று

விளங்கினர்" என்பதைக் காட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள இந்நூலின் தன்மைக்கேற்ப ஈண்டு அப் பிராட்டியாரது புலமை, அஞ்சாமை, வீரம், அருள் முதலிய பண்பாடுகளில சிலவற்றைக் குறிப்பிடுவதே சாலும்.

ஔவையின் வரலாற்றை ஆராய்வோர்க்கு, "ஔவை என்னும் பெயர் கொண்ட இரு பெரும்புலவர்கள் தமிழ் நாட்டில் வதிந்தனரோ!" என்னும் ஐயப்பாடு தோன்ரு மல் போகாது. ஏனெனின், "சங்கப் புலவர்களும் வள்ளுவ ஞரும் வாழ்ந்ததாகக் கருதப்படும் இரண்டாம் நூற்ருண் டிலும், கம்பர், புகழேந்தி முதலிய புலவர் பெருமக்களின் காலமாகக் கொள்ளப்படும் ஒன்பதாம் நூற்ருண்டிலும், ஔவையாரின் பெயர் வழங்கப்பட்டிருத்தலின், இடைப் பட்ட ஆறு ஏழு நூற்ருண்டுகள், ஒருவர் உயிர் வாழ்ந் திருத்தல் எங்ஙனம் கூடும்?" என்னும் ஐயப்பாடு தோன்றுதல் இயல்பே யன்ருே!

"தன்னை உட்கொண்டாரை நோயின்றி நெடிது நாள் வாழச் செய்யும் சிறப்பினையுடைய நெல்லிக் கனியைப் புசித்தமையால், அத்துணை நெடுங்காலம் உயிர் வாழ்ந்திருத்தல் கூடும்" எனச் சிலர் பொருத்தம் கூறுவர். இஃது ஏற்கத் தக்கதேயாகும். அன்றியும், அவரது பாடல்களுள் முற்காலப் பாடலும் பிற்காலப் பாடலும் ஒன்றுக்கொன்று பெரிதும் வேறுபாடு கொண்டனவாகக் காணப்படுகின்றன. மொழியாலும் நடையாலும் வேறு பட்டுள்ள அப்பாடல்கள், "அவற்றைப் பாடினேர் வேறு; இவற்றைப் பாடினேர் வேறு" என்னும் வேறு பாட்டுணர்வு பயக்குமேயன்றி, 'எல்லாம் ஒருவர் வாக்கே' என்னும் எண்ணத்தை உண்டு பண்ணு என்பது திண் ணம். இதனுலும், 'இரண்டு ஔவையார்கள் இருந்த னரோ!' என்னும் ஐயம் உறுதிப்படுவதாகின்றது

அருமை மாணவர்களே! உங்கள் அறிவிற்கும் சிறிது வேலே வேண்டுமல்லவா? அதற்காகக் கீழே தரப் பட்டுள்ள இரண்டு பாடல்களைப் பார்த்து, 'அவற்றைப் பாடினோர் ஒருவரா? அல்லது தனித்தனி இருவரா?' எனத் தீர்ப்புக் கூற முயலுங்கள்.

முற்காலப் பாட்டு

" எருதே யிளைய நுகமுண ராவே
சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே
அவலிழியினும் மிசைபேறினும்
அவண தறியுநர் யாரென வுமணர்
கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன
இசைவிளங்கு கவிகை நெடியோய் திங்கள்
நாணிறை மதியத் தனையையிருள்
யாவண தோநின் நிழல்வாழ் வோர்க்கே."

பிற்காலப் பாட்டு

" சிரப்பான் மணிமவுலிச் சேரமான் றன்னைச்
சுரப்பா டியான்கேட்கப் பொன்றுடோன் றீந்தான்
இரப்பவ ரென்பெறினும் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவார் தம்கொடையின் சீர்."

"கால நிலேக்கேற்ப மொழிகளின் நடையிலும் மாறு பாடு உண்டாதல் இயல்பே; இது எல்லா மொழிகளுக்கும் பொருந்தும்; மொழிநூல் வல்லார் அனைவர்க்கும் இக் கொள்கை ஒப்ப முடிந்த உண்மை. ஆகலின், ஒருவரே அவ்வக் காலநிலேக்கேற்பத் தம் மொழிநடையையும் மாற்றிக்கையாண்டிருக்கலாம் அன்றோ? எனவே,ஔவை யார் ஒருவரே எனக் கொள்ளுதல் இழுக்கன்று" என்பா

ரும் உளர். அவர் கூற்று, பொருந்துமாயின் கொள்க. இங்கு அவ்வாராய்ச்சி நமக்கு வேண்டுவதின்று.

தமிழ்நாடு செய்த தவத்தின் பயனாகத் தோன்றிய ஔவையார், அரசர்மாட்டும் செல்வர்மாட்டும் சென்று, பாடி ஆடிப் பரிசுகொண்டு வாழும் இயல்புடைய பாணர் மரபினராகக் கருதப்படுகின்றார். நுண்ணறிவும் பற்றற்ற துறவு உள்ளமும் பிறவிப் பண்புகளாகப் பெற்றிருந்த அவருக்கு, கல்வித் தேர்ச்சியும், விரைந்து கவி பாடும் திறமும் வெகு எளிதில் அமைவவாயின. அன்பும் அருளும் அவரது உடன் பிறவிகள். பல்வேறிடங்கட்குச் சென்று, அறிவுரைகளால் மக்களைச் சீர்படுத்தலே கற்றறிந்த நம் கடமை எனக் கொண்டார் அவ்வம்மையார். அவர் மனம் நாட்டிற்குத் தொண்டாற்றுதலில் பெரிதும் நாட்டம் கொண்டு நின்றது. மண வாழ்க்கை அத் தொண்டிற்கு இடையூறும் என எண்ணி அதனை அவர் வெறுத்தார். எனினும், பெற்றோர்களின் ஏற்பாட்டின்படி ஒரு நாள், மாப்பிள்ளை வீட்டார் மணங்கருதி ஔவையாரைப் பார்க்க வந்தனர். அதனை அறிந்த ஔவையார் - மணமகள் - என்ன செய்தார்? பழங்கந்தை யொன்றை முக்காடிட்டு உடுத்துக்கொண்டார்; நீண்ட தடியொன்றினை ஊன்றுகோலாகக் கொண்டார்; உடலை வளைத்த வண்ணம் கிழவிக் கோலமாக அவர்கள் எதிரில் நின்று காட்சியளித்தார். மேலென்? பெண் பார்க்க வந்தோர் பேசாமல் வந்த வழி பார்த்தனர்.

அது முதல் அவ்வம்மை ஔவை (கிழவி) ஆயினர். ஊர்தோறும் திரிந்து, தம் இன்சொற் கவிகளால் மக்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தி வரலாயினர்.

"அறஞ்செய விரும்பு, ஆறுவது சினம், இயல்வது கரவேல், தெய்வம் இகழேல், தந்தை தாய்ப் பேண், நன்மை கடைப்பிடி."

" சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்-மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி."

" பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்-கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்."

என்பன போன்ற நீதி வாக்கியங்களாலும் செய்யுட்களாலும் பொய் பொருமை கோபம் பகைமை முதலிய தீக்குணங்களை அகற்றி, வாய்மை பொறுமை முதலிய நற்குணங்களைக் கைக்கொண்டு ஒழுகுமாறு மாந்தரைச் சீர்திருத்தி வந்தனர். அந்த நீதி வாக்கியங்களும் செய்யுட்களும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்னும் நூல்களாக வழங்கி வருகின்றன. நாட்டின் எதிர்காலச் செல்வங்களாகிய சிறுவர்களின் முன்னேற்றத்தில் கருத்துக் கொண்டு, பிறர் துணையின்றித் தாமே பொருள் அறிந்துகொள்ளும் முறையில், வாழ்க்கைக்கு இன்றியமையாத அறநெறிகளை, எளிய இனிய பாடல்களாக அமைத்துத் தந்த ஔவைப் பிராட்டியின் அருளை எவ்வாறு புகழ்வோம்! ஆயினும், அந்த நூல்களைத் தம் மக்களுக்குக் கொடுத்துக் கற்குமாறு செய்யும் பெற்றோர்

கள் இக்காலத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?— அந்தோ! பரிதாபம்!

* * *

அக்காலத்தில் சேர நாட்டின் ஒரு பகுதியை, தகடூரை அரசிருக்கையாகக் கொண்டு ஆண்டுவந்தவன் அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் பெருவீரன். அவன் அமிழ்தினும் இனிய தமிழ் மொழியினிடத்து மிகுந்த பற்றுடையவன். தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் போற்றுவதில் விருப்பம் மிக்கவன். தமிழறிஞர் குழாத்து ளிருந்து, அவர்கள் உரையாடுதலையும், பாடல்கள் இயற்றுதலையும், நூலாராய்ச்சி புரிதலையும் கண்டும் கேட்டும் மகிழ்தலில் தனி இன்பம் காண்பவன். பரிசிலர்க்கு மாரி போலப் பொன்னையும் பொருளையும் வாரி வழங்கும் வள்ளல்.

அதியமானின் அருங்குணங்களையும் வள்ளன்மையையும் அறிந்த ஔவையார் அவனிடம் சென்றார். புதையல் பெற்ற வறிஞன் போல, அதியமான் அவரைக் கண்டதும் ஆவலோடு வரவேற்று உபசரித்தான். அன்புரைகளால் அவர் அக மகிழ்வித்தான். தாய் எனக் கொண்டு, தலையன்பு காட்டினான். அவர் விரும்பியவற்றை வெறுக்க நல்கினான். அவர் பிரிவை யாற்றாது வருந்துவான். என்றும் தன்பாலே இருக்குமாறு பணிவுடன் இறைஞ்சி வேண்டுவான். தமிழ் மூதாட்டியும் அவன் வேண்டுகோளுக்கிணங்கி அங்கு நெடுங்காலம் தங்கியிருப்பார்.

அதியமான் நெடுமான் அஞ்சி ஓர் நாள் வேட்டையினிமித்தம் வழக்கம்போல் காட்டிற்குச் சென்றான். ஆங்கு ஓர் பெருமலையின் உச்சியில் பாறைப் பிளவினிடையில்

இருந்த கருநெல்லி மரத்தில் ஓர் கனி இருக்கக் கண்டான். கிடைத்தற்கரிய அக்கனியின் சிறப்பை அவன் நன்கறிந்தவன். உண்டாரை நெடுங்காலம் நோயின்றி வாழச் செய்யும் தன்மையுடையது அது. எனினும், அதனைக் கையகப்படுத்தல் அத்துணை எளி தன்று. அதனைப் பறிக்க முயல்வோர் உயிரோடு மீளுதல் அரிது. மரணத்தை எதிர்கொள்ள அஞ்சாதோரே அப் பழத்தைக் கொய்ய முயலுதல் வேண்டும். ஆயினும், அதியமான் அஞ்சாது சென்றான். தீங்கு சிறிதுமின்றிக் கனியுடன் மீண்டான். அரண்மனை அடைந்தவுடன் அத் தீங் கனியைப் புசிக்கவேண்டும் என்னும் அவா மீக்கூர, பரியை வேகமாக நடத்திச் சென்றான். இதனை யுண்டால் நெடுங்காலம் இந் நிலவுலகில் வாழலாம் என்பதை எண்ணி எண்ணி அவன் உள்ளம் பூரித்தது.

"நான் ஏன் உலகத்தில் நெடிது நாள் உயிர்வாழ்தல் வேண்டும்? என்னால் உலகத்திற்கு உளதாம் பயன் யாது?— இல்லை. எனக்குத்தான் என்ன பயன்? யான் ஓர் சிறந்த வீரன். உண்மையே! ஆனால் அந்த வீரம் உலகத்துயிர்களின் அழிவுக்கன்றி வேறு எதற்குப் பயன் படும்?"— இவ்வாறு ஓர் எண்ணம் அவன் உள்ளத்தில் தோன்றியது. சிறிது சிந்தித்தான்.

"எவரால் உலகிற்கு நன்மையுண்டாம்? எவர் தமக் கென வாழாது உலகிற்கு உழைக்கும் உத்தமத் தியாகி கள்? தந்நலங் கருதாது பிறர் நலமே பெரிதெனப் பேணும் பெற்றியர் யாவர்? மொழியும் சமயமும் நாடும் செழிக்க, வளம்பெறப் பாடுபடுவோர் எவர்? அவரே நெடிது நாள் உயிர் வாழ வேண்டியவராவர். அத்தகை யோர் இக் கனியைப் புசித்தலே தகுதியாம்" எனப் பல வாறு எண்ணினான் அதியமான். ஔவையார்மேல் சென்

றது அவன் மனம். தேனினுமினிய செந்தமிழ்ப் பாக்க ளால் அரசர்களையும், கல்வி அறிவற்ற ஏனைய மக்களையும், அறிவு புகட்டி, நல்லொழுக்கமும் பக்தியும் தாய்மொழிப் பற்றும் பெரியார்ப் பேணலும் ஆகிய பண்பாடுடையவர்க ளாக்கி வரும் தமிழ் மூதாட்டியின் தொண்டு அவன் மனத்தைக் கவர்ந்தது. "அவரே இப் பழத்தைப் புசித்தற் கேற்ற தகுதி வாய்ந்தவர். அவர்க்கே இதனை ஈவேன்; யான் இதனை உண்ணேன்" என உறுதிகொண்டான். அப்பொழுதுதான் அவன் இதயம் களிப்புற்றது. முக மலர்ச்சியும் புத்துணர்ச்சியும் கொண்டவனாய் அரண்மனை யைக் குறுகினான். ஔவையாரைக் கண்டான். அன்புடன் கனியை ஈந்து அருந்துமாறு வேண்டினான். 'இக்கனி யின் பெருமையைக் கூறின் அருந்தார்' என்றெண்ணி அவ்வுண்மையை உரையாது மறைத்துக் கொடுத்தான். ஔவையாரும் அது சாதாரணமான கனியெனவே கருதிப் புசித்தார். உண்டபின்னர் அதன் தன்மையைக் கூறினான் அதியமான். அதியமானின் அவ்வரிய செய லைச் செவிமடுத்த தமிழரசி விம்மிதம் எய்தினார். அன்புக் கண்ணீர் பெருக அவனைப் பலபடப் பாராட்டிப் புகழ்ந்து பாடினார். அவர் பாடிய பாவின் பொருள் இது.

"வெற்றி யுண்டான வாளை எடுத்துப் பகைவர் களத் தில் சாக வென்ற வீரக் கழலை உடையவனே! அதியர் கோமகனே! மாற்றாரைப் போரில் கொல்லும் வீரச் செல் வத்தையும் பொன் மாலையையுமுடைய அஞ்சி! பெருமை பொருந்தியவனே! நீ பெரிய மலையின் விடரின்கண், ஏறுதற்கரிய உச்சியினின்று கொய்து கொணர்ந்த, சிறிய இலைகளையுடைய நெல்லியின் இனிய பழத்தைப் பெறுதற்கரிதென்று கருதாது, அதனாற் பெறும் பேற் றினை எமக்குக் கூறாது, நின்னுள்ளே அடக்கிச் சாதல்

ஒழிய எமக்குக் கொடுத்தாய். ஆதலால், நீ பால் போன்ற வெள்ளிய பிறை பொலியப் பெற்ற திருமுடியினையும் நீலமணி போலும் கரிய திருமிடற்றினையுமுடைய ஒருவனைப்போல, என்றும் நிலைபெற்று வாழ்வாயாக.'' (சிவபெருமான் சாதற்குக் காரணமாகிய நஞ்சை யுண்டும் நிலைபெற்றிருந்தாற் போல நீயும் சாவாதிருத்தல் வேண்டும் என்பது கருத்தாம்.) — இதுவே அவர் கூறிய வாழ்த்துரை.

இதனால், தமிழ் நாட்டில் பாரி, அதியமான் முதலிய பெரு வள்ளல்கள் தமிழ் மொழியையும் புலவர் பெரு மக்களையும் முற்காலத்தில் எவ்வாறு மதித்துப் பேணி வந்தனர் என்பதும், பெண்பாலாகிய ஔவையார் கல்வியிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் தொண்டு புரிதலிலும் எத்துணைச் சிறப்புடன் விளங்கினர் என்பதும் நன்கு அறியக் கிடக்கின்றன அல்லவா? இனி, தமிழ் மூதாட்டியின் அறிவின் திறம், சொல்வன்மை, அஞ்சாமை இவற்றிற்கு எடுத்துக்காட்டாகவுள்ள ஓர் நிகழ்ச்சியை மாத்திரம் எடுத்துக் காட்டுவதோடு இக் கட்டுரையை முடிப்போம்.

அதியமான் அஞ்சியின் ஏற்றத்தைக் கண்டு பொருது, அவனை வென்று அவனது நாட்டைக் கைப் பற்றக் கருதிய காவலர் பலராவர். அவருள்ளும் முதன்மையாக எண்ணத் தக்கவனாக இருந்தவன் தொண்டைமான் என்பவன். அவன் காஞ்சிபுரத்திலிருந்து அரசாண்டுவந்த ஓரரசன். போருக்கு அஞ்சாத ஆண் சிங்கம் போன்ற பெருவீரன். பிறரைப் போன்று தமிழ் மொழியினிடத்தும் கல்வியாளரிடத்தும் பேரன்பு செலுத்தி வருபவன். இரப்போர்க்குப் பெரும் பொருள் ஈவதில் வெறுப்பில்லாதவன். அத் தொண்டைமான்

தகடூர் மேல் போருக்கு எழப் பெரும் படை திரட்டிக் கொண்டிருந்தான். அச்செய்தி ஒற்றரால் அதியமானுக்குத் தெரிந்தது. அஞ்சி அமருக்கு அஞ்சுவனே! பகைவரை வெற்றி கொள்ளுதலில் அடங்காத ஆர்வம் உடையவன் அவன். போர் எனின் ஆவலோடு எதிர் கொண்டு வரவேற்கும் பெருமிதம் கொண்டவன். எனினும், அவன் போரை விரும்பிலன்; வெறுத்தான். பல்லாயிரக்கணக்கான படைவீரரின் அழிவல்லவா போர் எனப்படுவது! அவனது அன்பு கனிந்த உள்ளம், மண்ணுசை கொண்ட மன்னரின் மதியற்ற செயலால், குற்றமற்ற மக்கள் வீணே மடிதலை நினைந்து அனலிற் பட்ட மெழுகென உருகியது. போர் நிகழாதவாறு தடுக்க நினைத்தான். "தூது அனுப்புதலே நல்லது. அதற்கு ஏற்றவர் எவருளர்? தமிழன்னையே அரசியல் காரியங்களைத் திறம்படச் செய்து முடிக்க வல்லார்; ஆகலின், அவரையே அனுப்புதல் வேண்டும்" எனக் கருதியவனுக, ஔவையாரிடம் தன் எண்ணத்தை எடுத்தியம்பினன். அவரும் ஒருப்பட்டுக் கச்சிப்பதிக்குச் சென்றுர்.

பிராட்டியின் பெருமையை முன்னரே அறிந்தவன் ஆகலின், தொண்டைமான், அவரை வரவேற்று முகமன் பல கூறினன். அறுசுவை உண்டி அமர்ந்திட்டான். அவரது வருகையின் காரணத்தை யறிந்ததும் அவன், எவரானும் வெலற்கரிய தன் படைவன்மையை அவர்க்குக் காட்டக் கருதினன். அரண்மனை வளமையைக் காட்ட அம்மையாரை அழைத்துச் சென்றவன், முடிவில் படைக்கலக் கொட்டிலுக்குள் கொண்டு சென்றுன். கண்டார் முழுதும் ஔவையார். "இத்துணைப் படைவன்மையுடையானை வெல்ல வல்லனே அதியமான்?" எனத் தன் வலிமையையும் அதியமானது எளிமையையும் ஔவைப்

பிராட்டியார் உணர்தல் வேண்டும் எனத் தொண்டை மான் கொண்டுள்ள கருத்தைத் தெரிந்து கொண்டார். அவனது செருக்கை அடக்க அதுவே தகுந்த சமயம் என்றெண்ணினர். அவ்வளவில், பெருமையோடு தம்மை நோக்கியவண்ணம் இருந்த அவ்வரசனைப் பார்த்து, ஒளவையார் புன்முறுவல் பூத்த முகத்துடன், "அரச! ஆம். உனது இப்படைக்கலங்கள் மயிற்பீலியும் மாலையும் அணியப்பெற்று, கணுக்கள் உடையனவாய்த் திரண்டுள்ள உறுதியான காம்புகள் செவ்வையாக்கப்பட்டு, நெய் பூசப்பட்டு, காவலையுடைய அரண்மனையில் அழகாக வரிசை வரிசையாய் வைக்கப்பட்டுள்ளன; ஆனல், அதியமான் போர்க் கருவிகளோ, போரிற் பலமுறை குத்தியதனல் ஓரங்களும் நுனியும் சிதைந்து, செப்பனிடப்படுதற்காகக் கொல்லனது பணிக்களமாகிய சிறிய கொட்டிலில் போடப்பட்டுள்ளன" என, அவனைப் புகழ்வது போல இகழ்ந்தும் அதியமானை இகழ்வது போலப் புகழ்ந்தும் கூறினர். "நீ போரையே அறியாதவன்; அதியமான் போர் புரிதலையே தொழிலாக உடையவன். உன் படைக்கலங்கள் அழகுடன் மிளிர்தற்கும், அதியமானுடையவை சீர்கெட்டிருத்தற்கும் இதுவே காரணமாகும்" என்றியம்பி, அவனது அகந்தையை அழித்த அம்மையாரது மதிநுட்பமும் சொல்வன்மையும் ததும்பும் இப் பாடல், தொண்டைமானை வெள்கித் தலைகுனியுமாறு செய்ததில் வியப்பென்ன!

மாணவர்களே! அந்த அருமையான பாவினைப் படிக்க நீங்கள் விரும்புகின்றீர்கள் அல்லவா? இதோ அப்பாடல்; படித்துப் பொருளறிந்து மகிழுங்கள்.

" இவ்வே, பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்திநெய் பணிந்து

கடியுடை வியனக ரவ்வே, அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ! என்றும்
உண்டாயின் பதங்கொடுத்து
இல்லாயி னுடனுண்ணும்
இல்லோ ரொக்கல் தலைவன்
அண்ணலெம் கோமான் வைந்நுதி வேலே.''

(நுதி-நுனி; கொல் + துறை; குறுமை+இல்; பதம்-உணவு; ஒக்கல்-சுற்றத்தார்.)

பின்னரும் ஔவையாரை வாளா விட்டிலன் அரசன். "அம்மையே! யான் பொர எழின், என்னோடு எதிர்த்துப் பொரவல்ல வீரரும் நுமது நாட்டில் உளரோ?'' என வினவினன். அதற்குப் பிராட்டியார் இறுத்த விடையைப் பாருங்கள்:

'' எறிகோல் அஞ்சா அரவி னன்ன
சிறுவன் மள்ளரும் உளரே; அதாஅன்று,
பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோ ரென்னும் என்னையும் உளனே.''

"அடிக்கும் கோலுக்குச் சிறிதும் அஞ்சாமல் சீறி எதிர்த்து வரும் அரவைப் போன்ற இளவீரர் எண்ணற்றோர் எமது நாட்டில் உளர். அன்றியும், மன்றினிடத்துத் தொங்கும் மத்தளம் காற்றின் அசைவால் ஒலியுண்டாக்கின், அது போர்ப் பறை முழக்கமென்று கருதிப் பெருமகிழ்ச்சி கொள்ளும் எமது தலைவனும் உள்ளான்.''

இதனைக் கேட்ட பின்னரும் தொண்டைமான் போர் வேட்கை ஒழியாதிருக்குமோ?

2. கண்ணனைக் காதலித்தடைந்த கவியரசி

வைணவ சமயத்தைச் செந்தமிழ் நாட்டில் என்றும் நின்று நிலவுமாறு நிலைநாட்டிய பெரியோர்கள் பன்னிருவர் ஆவர். அவர்கள் ஆழ்வார்கள் என்றழைக்கப்படுவர். அவர்களுள் ஒருவர் பெண்பாலார். கோதை என்பது அவர் பெயர். ஆண்டாள், சூடிக் கொடுத்தாள் என்னும் வேறு பெயர்களும் அவருக்கு உண்டு. எனினும், ஆண்டாள் என்பதே அதிகமாக வழங்கும் பெயராகும். வைணவ உலகம் அவரைப் பெரிதும் போற்றிப் பரவுகின்றது. அவரது பெயரையும் அவர் பாடிய பாடல்களையும் அறிந்திருப்பது போல ஏனைய ஆழ்வார்களின் பெயர்களையும் பாடல்களையும் அஃது அறிந்திராது எனக் கூறுவதும் குற்றமாகாது.

அவ்வம்மையார் அருளிச் செய்த முப்பது பாடல்களாலாகிய திருப்பாவை, இலக்கிய வளம் மிகுந்து பக்திக் கருவூலம் எனத் தகும் சிறப்பு வாய்ந்தது. தமிழ் நாட்டில் அனைவரும் இதனைப் பொன்னே போல்

போற்றுவர். வைணவ சமயப் பற்றுடையோர் இல்லங்களில் மார்கழித் திங்கள் தோறும் இளமங்கையர் பனிக் காலக் குளிரையும் பொருட்படுத்தாது வைகறையில் துயில் நீத்து, நீராடி, தூய உடை தரித்து, இறை திருவுருவப் படங்களுக்கு மலர் சாத்தி, பொங்கல் செய்து படைத்து, திருப்பாவைப் பாசுரங்களை உள்ளன்போடு பாடி, இறை வழிபாடு ஆற்றுவர். ஆடவரும் பஜனைக் கூடங்களில் மத்தளம் முதலிய இசைக் கருவிகளுடன் திருப்பாவைப் பாடல்களைப் பாடுவர்; வீதிகளில் பாடிக் கொண்டு ஊர்வலம் செய்வர். இது தமிழ்நாட்டில் பெரிய ஊர்களிலும் நகரங்களிலும் ஆண்டுதோறும் காணப்படும் காட்சியாகும்.

கண்ணபிரானிடம் காதல் கொண்டு அவனையே கணவனாக வரிக்கக் கருதிய ஆண்டாள், தாம் உறையும் ஊராகிய சீவில்லிபுத்தூரைக் கண்ணன் உறைவிடமாகிய ஆயர்பாடியாகவும், அங்குள்ள இளநங்கையரையும் தம்மையும் ஆயர்குலப்பெண்களாகவும், தாம் பெண்களைத் துயிலெழுப்பிக் கண்ணன்பாற் சென்று பாவை நோன்பிற்கு வேண்டுவதை அருளுமாறு இரந்து கேட்பதாகவும் கற்பித்துக்கொண்டு பாடியவையே திருப்பாவைப் பாடல்கள். “கோதை சொன்ன சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே பாடிப் பரவுவோர் இறைவனருள் பெற்று இன்புறுவர்; மாரி வளம் கொழிக்கும்; பஞ்சம் பட்டினி நாட்டில் தலைகாட்டா; நீங்காத செல்வம் நிறைந்து விளங்கும்” என்பது மக்களின் நம்பிக்கை. “மாதர்-நோன்புப் பாடல்களாகத் தோன்றினும் இத்திருப்பாவைப் பாசுரங்கள், வேதசாரமான தத்துவார்த்தங்களை உள்ளுறை பொருளாகக் கொண்டுள்ளன” என்று பெரியவாச்சான் பிள்ளை விரிவுரை - வியாக்கியானம் - கூறுகின்றது.

சங்கமிருந்து தமிழாராய்ந்த பாண்டிய நாட்டில் சீவில்லிபுத்தூர் என்னும் திருப்பதியில், அந்தணர் குலத்தில் விஷ்ணுசித்தரின் திருமகளாய்த் தோன்றியவர் கோதையார். வைணவ சமயப் பக்தர்களாகிய ஆழ்வார்கள் பன்னிருவருள் விஷ்ணுசித்தரும் ஒருவராவர். அப்பெரியார் ஒருமித்த உள்ளன்போடு இடையருது இரவும் பகலும் இறைவனைத் தியானித்தலும், அவ்விறைவனது அனந்த கல்யாண குணங்களைப் பல்வகையானும் பாராட்டிப் புகழ்ந்து பாடுதலும், பூங்கா அமைத்து நாளும் நறுமலர் கொய்து மாலையாகக் கட்டிப் பரமனுக்குச் சாத்தத் தருதலுமாகிய திருத்தொண்டுபுரிதலை நியமமாகக்கொண்டவர். வடமொழி தென்மொழிகளிற் பெரும் புலமை வாய்ந்தவர். தம்பால் வரும் அடியார்களுக்குக் கல்வியறிவையும் பகவத் பக்தியையும் புகட்டும் வித்தகர். நல்லொழுக்கம் மிக்கவர். பெரியாழ்வார் என யாவராலும் புகழப் பெற்றவர்.

பரம பாகவத சிகாமணியாகிய பெரியாழ்வார் வைகறையில் நீராடுவது கண்ட கோதையார், தாமும் அவருடன் நீராட விரும்புவார். தந்தையார் நந்தவனம் நண்ணுங்கால், தாமும் உடன் செல்வார்; சின்னஞ்சிறு கைகளால் பன்மலர் பறிப்பார்; அவர் மாலை கட்டும்போது தாமும் அருகில் அமர்ந்து அவ்வாறு செய்ய முயல்வார். நிரம்பா மென்மொழிகளால் இறைவன் திருப்பெயர்களைத் தந்தையார் கூறித் துதிக்குங்கால், தாமும் அன்பு கனிய மொழிந்தவாறு கைகூப்பி நிற்பார். தொண்டர் குழாத்துடனிருந்து அவர்களது நல்லுரையாடல்களைச் செவிமடுப்பார். கோதையார் இளமையில் இங்ஙனம் பழகி வந்தமையால் நாளடைவில் கல்வி கேள்விகளிலும் இறை வழிபாட்டிலும் இணையற்றவராய் விளங்கலானார்.

சிறிய பூச்சி புழுக்களும் தாம் உறையும் இடத்திற் கேற்ப, கருமை, பசுமை, வெண்மை முதலிய நிற வேறு பாடுடையனவாக இருத்தல்போல், பிள்ளைகளும் தாம் வளரும் இடத்தின் சூழ்நிலைக்கேற்ற பண்பாடுகளைக் கொண்டோராக இருப்பர் என்பது உளநூல் வல்லார் துணிபு. விசும்பின்கண் உள்ள வழி, தன்னியல்பின் மாருத நீரானது நிலத்தோடு கூடிய வழி நிறம், சுவை முதலிய பண்புகள் திரிந்தாற்போல, மாந்தர் அறிவும் தான் சேர்ந்த இனத்தின் இயல்புக்கேற்றவாறு திரியும். ஒருவனது அறிவானது அவனதுமனத்தின்கண் இருப்பது போலக் காணப்படினும் உண்மையில் அவ்வாறு இருத்தல் இல்லை; அவன் சேர்ந்த இனத்தின்கண்ணே உள்ளதாம். ஆகவே, மனமும் செய்தொழிலும் ஒருவர்க்குத் தூய்மையாய் இருக்க வேண்டுமாயின் இனம் தூயதாய் இருத்தல் வேண்டும் என்பது சொல்லாமலே அமையும்.

குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையின் அமைப்பு, சிறு பருவத்தின் சூழ்நிலையை அடிப்படையாக்கிக்கொண்டு அமைவதாகும். பிள்ளைமையில் நல்ல சூழ்நிலை அமையின் பிற்கால வாழ்க்கையும் செவ்வையுறும்; அங்ஙனம் இன்றேல் அவ்வாழ்க்கை நலமுறல் இன்றிப் பாழ்படும். ஆகவே, மக்களின் நன்மையை நாடும் பெற்றோர் தாமும் கடவுள் பக்தி, வாய்மை முதலிய பண்புகள் உடையோராய் நல்லொழுக்க நெறியில் நிற்றல் வேண்டும். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்", "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்னும் முதுமொழிகள் இவ்வுண்மையை உணர்த்தத் தோன்றினவே. நல்லொழுக்கம் உள்ள குடும்பங்களில் வளர்ந்த பிள்ளைகள் நல்லோராகவும், தீய ஒழுக்கம் பொருந்திய குடும்பங்களில்

வளர்ந்த பிள்ளைகள் தீயோராகவும் இருத்தல் கண்கூடு. இதனையே 'குடிப்பிறப்பு' என்றனர் நம் முன்னோர்.

இக்காலச் சிறுவர் சிறுமிகளிற் பலர் கேட்போர் செவி தீயுமாறு தீய வார்த்தைகளைப் பேசுதல், ஆன்றோரை அவமதித்தல், பெற்றோர்க்கு அடங்காமை, நாத் தழும்பேற நாத்திகம் பேசல் முதலிய தகாநெறிச் சென்று அலைந்து திரிவதை எங்கும் காண்கின்றோம் அன்றோ! காரணம் யாது? அடிப்படைச் சூழ்நிலையின் அவநிலையே யாகும்.

பெரியாழ்வார் கண்ணபிரானது பேரெழிலையும் பெரு விறலையும் தம் அன்புளங் கலந்த செஞ்சொற்களால் பல படப் பாராட்டிச் சிறப்பித்துப் பாடுதலில் ஆர்வம் மிக்கவர். அவரது அத்தகைய திருப்பாடல்களைப் படிக்கப் படிக்க அப்பெருமானது தோற்றம் கோதைப் பிராட்டியாரது திருவுள்ளத்தில் உருப்பெற்றுத் திகழ்வதாயிற்று. அவன்பால் கொண்ட அன்பு தழைத்துப் பூத்துக் காதற் கனியாக மாறியது. கண்ணனை மணாளனைக் கொள்ளவே நாடினார் கோதையார். அல்லும் பகலும் அவனையே- கண்ணனையே - தன் காதலனையே நினைந்து நினைந்து உருகியது அவர் நெஞ்சம். "அவன் என்னை விரும்புவானோ! அவன் மனத்துக்கு உகந்த மனைவியாதற் கேற்ற தகுதி வாய்ந்தவளாக நான் இருக்கிறேனோ?" எனத் தம்மை ஆடை அணிகளால் அலங்கரித்துக் கொள்ள விழைவார். தந்தையார் சுவாமிக்கெனக் கட்டி வைக்கும் மலர் மாலைகளைத் தாம் தரித்துக்கொண்டு ஆடியின் எதிர் நின்று, தம் எழிலைக் கண்டு, "நான் கண்ணனுக்குகந்த காதலியே!" என நிறை மனப்படுவார். நாளும் இன்னணம் தாம் சூடிய மாலைகளைச் சுவாமிக்குக் கொடுத்து வந்தமையால், "சூடிக் கொடுத்

தாள்'' எனப் பெயர் பெற்றார். அப்பெருமானை அடைய அவர் பாடிய திருவருட் பாடல்களின் தொகுதியே, 'நாச்சியார் திருமொழி' எனக் கொண்டாடப் பெற்று வருகின்றது.

''மானிடவர்க்கென்று வாழ்க்கைப்படின் வாழ கில்லேன்'' எனக் கண்ணனையே காதலனாகக் கொள்ள உறுதிகொண்ட கோதையார் - ஆண்டாள் - அவனையே பாடி இறுதியில் அப்பெருமானையே அடைந்தார்.

இனி, அச் செந்தமிழ்ப் புலமைச் செல்வியாரது பாக்களில் (பாசுரங்களில்) சில காண்பாம்

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உன்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

(*அனந்தல் - சோம்பலுடன் உறங்குதல். ஏமப்படல் - காவலிடப்படல்.*)

(*பாவை நோன்பிற்கு நீராட வைகறைத் துயில் நீத்துச் செல்லும் ஓர் பெண் மற்றொரு பெண்ணின் வாயி லில் நின்று உடன் கூட்டிச் செல்லத் துயிலெழுப்புதல்.*)

''மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து

வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமாபோலே.'' * *

* * *

''வீரம் பொருந்திய சிங்கம் ஒன்று, மழைக்காலத்தில் மலைக்குகை யொன்றில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தது. மாரிக் காலம் நீங்கியது. பசி தோன்றியது. உணவு தேடக் குகையினின்று வெளிப்புறப்படுகிறது.'' சொல் ஓவியமாக அதன் தோற்றப் பொலிவைச் சித்திரித்துக் கொணர்ந்து நம் அகக்கண் முன் நிறுத்துகின்றார் தமிழ்ப் பூங்கோதையார், மேல் பாடலின் வாயிலாக.

''உறக்கம் நீங்கியதும் கண்ணைத் திறக்கிறது அச் சிங்கம். நெருப்புருண்டைகள் போலப் பொலியும் கண்களினின்றும் தீப் பொறி பறக்கின்றது. எழுந்து பிடரி மயிர் சிலம்பும்படி உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கி நாலு பக்கத்திலும் பார்வையைச் செலுத்துகின்றது. திடீரென இடியொலி போல ஓர் வீர முழக்கம் - கர்ஜனை. காடே எதிரொலிக்கிறது. மெல்ல நடையிட்டுக் குகைப் புறத்தில் வந்து நிற்கிறது.

இவை, திருப்பாவைப் பாடல்கள்.

காதலனாகிய கண்ணன் தம்மை மணம் புணர வந்ததாகத் தாம் கண்ட கனவின் தன்மையை விளக்கும் கவினுறு கவிகளில் சில காண்பாம்.

''வாரணம் ஆயிரம் சூழவலம் செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரணப் பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.''

"நாளை வதுவை மணமென்று நாளிட்டு,
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்,
கோளரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான்."

"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான்."

3. கம்பர் வீட்டுப் பணிப் பெண்

சோழ நாட்டில் உள்ள தேரழுந்தூரின் பெரிய தெருவினூடே ஒருவர் போய்க்கொண்டிருக்கிறார். முழங் காலளவு நீண்ட சட்டை; அதன்மேல் கழுத்தைச் சுற்றிய வாறு மார்பின் இருபுறத்தும் நீண்டு தொங்கும் மேலாடை; முகத்திற்குப் பொலிவு தந்து நின்ற திருநீறு, சந்தனப் பொட்டு, தலைப்பாகை இவை அனைத்தும் அவர் ஓர் தமிழ்ப் புலவர் என்பதை விளக்கப் போதியனவா யிருந் தன. அதனை உறுதிப்படுத்துவதுபோல இருந்தது அவர் கையில் பிடித்திருந்த சுவடி ஒன்று. அவர் கால் - காப்பின் மேல் படிந்திருந்த புழுதி அவர் தொலை தூரத்திலிருந்து வருகிறார் என்பதைத் தெரிவித்தது.

வீதியில் எதிர்ப்பட்டோர் இரண்டொருவரிடம் ஏதோ கேட்டுக்கொண்டே சென்றார் அவர். அவ்வாறு சென்றவர் தெருக்கோடியில் ஓரிடத்தில் சாணம் பிசைந்து கொண்டிருந்த மாது ஒருத்தியைக் கண்டு, அங்கே நின்று அவளை நோக்கி, "அம்மையே! கவிச் சக்கரவர்த்தியார் கம்பர் வீடு எது?" எனக் கேட்டார்.

"அதோ! அண்மையில் நீண்ட பந்தரின் எதிரில் காணப்படுகிறதே, அதுதான், அப்பெருமானது திரு

மாளிகை. அடுத்த பக்கத் தெருவை நோக்கிய வண்ணம் இருக்கிறது அதன் முகப்பு. ஆம், நீங்கள் யார்? இந்த ஊர்க்குப் புதியவர்போல் காண்கின்றீர்களே. எங்கிருந்து வருகின்றீர்கள்? கம்பரைப் பார்க்கத்தான் வருகின்றீர்கள் போலும்!" என்ருள் அம்மாது அவரை நோக்கி.

"ஆம், யான் இவ்வூர்க்குப் புதியவன். யானும் ஓர் தமிழ்ப் புலவனே. 'கம்பர் கல்வியிற் சிறந்தவர்', 'கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' என்றெல்லாம் அவர் புகழ்ந்து பேசப்படுகின்ருரே; பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்ருர் அவளுக்கு விடையாக.

"உங்கள் பெயர் யாதோ?"

"அம்பல சோமாஜி."

"அப்படியா! மெத்த மகிழ்ச்சி. ஆனல் புலவர் பெருமான் ஊரில் இல்லையே."

"அடடா! இத்துணை வருத்தமும் வீணுகவா முடிந்தது!"

"கவலை வேண்டா. நாளை மறு நாளில் வந்துவிடுவார். இருந்து பார்த்துப் போகலாம். அவரைக் காண வருவோர்க்கு உண்டி உறையுள் முதலிய வேண்டிய தந்து உபசரிப்பதற்கு அலுவலகத்தார் ஆயத்தமாக இருக்கின்றனர். விருப்பம்போல் தங்கி யிருக்கலாம். ஒரு குறையும் இராது."

"நல்லது, அம்மா! அப்படியே செய்வேன். யான் இப்பொழுது அங்குச் செல்லலாம் அல்லவா?"

"தாராளமாகச் செல்லலாம். ஆனல் நீங்கள் புலவர் என்றதனல் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். கேட்கலாமா?"

"ஆகா! கேளுங்கள்."

"யாவர்க்கும் தெரிந்த ஒரு பொருள். அது வட்டமாக மதிபோல் இருக்கும். அதன்மேல் வன்னிக் கொடி தாவிப் படரும். அது தன்னைக் கொட்டுகின்றவர்களின் கையில் கூத்தாட நிற்கும். சுட்டபின் கையில் எடுக்கும்போது 'சிவ சிவ' என்று உரைக்கத்தக்க பொருளாகும். அது என்ன?"

" வட்ட மதிபோலிருக்கும்,
வன்னிக் கொடிதாவும்,
கொட்டுவார் கையினின்று கூத்தாடும்,
சுட்டால் 'அரகரா' என்னும்."

இதுதான் அப் பெண்மணி கூறியது.

அது என்ன பொருள்? ஒன்றும் விளங்கவில்லை புலவருக்கு. வெட்கக் குறி முகத்தில் அரும்பத் தொடங்கியது. "கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும் என்பது மெய்யாகவே இருக்கிறதே!" என விழிக்கலானர்.

கண்டாள் அவர் நிலையை அவள். "அம்பல சோமாஜி! ஒரு நாள் அவகாசம் தருகிறேன். யோசித்து விடை கூறுங்கள். மன்னிக்க வேண்டும். நிற்கின்றீர்கள். போய் வாருங்கள்" என்று இன்சொல் இயம்பி அனுப்பினுள். அவரும் விடைபெற்று ஏகினர்.

அப் பெண்மணியின் வினு இவ்வாறு வெண்பாவாக இருந்தது.

" வட்டமதி போலிருக்கும் வன்னிக் கொடிதாவும்
கொட்டுவார் கையினின்று கூத்தாடும் - சுட்டால்
அரகரா என்னுமே அம்பலசோ மாஜி!
ஒருநாள் விட்டேனீ துரை."

அருமை மாணவர்களே! அந்தப் புலவர் விடை அறிந்து கூறினரோ இல்லையோ; நாம் அறியோம்.

நீங்கள் கூறுவீர்களா?

4. சோழன் மாதேவி

மணமகளின் மாசில்லா மதிவதனம் ஏனோ ஒளி யிழந்து காணப்பட்டது! துள்ளிக் குதித்து ஓடும் மடமான் மானும் மங்கையின் உள்ளம் அன்று காலை முதல் சுறு சுறுப்பின்றி உணர்ச்சி அற்றது போல் சோர்வுற்றுக் கிடந்தது. அடிக்கொரு முறை, "அம்மா! அம்மா!" என ஆர்வத்தோடு அழைத்தவாறு, அன்னையைத் தேடிச் சென்று, அன்பொழுகக் கொஞ்சும் அரசிளங்குமரி, தன் அறையில், தோழிகளுமின்றித் தனித்துக் கிடந்தது எக் காரணத்தால்! மறு நாள் கணவனகம் செல்ல இருக்கும் தனக்கு, எவ்வெப் பொருளைத் தாயகப் பரிசிலாக (சீதன மாக)க் கொடுத்தனுப்பலாம் என்பதில் ஈடுபட்டிருக்கும் பெற்றோருக்கு அண்மையில் இருந்து, தனக்கு வேண்டிய வற்றைக் கேட்டுப் பெறலாமே என்பதிலும் அவள் மனம் செலுத்திலள். "கங்கையிற் புனிதமாய காவிரி", "பொன் கொழிக்கும் பொன்னி" எனப் பலவாறு புகழப்படும் காவிரி நதியால் வளம் மிகுந்த நாடாகிய சோழவள நாட்டின் பேரரசியானவளுக்கு, இவர்கள்பால் கேட்டுப் பெறுமாறு கிடைத்தற்கு அரிய பொருள் என்னுளது?

தங்கள் தலைவியின் இயற்கைக்கு மாருன இந்த நிலைமையைக் கண்ட தோழிகளின் அன்புரையாடலும் அரசகுமாரிக்கு மகிழ்ச்சி யூட்டிலது. தோழிகளின் மன வாட்ட நீக்க முயற்சி அவர்களுக்கே மனவாட்டம் விளை வித்தது. காரணத்தைக் கண்டறிய இயலாது கவன்றனர், பாவம், தோழிகள். "அருந்தவம் ஆற்றிப் பெற்று, இத் துணை ஆண்டுகள் உயிரினும் மேலாகக் கருதி அன்பு மாரி பொழிந்து, சிறப்புக்கள் பல செய்து காத்து வளர்த்த தாய் தந்தையர் - தன் மகிழ்ச்சியைத் தங்கள் மகிழ்ச்சியாகக் கொண்டு, இரவும் பகலும் இணைபிரியாது உடன் உறைந்த தோழிகள்-பிறந்தது முதல் அதுகாறும் மண்டி யிட்டுத் தவழ்ந்து, மடநடை பயின்று, ஓடி ஆடி, உண்டு உறங்கி வளர்தற்கு இடனுய், வானளாவ உயர்ந்த மலை யென, நிமிர்ந்த மதிலால் சூழப்பெற்ற மாட மாளிகை-மாலைப்போதில் மாதரோடு உல்லாசமாக நறுமலர் பறித்து விளையாடும் எழில்மிகு பூங்கா - இவையனைத்தையும் விட்டுப் பிரிவதென்ருல், மனத்துக்கினிய மணுளனேடு பல்வகை இன்பங்களைத் துய்க்கப்போவதாயிருப்பினும், மன வருத்தம் தோன்றத்தானே செய்யும்! புதுமை புகு முன் பழமையின் இழப்பிற்குக் கவலுதலும், புதுமை புக்க பின்னர்ப் பழமையை மறத்தலும் மனத்திற்கு இயல்பு தானே! நாளை நாயகனேடு கலந்து உறவாடுங்காலத்து இக்கவலையெல்லாம் தலைகாட்டாது ஓடும்" எனப் பலவாறு பேசிக்கொண்டனர் தோழிகள் சிலர்.

பாவையின் நிலைமை பாண்டியன் செவிப்பட்டது. அந்தப்புரம் ஏகி மகளைக் கண்டான். பெற்ருேர்களாகிய தங்களைப் பிரிவது கவலைக்குள்ளாக்குவதே எனவும், எனினும் அது விலக்க முடியாதது எனவும், அன்றியும், வேண்டும்போது தங்களிடம் வரக்கூடும் ஆகலின், கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை எனவும் பல

தேறுதல் மொழிகள் கூறி, மகளைத் தேற்றினன் பாண்டியன். தந்தையின் இன்னுரைகளைச் செவியேற்ற இளவரசி அவனை நோக்கிச் சொல்வாள்: "தந்தையே! உங்கள் பிரிவு எனக்கு இயம்பொணுத் துயரை விளைவிக்கின்றது உண்மையே. ஆயினும், அதினும் மிகுந்த துயர் தருவது ஒன்றுளது; அஃது, ஆசிரியர் பிரிவே. அருமை ஆசிரியரைப் பிரியவேண்டுமே என்று எண்ணும்போது, எனக்குளதாம் துயரம் அளவிடற்கரியதாகின்றது."

"அப்பா! அன்றியும், செல்வம் அனைத்தினும் சிறந்தது கல்விச் செல்வமே என்பதும், அதினும் செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் என்பதும் யான் உரைக்க நீங்கள் அறியவேண்டியதில்லை. அழியாத அச்செல்வத்தைத் தராநின்ற ஆசிரியப் பெருந்தகையின் பிரிவு, அச்செல்வத்தைப் பெரிதும் வேண்டி நிற்கும் எனக்குப் பெருந்துயர் விளைவிப்பது வியப்பல்லவே! அரிய பொருள்களையும் எளிதில் விளங்குமாறு கற்பிக்கும் ஆற்றல் வாய்ந்த ஆசிரியர் புகழேந்திப் புலவரிடம், இளமை தொட்டு யான் கற்ற நூல்கள் பல ஆயினும், இன்னும் கற்கவேண்டியவையும் பல உள்ளன அன்றோ! தவிர, ஏதேனும் கவலை தோன்றுமாயின் இன்னுரைகளால் அதனை மாற்றவும், அறியாமையால் தவறுன காரியங்களைச் செய்யின், தடுத்து அறிவுறுத்தித் தகுநெறியில் செலுத்தவும், புலவர் பெருமாளுகிய புகழேந்தியாரைப் போன்ற சான்றோரைத் துணையாகக் கொண்டொழுகல் அனைவர்க்கும் உரிய தலையாய கடமையன்றோ! பெருந்துணையாக அத்தகைப் பெரியாரைப் பெற்று வைத்தும், பயன்கொளாது இழப்பதெனின், எவர்தாம் கவலையுருதொழிவர்! கடவுள் பற்று, அருள், வாய்மை, இன்சொல், அழுக்காறின்மை, வெகுளாமை முதலிய ஆசிரிய இலக்கண முழுதும் நன்கு அமையப்பெற்ற நல்லா

சிரியரை அடைதல் எளிதோ! புகழேந்திப்புலவரால் நான் பெற்ற நன்மைகள் எத்துணை என்பேன்! அத்தகைய தெய்வப் புலவரைப் பிரிய நேர்ந்ததே என்று வருந்து கிறேன்" எனக் கண்களில் நீர்மல்கக் கழறினுள் இள வரசி.

தன் அருமந்த மகளின் கண்கலக்கங் கண்ட காவலன் சண்பக பாண்டியன், "குமாரி! கவலற்க. கவிஞர் பெரு மானை நீ உன்னுடன் அழைத்துச் செல்க. யான் இன்றே சென்று புகழேந்தியாரைக் கண்டு கூறுவேன்" என ஆறுதல் இயம்பி அகன்ருன். 'ஆசிரியரையும் உடன் அழைத்தேகுக' என மொழிந்த அரசனது மாற்றம், தாயைத் தேடித் தவிக்கும் சேய்க்கு, தாயின் வருகையைக் கூறும் கூற்றை யொத்திருந்தது, அம்மங்கை நல்லா ளுக்கு.

பிரிவாற்ருமையால் வருந்தும் இளவரசியோடு சோழ நாடு சென்று சிறிது காலம் தங்கி வருமாறு பாண்டியன் வேண்ட, புகழேந்திப் புலவர் தமக்கும் அதுவே விருப்ப மென்றும், நல்ல மாணுக்கரைப் பிரிவதென்பது ஆசிரிய ருக்கும் வருத்தந் தரும் செயலாகுமென்றும் கூறி, அரச குமாரியுடன் செல்வதற்கு இசைந்தார்.

பாண்டியன் மகளை மணமுடித்துவரச் சோழன் குலோத்துங்கன் பாண்டிய நாடு சென்றபோது, தனக்குப் பதிலாக அரசியலை நடாத்த ஒட்டக்கூத்தரை நியமித் திருந்தான். ஒட்டக்கூத்தர் சோழன் அரசவைப் புலவர் தலைவர். குலோத்துங்க சோழனுக்குத் தமிழ் மொழியைக் கற்பித்த நல்லாசிரியர். குலோத்துங்கன் ஆசிரியர்பால் தந்தையின் மிக்க அன்பு செலுத்தி வந்தான். அவர்

சொல்லைக் கடவாமல் ஒழுகுவதில் அவா மிக்குடையவன் அவன். அவர் காலத்தில் அவருக்கு இருந்த செல்வாக்கு அந்நாட்டில் வேறு எவர்க்கும் இருந்ததில்லை என்று சொல்லலாம். ஏன்?—எங்கும் எல்லாப் புலவர்களும் சீரும் சிறப்பும் பெற்று விளங்கினர் அக்காலத்தில் என்பதும் பொருந்தும். தமிழரசி மணிமுடி தரித்து அரசுகட்டிலமர்ந்து செங்கோல் செலுத்திய காலம் அது. பெருநில வேந்தரும், குறுநில மன்னரும், செல்வச் சீமான்களும் செந்தமிழ் மொழியின் செவ்வியைக் கண்டு களித்ததோடு, செந்நாப் புலவர்க்குப் பொன்னையும் பொருளையும் வரையாது வழங்கி வள்ளல்களாய் வாழ்ந்த காலம் அது .தமிழ்ப் பாவாணர் கல்விப் பெருமிதத்தால் மன்னரையும் மதியாது, "மன்னவனும் நீயோ? வள நாடும் உன்னதோ? உன்னை யறிந்தோ தமிழை ஓதினேன்?" எனக் கழறித் தருக்குற்றுத் திரிந்த காலம் அது. தமிழ் நாட்டினை மூவேந்தர் அல்ல; முத்தமிழே ஆண்டு வந்தது என்பதும் மிகையாகாது. குலோத்துங்கனுக்காகப் பாண்டியன் மகளை மணம் பேசி முடித்தவரும் ஒரு புலவரே (ஒட்டக்கூத்தரே) என்றால், தமிழ்ப்புலவர்களின் சிறப்பிற்கு வேறு சான்றும் வேண்டுமா!

பாண்டிய இளவரசி தன் மணாளனாகிய குலோத்துங்கனோடு சோழநாடடைந்து சின்னாட்களாயின. ஒரு நாள் தன் ஆசிரியர் நினைவு வந்தது அவளுக்கு. அவரைக் காண விழைந்தாள். உடனே சென்று அழைத்துவருமாறு பாங்கியருக்குப் பணித்தாள். சிறிது நேரத்திற்குப் பின்னர்த் திரும்பிவந்த தோழிகள், "அம்மணி! புகழேந்திப் புலவர் சிறைவாசியா யுள்ளார். ஒட்டக்கூத்தரின் சூழ்ச்சியாம் அது. தம் ஆசிரியரின் கட்டளையாதலின் அதனை அறிந்தும் வாளா இருக்கின்றாராம் அரசர்" எனக் கூறினர்.

சோழனுக்குப் பெண் பேசப் பாண்டியனிடம் தாம் சென்றபோது, தாம் சொல்லுக்கு மறுப்புக் கூறும் முறையில் ஏதோ பேசினர் என்ற காரணத்தால் புகழேந்திப் புலவர்பால் பகையும் அழுக்காறும் கொண்டிருந்த ஒட்டக் கூத்தர், இப்போது அவர் வருகையை அறிந்ததும் எளிதில் அவரைச் சிறைப்படுத்திவிட்டார்.

புகழேந்தியார் சிறைவாசியா யுள்ளார் என்ற செய்தி சோழன் மாதேவியைத் திடுக்கிடச் செய்துவிட்டது. “இஃதென்ன கொடுமை! அரசநீதி எனப்படுவது இது தானே! ஒரு குற்றமும் செய்யாத ஒருவரை அருஞ்சிறை யடைத்த இந்த அரசரது ஆட்சி முறை சால அழகியது! என் பொருட்டாக வந்த ஆசிரியர் பிறரொருவரால் தகுந்த காரணம் இன்றிச் சிறையிடப் பட்டுள்ளார் என்பதை அறிந்தும், அவரைச் சிறைவீடு செய்யாதிருப்பது அரசர் பெருமான் என்பால் கொண்டுள்ள அன்பின் அறிகுறி போலும்!” என வெகுண்டு, அரசி, “புலவர் சிறையினின்றும் விடுவிக்கப்படும்வரை அரசரை அந்தப் புரம் வர அனுமதிப்பதில்லை” என உறுதி கொண்டாள்.

சோழன் தன் காதலியைக் காண மிக்க ஆவலாக அந்தப்புரம் நோக்கி வேகமாக நடந்தான். வாயில் அடைபட்டிருந்தது. வியப்புற்றான். என்றுமில்லாத கதவடைப்பு இன்று ஏன்? தட்டினன் கதவை. திறக்கப்படவில்லை. அரசி தன்பால் சினங் கொண்டுள்ளாள் போலும் எனக் கருதித் திரும்பிச் சென்று, அவைக்களப் புலவராகிய ஒட்டக்கூத்தரை அனுப்பினன். மனைவியர் வெகுளி போக்கிச் சமாதானப்படுத்தப் புலவரை அனுப்புதல் அக்கால வழக்கம். தற்பெருமை மிக்கவராகிய அவர் தருக்குடன் அங்குச் சென்று கதவைத் தட்டினர். தட்டுவது மட்டும் போதுமா? இன்சொல் கவிதை இயம்ப வேண்

டுமே; மனப்பிணி மருந்து அக்கால மாந்தர்க்கு அமிழ்தினும் இனிய தமிழே அன்றோ! ஊடல், கவலை முதலிய பேய்களைத் துரத்தும் மந்திரமும் அதுவேயாம்.

இந்தப் பாட்டைப் பாடினார் அவர்:

"நானே இனி உன்னை வேண்டுவதில்லை; நளினமலர்த்
தேனே கபாடம் திறந்திடுவாய்; திறவாவிடிலோ
வானே றனைய இரவி குலாதிபன் வாயில் வந்தால்
தானே திறக்கும் நின் கைத்தல மாகிய தாமரையே."

(நளினம் - தாமரை; வான் ஏறு - வானில் தோன்றும் பேரிடி; இரவி - சூரியன்.)

"தாமரை மலரில் உள்ள தேன் போன்ற இனிமையான சொற்களையுடைய இலக்குமி போன்றவளே! கதவைத் திறந்துவிடு. திறவாவிடில் பேரிடி போன்ற சூரியகுலத் தோன்றலாகிய சோழன் உன் வாசலில் வந்தால் உனது கையாகிய தாமரை தானே திறந்துவிடுமே; அதற்காக நான் உன்னை வேண்டுவது ஏன்?" என்பது அதன் பொருள்.

அரசியின் சினக்கனலுக்கு எண்ணெயாயிற்று அப்பாடல். "என்ன! 'நானே இனி உன்னை வேண்டுவதில்லை!'-வேண்டுமாறு இவரை வேண்டியது யார்? இரவி குலாதிபன் வாயிலில் வந்தால் கையாகிய தாமரை தானே திறந்திடுமாம்! வந்தும் திறக்கவில்லையே! திறவாமையாலன்றோ இவர் வந்தார் வேண்ட. கவிநயம் வெகு நன்று! வெகு நன்று" என எழுந்து சென்று, "ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்"எனத் தம் ஆசிரியரைச் சிறைப்படுத்தியவர் இவர் என்றதனால் உண்டாகிய வெகுளி தோன்றக் கூறி மற்றொரு தாழ் இட்டார். அது

கண்ட புலவர், "இது என்ன! அவிழ்க்கப் போய் முடியிட்டுக்கொண்டு வந்த கதையாக இருக்கின்றதே. அரசியாரின் சினக்கனல் என்மீது வீசக் காரணம் யாது?" எனத் திகைப்புக் கொண்டவராய்ச் சோழன்பால் நிகழ்ந்ததைக் கழறச் சென்றார்.

"ஒட்டக்கூத்தர் பாட்டு 'ஒற்றைத் தாழை இரட்டை ஆக்கியது' ஏன்? அரசிக்கு அவர்மீது யாது சினம்? நானும் அதற்கு உடந்தையோ!"- நீண்ட நேர ஆலோசனைக்குப் பின்னர்ப் புகழேந்தியார் சிறையீடு நினைவிற்கு வந்தது சோழனுக்கு. தன் தவறான செயலுக்கு வெள்கினான். விரைந்து சிறைக் கோட்டம் நண்ணினான். புலவர் பெருமானை வணங்கி, பிழை பொறுக்குமாறு வேண்டினான். அரசியார் சினத்தை ஆற்றுமாறு கேட்டுக் கொண்டான்.

புகழேந்திப் புலவரும் சோழன் வேண்டுகோளுக்கு இசைந்து அரசியின் இருக்கை எய்தி, அவர் செவிப் புலனுமாறு,

"இழையொன் றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை,
ஏந்திய பொன்

குழையொன் றிரண்டுவிழிஅணங்கே! கொண்ட
கோபம் தணி;

மழையொன் றிரண்டுகைமான பரணன்நின்
வாயில் வந்தால்

பிழையொன் றிரண்டு பொறாரோ! குடியில்
பிறந்தவரே!"

என்னும் பாடலைக் கூறினார்.

(இழை-நூலிழை; வகிர் செய்தல்-பிளத்தல்; அணங்கு-தெய்வப் பெண்; மழை ஒன்று-மேகம்போல வழங்கும்; மான + ஆபரணன்.)

"நூலைப் பிளந்தாற் போன்ற நுண்ணிய இடையினையும் காதளவு நீண்டுள்ள கண்களையும் உடைய தெய்வ மகள் போன்ற அரசி! நீ கொண்ட கோபத்தை விடுக; மழைபோல் பொருளை வேண்டுவோர்க்கு வழங்கும் கைகளையும், மானமாகிய ஆபரணத்தையும் உடைய வேந்தன் உன் வாயிலினிடத்து வரின், அவன் பிழைகளைப் பொறுத்து ஏற்றுக்கொள்ள வேண்டியது கற்புடை மாதரின் கடமையல்லவா!" என்பது இப் பாடலின் பொருள்.

கவியின் இனிமையைச் செவியாரப் பருகிய செந்தமிழ்ப் புலமைச் செல்வியாகிய அரசியார் கவி நயத்தைப் புகழ்ந்து பாராட்டினர். சரேலெனச் சென்று கதவம் திறந்து ஆசிரியரைக் கண்டு அகமகிழ்ந்து வணங்கி வரவேற்று இருக்கை ஈந்து உபசரித்தார். எதிர்பார்த்துக் காத்திருந்த அரசனும் உட்புகுந்து, பிழையைப் பொறுக்குமாறு இருவரையும் வேண்டினன். அரசியார் ஊடல் விட்டுப் புலவருக்குத் தக்க உறையுள் முதலியவற்றை அமைத்துத் தருமாறு அமைச்சர்க்கு ஆணையிட்டனுப்பினர். பின்னர்க் காதலர் இருவரும் மனம் கலந்த அன்போடு வாழ்க்கையை நடத்துவாராயினர்.

மகிழ்ச்சியின்றி இருந்தோர் ஒருவரே. யாவர்? ஒட்டக்கூத்தர்தாம். அழுக்காறுடையார்க்கு மன எரிவன்றி அமைதி ஏது?

5. பேயுருக் கொண்ட பெருந்தகையார்

"என்ன! என் மனைவி யென்றே கருதினீர்கள் இத் தேவியாரை! யானும் என் மரபினரும் அடிபணிந்து போற்றத் தகுந்த பெருமை வாய்ந்தவரல்லரோ இவர்! இவரே என் குலதெய்வம். இச் சிறு மகவுக்குப் 'புனித வதி' என, இவரது புனிதமான பெயரன்றே வைத்துள் ளேன்! ஏன் இப்படிப் பார்க்கின்றீர்கள் என்னை? மனைவி யைப் பணிகின்றான்; இவன் பித்தனே என்னும் எண்ணம் போலும்! இவர்பால் யான் கண்ட தெய்வத்தன்மை யல்லவோ இவரை விட்டுப் பிரியுமாறு செய்தது! என் பால் பணிகொள்ளத் தக்காரை எனக்குப் பணியாளாகக் கொண்டிருத்தல் ஏற்ற செயலாமோ? இயம்புங்கள். அது கருதியே இவரைப் பிரிந்துபோந்து மறுமணம் புரிந்து கொண்டு இங்கு வாழ்ந்து வருகிறேன். உலகுய்யத் தோன்றிய உத்தமி இவர். இதில் எட்டுணையும் ஐயமின்று. நீங்களும் வணங்குங்கள் இவரை." மீண்டும் மனைவியை வணங்கி நின்றான். அவர்தம் பெருமையைக் கண்கூடாகக் கண்டவனல்லனே பரம தத்தன்!

ஆண்டிருந்தோர் திகைப்பெய்தினர் நிகழ்ந்ததை அறியாமல். புனிதவதியார் நாணி ஓர் புறத்து ஒதுங்கி நின்றார். தாம் கனவிலும் நினைந்திராத கணவனது இச்

செயல் அவரைத் திடுக்கிடச் செய்தது. அசைவற்று மரம் போல் நின்றார். மின்னல் போலப் பலப் பல எண்ணங்கள் அவர் உள்ளத்தில் தோன்றின. "இனி யான் இல்லறத்திற்கு ஏற்றவள் ஆகேன். இல்லாளன் இன்றி இல்லறம் நடத்துதல் ஒல்லுமோ? இந்நிலையில் யான் செய்யக் கடவது யாது?" என்று இறைவன் திருவருள் துணை நாடி இறைஞ்சி நின்றார்.

இளமையில் விளையாட்டுப் பருவத்தில் அரும்பி, அதுகாறும் வளமுற வளர்ந்து வந்த இறைவழிபாட்டுணர்ச்சி, அன்று அவருள்ளத்தில் மலரப் பெற்றது. திருமுகம் தெய்வ வொளி வீசியது. சித்தமல மறுத்தோர் செல்லும் பத்தி நெறி, அவ்வம்மையாரின் வாழ்க்கை நெறியாகத் தோற்றம் அளித்தது.

"மெய் என மயக்கித் துயர்க்கடலாழ்த்தும் இப்பொய்யுடல் உறவு இன்றோடு ஒழிந்தது. காதற் பொருளாக மணத்தின் மூலம் கொண்டானுக்கு உரியதாக்கிய இவ்வுடலை, அவனைக் களிப்பித்தற் பொருட்டு ஆடை அணிகளால் அலங்கரித்துப் பேணும் கடமை இனி இலதாயிற்று. 'எனக்கு இது வேண்டா' என்று இதனோடு கொண்டிருந்த தொடர்பினை உரியவன் உதறிவிட்ட பின்னர், இதனை அழகுறுத்தல் வேறு எவர் பொருட்டு?" எனப் பல பல எண்ணினார் புனிதவதியார். இறைவன் பற்றின்றி வேறு பற்றுச் சிறிதும் இன்றி வாழ்ந்த மங்கையர்க்கரசியார்க்குக் கிடைத்த இல்வாழ்க்கை விடுதலை, கூட்டில் அடைபட்டிருந்த பறவைக்குக் கிடைத்த விடுதலை போன்று பெருமகிழ்ச்சியைத் தந்தது. இறைவன் திருவருட் பேற்றினை வியந்து போற்றினார் மாதரசியார். "எந்தை அடி ஏத்தும் இன்பநெறி பெற்றேன் பிறவியின் பயனும் பெற்றேன். இனி இவ்வுடலைக் காண்போர்

அருவருக்குமாறு பேயுருக்கொண்டு திரிவேன். சிவன் சேவடி சேரும் செந்நெறி செல்வேன்" என்று உறுதி பூண்டு எக்களிப்போடு பித்தம் பிடித்தார்போல் அவ் விடத்தினின்றும் அகன்றார்.

விம்மிதம் உற்று நின்ற பரமதத்தனும், அவன்பால் சேர்ப்பிக்கப் புனிதவதியாரை அழைத்துப் போந்த உறவினர்களாகிய பெரியோர்களும் மன மறுகித் தத்தம் இருக்கை சென்றெய்தினர்.

பரமனடியே பற்றெனக் கொண்ட முத்திநெறியில் தலைப்பட்ட புனிதவதியாரின் வாழ்க்கை, உலக நடையி னின்றும் முழுதும் மாறுபடுவதாயிற்று. உடலம் வற்றி என்புருவெய்தியது. "பேயுருவோ இது!" என உலகினர் பேசுமாறு தலைவிரிகோலமாய் நின்றார் அவர். "பேயரே எனக்கு யாவரும்; யானும் ஓர் பேயனே எவர்க்கும்; இது பேசி என்? பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே" என் றியம்பினர் அடியார் ஒருவர். அவ்வாறே பிறப்பறுக்கும் பெருமான்றன் பெய்கழல் தேடிப் பேயாயலைந்தார் பெண்ணரசியார். பாலர், உன்மத்தர் பிசாசர் பண்புகள் என நூல்கள் நுவலும் ஞானியரின் பண்புகளே அம்மை யாரின் பண்புகளாய் அமைவவாயின.

"ஈசனை என்று காண்பேன்! இன்புருவான இறைவ னது எழிலார் கழலை எய்துநாள் எந்நாளோ!" என இரவும் பகலும் அவ்வம்மையார் திருவுள்ளம், ஈசன் அருளையே நாடி, பூவிற் பொலியும் மதுவை யுண்டு மயங்கி நிற்கும் வண்டுபோல் அவன் பொன்னடிப் போதிற் பொருந்தி நின்றது. பக்தி மேலீட்டால் பரமனுறையும் கோயில் பல பணிந்து ஞானக்கருவூலமாக விளங்கும் நற்றமிழ்ப் பாக் கள் பல பாடித் துதித்து, முடிவில் இடையறாது என்றும் அவனடி சார்ந்து நிற்கும் பேறு பெற்றார் ஞானத் தாய்.

* * *

சோழ நாட்டில் உள்ள பெரிய நகரங்களுள் காரைக்கால் என்பதும் ஒன்று. அது துறைமுகப் பட்டினம். வியாபாரத்தில் அது மேன்மையாக விளங்கியது. அங்கு வெளிநாடுகளிலிருந்து பல பொருள்களைக் கொணர்ந்து இறக்குவதும் இந்நாட்டிலிருந்து சரக்குகள் பலவற்றைப் பிற நாடுகளுக்கு ஏற்றிச் செல்வதுமாகப் பல கலங்கள் ஓயாது போக்குவரவு செய்துகொண்டிருக்கும். அதனால் அந்நகரம் செல்வத்தில் சிறந்ததாய், சகல வளங்களும் பொருந்திப் பொலிந்தது. வாணிகம் மிகுதியாக நடைபெறும் இடங்களில் வாழும் மக்கள் அவ்வாணிகத்தையே தங்கள் தொழிலாகக் கொள்வது இயல்பு. தவிர, வாணிகமே வருவாய் மிகுந்த தொழில். உலகில் பெருஞ் செல்வர்களாக உள்ளாரனைவரும் வாணிகத்தால் பொருளீட்டியவர்களே யாவர். படாத பாடுகள் பட்டுப் படித்து உத்தியோகம் செய்வோரினும், வாணிகம் புரிவோர் அதிக வருவாய் உள்ளவர்களாயிருத்தலைக் கண்கூடாக எங்கும் காண்கின்றோம். இவ்வுண்மையை உணராமல் பெரும்பாலோர் கல்வியைப் பிற தொழில்களில் ஈடுபடுத்தாமல் உத்தியோகமே உயர்வு என்றெண்ணி உழல்கின்றனர். அறிவு வளர்ச்சிக்காகவென்று அவர்கள் கல்வி கற்பதில்லை. இந்த உத்தியோகப் பித்தம் இந் நாட்டினரை விட்டு என்றுதான் ஒழியுமோ!

தனதத்தன் காரைக்காலில் வணிகர்குலத் தலைவனாகத் திகழ்ந்தவன். அவன் குபேரனோடு ஒப்ப உரைக்கத் தகும் பெருநிதிக் கிழவன். ''செல்வத்தின் பயனே ஈதல்'' என்பதைக் கடைப்பிடித்து உண்டியும் உடையும் வறியோர்க்கு ஈந்துவக்கும் ஏந்தல். சிவனடி அன்பு நீங்காச் செவ்விய உளத்தன். இறையுருவ வழிபாடே அவன் வீட்டில் நாடோறும் காலையில் நடைபெறும் முதல்

நிகழ்ச்சியாகும். கல்வி கற்பதிலும், கற்றோரை ஆதரிப்பதிலும் கருத்துக் கொண்ட அத் தனதத்தன் இல்லத்தில், கல்வியில் வல்ல கவிஞரைக் காணாத நாளைக் காண்டலே அரிதாகும்.

தனதத்தன் குலக் கொழுந்தாகத் தோன்றியவள் புனிதவதி என்னும் பெண்மணி. பெற்றோர் தங்கள் நல்வினைப் பயனாகப் பிறந்த புனிதவதியைப் பெறலரும் பேருகக் கருதி வளர்த்து வந்தனர். புனிதவதி வயதிலும் வடிவிலும் வளர்ந்து வந்தது போலவே, ஒழுக்கத்திலும் கடவுள் பக்தியிலும் வளர்ந்து வந்தாள். எவரிடத்தும் அன்பு பாராட்டல், இனிமையாகப் பேசுதல், முகமலர்ச்சியோடு வறியோர்க்கு ஈதல், பொய்யாமை, அடக்கம் முதலிய அருங்குணங்கள் பல இளமையிலே தாமே புனிதவதிபால் இருத்தலைப் பெற்றோரும் மற்றோரும் கண்டு மட்டிலா மகிழ்ச்சி கொண்டனர். எதிர்ப்பட்ட பொருளைத் தனக்குள் அமைத்துக் காட்டும் கண்ணாடி போன்றது சிறு குழந்தைகளின் உள்ளம். ஆகவே, பிறர் செயல்களைக் கவனித்துத் தாமும் அவ்வாறு செய்ய அவர்கள் முயல்வர். அவர்களின் பேச்சும் செய்கையும் தாய் தந்தையரையும் சூழ்நிலையையுமே பெரும்பாலும் சார்ந்திருக்கும். நல்லதோ கெட்டதோ, குழவிப் பருவத்தில், எது அவர்தம் உள்ளத்தில் இடம் பெற்றுவிடுகிறதோ, அது அகற்ற இயலாதவாறு வேரூன்றிவிடுகிறது. இந்நிலையில் பிள்ளை வளர்ப்பில் பெற்றோரின் பொறுப்பு மிகப் பெரிது.

நல்ல சூழ்நிலையில் வளர்ந்த புனிதவதி நற்குணவதியா யிருந்தது வியப்பல்லவே. ஈசனை அன்போடு பூசிப்பது அவருக்குப் பெருமகிழ்ச்சி யூட்டும் செயலாயிருந்தது. தம்மையொத்த இளஞ் சிறுமிகளோடு கூடி விளையாடுகையில், பதுமைகளை யமைத்து, மலரிட்டு

வணங்குதலே அவரது பிள்ளை விளையாட்டாகக் காணப் படும். ஓர் சிறுமியைச் சிவனடியாராகக் கருதி அன்ன மிட்டு உபசரிப்பார். கற்களால் சிறு ஆலயம் அமைத்து வலம் வந்து வணங்குவார்.

தந்தை தனதத்தன் தன் செல்வக் குமாரிக்குக் கல்வி கற்பிக்க ஓர் ஆசிரியரை அமைத்தான். அவர்பால் அன்புடனும் அடக்கத்துடனும் இருந்து கல்வி கற்று வந்தார் புனிதவதியார். மங்கைப் பருவம் எய்துமுன் கற்பவை கசடறக் கற்றுச் செந்தமிழ்ப் புலமைச் செல்வியாய்த் திகழ்ந்தார்.

தனது மரபினனும் கல்வியும் செல்வமும் அழகும் அறிவும் உள்ளவனுமாகிய பரமதத்தனே புனிதவதிக்குத் தகுந்த மணாளனுவான் எனக் கண்ட தனதத்தன், பெரியோர்களைக் கொண்டு மணம் பேசுவித்து, நல்ல நாளில் திருமணமும் செய்து முடித்தான். பின்னர் அக்கால வழக்கப்படி இல்வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் குறைவற அமைக்கப் பெற்ற ஓர் வீட்டிலிருந்து தனி வாழ்க்கை நடத்தவும் அனுப்பப்பட்டார்கள், புனிதவதியாரும் பரமதத்தனும்.

இல்வாழ்க்கை இன்பம் பயப்பதாக இருத்தற்குக் கணவன் மனைவியரிடையே மாசற்ற அன்பு நிலவுதல் வேண்டும். கல்வியறிவும் கடவுள் பக்தியும் கடமையுணர்ச்சியும் உடையார்பால் அன்றி ஏனையோர்மாட்டு மாசற்ற இன்ப அன்பு முகிழ்த்தல் அரிதாம். புனிதவதியார் பரமதத்தன் இவர்கள் மாருத அன்பு கொண்டு இன்ப வாழ்க்கை எய்தப் பெற்றிருந்தனர் என்றே சொல்லலாம். இருப்பினும், புனிதவதியார்பால் இளமையிலே தானே தோன்றியிருந்த சிவனடிப் பற்று, குடும்பப்பற்றினும் அதிகமாக ஓங்கி வளர்ந்து வந்தது.

ஓர் நாள் முற்பகல், முதுமையால் வாடிய சிவனடியார் ஒருவர் புனிதவதியாரின் வீட்டை நாடி வந்தார். கோலையூன்றி நடை தள்ளாட நடந்துவந்த அப்பெரியார், "சம்போ! சங்கரா! மகாதேவா!" என்று இயம்பிய வண்ணம் உட்கார்ந்து, "அம்மணி! பசி வருத்துகிறது; சிறிது உணவு அளிக்கவேண்டும், தாயே!" என மெலிந்த குரலில் கூறினர். "அன்னம் சமைத்தாயிற்று. மற்றப் பதார்த்தங்கள் இன்னம் ஆயத்தமாக வில்லையே. இச் சிவனடியாரோ மிக்க பசியால் வருந்துகிருர். என்ன செய்வது!" என்றெண்ணி, புனிதவதியார் சோறு படைத்து, இனிய கட்டித் தயிர் விட்டு உண்ணுமாறு வேண்டினர். சிறிது நேரத்திற்குமுன், வாணிக நிமித்தம் தன்பால் வந்த வேற்றூரார் ஒருவர் தந்ததாகச் சொல்லிக் கடையிலிருந்து தம் கணவன் கொடுத்தனுப்பிய இரண்டு மாங்கனிகளின் நினைவு வந்தது அவர்க்கு. "இரண்டில் ஒன்றினை எனக்குத் தருவார் அல்லவா! அந்த என் பங்குக் கனியை இவ்வடியார்க்குப் படைத்தால் என்ன!" எனக் கருதியவராய், புனிதவதியார் உடனே ஒரு கனியை எடுத்து வந்து சிவனடியார்க்குப் படைத்தார். "பதார்த்தம் ஏதும் இல்லையே" என்ற அவரது மனக்குறை நீங்கியது. சிவனடியாரும் வயிருர உண்டு பசிப்பிணி அகற்றிப் பின் புனிதவதியாரை வாயாரப் புகழ்ந்து வாழ்த்தி விடை கொண்டு சென்றார்.

அன்று நடுப்பகல். பகலுணவு கொள்ளும் பொருட்டுப் பரமதத்தன் வீட்டிற்கு வந்தான். புனிதவதியாரும் முறைப்படி உண்கலம் அமைத்து உணவு படைத்தார். அணங்கனையார் அன்புடன் இட்ட அன்னத்தை அகனமர்ந்து உண்டபின், தான் அன்று காலை அனுப்பிய மாங்கனியைக் கொணருமாறு கேட்டான் பரமதத்தன்.

அம்மையார் உடனே கனி யொன்றினைக் கொணர்ந்து கனிவுடன் ஈந்தார். பழத்தைப் புசித்த பரமதத்தனுக்கு, அது மிக்க சுவையுடையதா யிருந்தமையின், இன்னும் வேண்டும் என்னும் ஆசை தோன்றிற்று. "மற்றதையும் கொண்டுவா" என்றான். தாம் நினைத்ததற்கு மாறாகக் கணவன் இவ்வாறு கேட்டதும் புனிதவதியார் துணுக் குற்றார். யாதொன்றும் உரையாது உள்ளே சென்றார். அங்கே என்ன இருக்கிறது! "பழம் இல்லையென்றால் சினங்கொள்வாரோ என்னும் அச்சத்தினால் உண்மை யுரையாமல் வந்துவிட்டனே! ஆவலாய் எதிர்பார்ப்பவர் ஏமாற்றமெய்த, வெறுங் கையோடு திரும்பச் சென்று நிகழ்ந்ததை நவிலலாமெனில், 'முன்னமே ஏன் மொழியலாகாது? உள்ளே ஏன் சென்றாய்?' என வினவுவரே! அதற்கென்ன விடை தருவேன்!" எனப் பலவாறு எண்ணி மனம் கவன்றார் மாதர் மணியன்னார்; ஈசன் இணையடியே துணை எனத் துதித்தார். "அடியார் இடர் துடைக்கும் அண்ணலே! கண்ணுதற் பெருமானே! உன தடியாள் துன்பம் தவிர்த்துக் காப்பது உனது கடமை யல்லவோ!" என மனமுருக இறைஞ்சினார். என்ன வியப்பு! அம்பிகைபாகன் அருளால் அருங்கனி ஒன்று அம்மையாரின் கையகத்து உளதாயிற்று. அது கண்டு, சிவபெருமான் திருவருளை எண்ணி உள்ளம் களிகூர விரைந்து சென்று அதனைக் கணவனிடம் கொடுத்தார். அவனும் அக் கனியை ஆவலோடு புசிக்கத் தொடங் கினான். அஃது அமுதத்தினும் சுவையுடையதாயிருக்கக் கண்டான். 'இக் கனி ஏது? முன் உண்ட கனியின் இனத் தைச் சேர்ந்ததன்று; வேறொன்றே யாதல் வேண்டும்' என ஐயுற்றான். "புனிதவதி! இக் கனி என்னால் அனுப் பப்பட்ட கனிகளுள் ஒன்று அன்றே! இவ்வுலகில் எவரா லும் எய்தற்கரிய இந் நறுங் கனியை நீ எவ்வாறு

பெற்றனை? உண்மை உரைக்க" எனக் கேட்டு அவர் வாய் மொழியை ஆவலாய் எதிர்பார்த்து நின்றான் பரம தத்தன். "என்ன விடை இறுப்பது?"-குழம்பித் தத்தளித் தது புனிதவதியார் மனம். 'பரமனார் அளித்தார் எனப் பகரலாமோ! நம்புவாரோ அதனை! அது மதியணிவேணி யர் மாணருளுக்கு மாசுண்டாக்குவதாகுமே! மாறாகக் கூறத் தகுவது யாது? அஃது எதுவாயினும் பொய் யுரையே ஆகுமன்றோ? பொய்யுரை கொடியது அனைத் தினும் கொடியதாமே! அது நன் மக்கட் பண்பல்லவே. யாதாயினும் ஆகுக. உண்மை யுரைத்தலே தக்கதாம்!' எனத் துணிவு கொண்டார் தெய்வமன்னார். உற்றதனைத் தும் உரைத்தார்.

"புனிதவதி! நீ பொய்யுரை புகலாய் என அறி வேன். ஆயினும் இதனை நம்ப என் மனம் இசைந்திலது. கடவுளாவது, கனியைத் தருவதாவது! சரி; இப்பொழுது கொடுத்தவர் இனியும் கொடுக்கலாமல்லவா? மற்றுமோர் கனி தருமாறு கேட்டு வாங்கி வா, பார்ப்போம்" எனப் பகர்ந்தான். அச்சம் சிறிதும் கொண்டிலர் அம்மையார். "ஆண்டவன் என்னைக் கைவிடான். அடியார் எண்ணியதை எண்ணியவாறே ஈவோன் அவன்" என உறுதி கொண்டார். உள்ளே சென்றார். அன்புக் கடலை அகத்தே எண்ணித் துதித்தார். மறுகணமே மற்றுமோர் கனி அவரது மலர்க் கரம் வந்துற்றது. எய்திய கனியை, அருளிய பெருமானை இறைஞ்சியவாறே, இரு கரத்தேந்திச் சென்றார். "முடிவு என்னாகுமோ; காண் போம்" என ஐயுறவோடும் ஆவலோடும் எதிர்பார்த் திருந்த கணவனிடம் கொடுத்தார். ஒருபுறத்தே ஒதுங்கி நின்றார்.

பரமதத்தன் அந்த அதிசயங் கண்டு மெய்ம்மறந்து நின்றான். அத் தெய்வக் கனியின் எழிலைப் பன்முறை

நோக்கினன். தன் பிழையைப் பொறுக்குமாறு மனைவியை வேண்டினன். என்ன மாயம்! கையகத்திருந்த கனி காணப்பட்டிலது. அவன் உள்ளம் வியப்பாலும் அச்சத்தாலும் கலக்கமுற்றது. நாணம் பெரிதும் வாட்டியது. "இவள் மானிடப் பெண் அல்லள்; மனைவியாக இவளைப் பெற்றிருத்தல் தகுதியற்ற செயலாகும்" என்று எண்ணியவாறே அவ்விடத்தினின்றும் அகன்றான் பரமதத்தன்.

புனிதவதியின் தெய்வத்தன்மையைக் கண்டது முதல் அவளை இல்லாளாகக் கொண்டு இல்வாழ்க்கை நடத்த இசைந்திலது பரமதத்தன் உள்ளம். அவளை விட்டுப் பிரிதலில் பெரிதும் நாட்டங்கொண்டு நின்றது. தக்க சமயம் நோக்கியிருந்தான் பரமதத்தன். சில நாட்கள் சென்றன. வாணிக நிமித்தம் வேற்றூர் செல்ல வேண்டியிருப்பதாயும் விரைவில் திரும்புவதாகவும் போக்குக் காட்டி, காரைக்காலினின்றும் நீங்கினன்.

ஆண்டுகள் பல கழிந்தும் பரமதத்தன் வருகை நேர்ந்திலது. புனிதவதியாரும் அவர்தம் பெற்றோர்களும் உளம் வாடி வருந்தினர். சென்ற இடம் அறியாமல் அல்லல் உற்றனர். ஒரு நாள் வேற்றூரினின்றும் வந்த உறவினன் ஒருவன், நாகப்பட்டினத்தில் பரமதத்தன் மறுமணம் செய்துகொண்டு வாழ்ந்து வருவதைத் தான் கண்டதாகத் தெரிவித்தான். அது கேட்ட தனதத்தன் தன் உறவினரில் சில பெரியோரை அழைத்து, செய்தியைச் செப்பி, தன் மகளை அழைத்துச் சென்று பரமதத்தன்பால் சேர்ப்பிக்குமாறு அவர்களை வேண்டினன்.

புனிதவதியாரும் அவருடன் சென்றோரும் நாகப்பட்டினம் போய் அங்குத் தனித்த ஓரிடத்தில் தங்கி, தம் வருகையைத் தனதத்தனுக்குத் தெரிவித்தார்கள்.

சிறிது நேரத்தில் பரமதத்தன் தான் புதிதாக மணந்துகொண்ட மனைவியோடும் அவள் வயிற்றிற் பிறந்த மகளோடும் ஆண்டடைந்தான். புனிதவதியாரைக் கண்டான். கைகூப்பித் தொழுதான். மனைவியையும் மகளையும் கூட வணங்குமாறு செய்து, தானும் அவரடியில் தன் முடிபடத் தரையில் விழுந்து பணிந்தான். எதிரில் அச்சத்தோடு கைகட்டி நின்று, "அம்மணி! தங்களருளால் நாங்கள் இனிது வாழ்கின்றோம்" என்றான். புனிதவதியாருடன் வந்தவர்கள், "இது என்ன! பரமதத்தனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ! மனைவியை இப்படி ஏதோ சொல்லி வணங்குகின்றானே!" என வியப்புக் கொண்டவர்களாய், அவனை உற்று நோக்கியவாறு நின்றனர். அவர்கள் எண்ணத்தை யறிந்த பரமதத்தன், "நீங்கள் என் செயலைக் கண்டு பரிகசிப்பதும் வியப்புறுதலும் இயல்பே. இவர் பெருமையை அறியாதவர்கள் நீங்கள். இவர் என் குல தெய்வம்" எனப் பலவாறு பேசினான்.

மேலும் அவன் பேசியனவும், பின் நிகழ்ந்தனவுமே நாம் இக் கட்டுரையின் முதலில் கண்டவை.

வைணவ சமயத்தில் கோதையார் போன்று சைவ சமயத்தில் புனிதவதியார் புகழ் மிகப் படைத்தவர். பக்திச் செல்வம் சிறக்கப் பெற்ற பாவையருள் புனிதவதியார்க்கு ஒப்பாவார் சைவ சமயத்தில் வேறு எவரும் இலர். மக்கள் அனைவரும் அவரை அம்மையார் என்றே அழைத்தனர். ஆகலின், காரைக்கால் அம்மையார் என்பதே அவர் பெயராக அமைந்தது. அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவராய்த் திகழும் அவரது சீர்த்தி அளவிடற்கு அரியதாகும். "செந்தமிழ்ப் புலமைச் செல்வியாய அவ்வம்மையார், பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடிய பாக்கள், சிவ பரஞ்சுடரினது திருக்கூத்தின்

இன்ப நிலைகளை எடுத்துக் காட்டி, கற்போர் உள்ளத்தைப் பரவசப்படுத்தும் பான்மைய; இயற்கை வருணனை நிறைந்தவை; கடவுளின் இயல்புகளை விளக்கும் தத்துவார்த்தங்கள் செறிந்தவை" எனப் புகழ்வர் பெரியோர்.

ஞானச் செல்வியாகிய காரைக்கால் அம்மையார் திருவாய் மலர்ந்தருளிய நூல்கள், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திரு இரட்டைமணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்பனவாம்.

அருமை மாணவர்களே! ஞானத் தாயின் அற்புதப் பாக்களில் இரண்டொன்றினையேனும் நீங்கள் படிக்க வேண்டாவோ? மூன்று பாக்கள் கீழே தரப்பட்டுள்ளன. படித்துப் பாருங்கள். என்ன அற்புதமான பாடல்கள்! பொருள் எளிதில் விளங்கும். ஆழ்ந்த கருத்தை மாத்திரம் உங்கள் ஆசிரியரைக் கேட்டு அறிந்துகொள்ளுங்கள். கடவுள் இயல்பினைக் காட்டும் ஞானப் பொருள் நிறைந்தனவாகும் அவை:

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்— நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே,
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்?"

"அறிவானுந்தானே, அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே— அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே, விரிசுடர் பாராகாசம்
அப்பொருளும் தானே அவன்."

"அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன்— என்றுந்தான்
எவ்வுருவோன் உம்பிரான் என்பார்கட் கென்உரைப்பேன்?
எவ்வுருவோ நின் உருவம் ஏது?"

—அற்புதத் திருவந்தாதி.

6. அவைக்கு அஞ்சாத அரிவை – அம்மைச்சி

என்ன வீரம்! எத்துணை துணிவு! கற்றவர்கள் நிறைந்துள்ள கூட்டத்தில் இப்படியா கேட்பது!

கல்வியில் மிக்க புலமை வாய்ந்தவராயினும், "ஐயா! இப்போது இயம்பிய செய்யுளில் ஏதோ குற்றம் இருப்ப தாக ஓர் ஐயம் தோன்றுகிறது. மீண்டும் அக் கவியைப் படிக்கச் சொல்லுங்கள்" என்று நயமாகக் கேட்டலன்றே தகுதி? முறையும் அதுவேயல்லவா? அவ்வாறின்றி, பளீர் எனக் கன்னத்தில் அறைந்தாற்போல, "கவிராய ருக்கு மதியும் கெட்டதோ!" என்று கூறுவதென்றால், அதற்கு எவ்வளவு கல்விச் செருக்கும், அவைக்கு அஞ்சாத் தீரமும் தேவை, ஓர் பெண்பாலுக்கு!

அச் செய்யுளை இயற்றியவரோ இலக்கண இலக்கியக் களஞ்சியம். பிள்ளைத் தமிழ், கலம்பகம், அந்தாதி, உலா, கோவை முதலிய பல நூல்கள் இயற்றிப் புகழ்பெற்றவர். கம்பர், காளமேகம் போன்ற புலவர் பெருமக்களின் வரிசையில் வைத்து மதிக்கத் தகுந்த மாண்பினையுடைய வர். தமிழ் நாட்டில்,

"கவி வீரராகவன் பாடிய நற்கவியே கவி
அவனல்லாத பேர் கவி கற்கவியே",

"நாட்டுக்கிலக்கியம் கவி வீரராகவன்
நற்கவியே"

என்று பலரும் புகழுமாறு சொல்லழகும் பொருட் பொலிவும் பொருந்தப் பாடவல்ல புலவர். அவரையோ இவ்வாறு கூறுவது! மேலும் அந்தகக் கவி வீரராகவர்பால் ஓர் தனிச் சிறப்புளது. அவர் பிறவிக் குருடர்.

"என்ன! மடியில் இருத்திக் கொஞ்சிக் குலாவிப் பாலருத்திய அருமை அன்னையின் அன்பு முகத்தையும் காணும் பேறு பெருத பிறவிக் குருடரா தொல்காப்பியம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலிய பெரு நூல்களைக் கற்றுப் புலமை நிரம்பப் பெற்ருர்? எவர்தாம் இதை நம்புவர்?" - சிலர்க்கு இவ்வாறு ஐயம் உண்டாகலாம். ஆம்; தம் நிலையோடு ஒப்பிட்டு நோக்குவார்க்கு ஐயம் தோன்றுவது இயல்பே. அடங்கா ஆர்வம், உள்ள உறுதி, தளரா ஊக்கம், விடா முயற்சி, அஞ்சிக் கலங்காத் திடன் இவற்றை எய்தப் பெற்ருேர்க்கு எந்தக் காரியமும் அரியதன்று.

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?"

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."

"உனது சிறுமை நோக்கி, 'இக் காரியம் செயற் கரியது' என்று கருதித் தளர்ச்சியுற வேண்டா; முயற்சியானது அதனைச் செய்து முடித்தற்குரிய பெருமையைத் தரும்."—(தமிழ்மறை). இவ்வியல்புகளோடு உள்ளத் தூய்மையும், நல்லொழுக்கமும், நுண்ணறிவும் வாய்க்கப் பெறின் எந்தக் காரியந்தான் கைகூடாது?

புறக்கண் இழக்கப் பெற்றவராயினும் அகக்கண் நன்கு விளங்கப் பெற்றவராயிருந்த கவி வீரராகவர் கல்வி பயின்ற விதமே வியக்கத் தக்கதாகும்.

தொண்டை நாட்டைச் சேர்ந்த செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பொற்களந்தையில் பிறந்தவர் அவர். ஏந்திய புகழ் வாய்ந்த புகழேந்தியாரைப் பெற்றதும் அவ் வூரே யல்லவா! தம் ஊர்ப் பள்ளியில், முதுகில் எழுதச் செய்து எழுத்துக்களையும், பிறர் படிக்கக் கேட்டல் வாயிலாகச் சிறு சிறு நூல்களையும் கற்று, மேலும் நூற் பயிற்சியினிமித்தம் அண்மையிலுள்ள காஞ்சிபுரத்திற்குச் சென்றார் அந்தகர் வீரராகவர். தாம் விரும்பிய காலத்துப் படிக்கக் கண்ணுகை ஓர் மாணவனையும் உடன் கொண்டு சென்றார். தகுந்த ஆசிரியரை யடுத்துப் பாடம் கேட்டு வந்தார். மீண்டும் மாணவன் வாசிக்கக் கேட்டு, கேட்டவற்றை விடாது உள்ளத்தமைத்துக்கொள்வதில் வல்லவரா யிருந்தமையின் அவருக்கு எல்லா நூல்களும் மனப் பாடமாயின. 'வைத்ததொரு கல்வி மனப் பழக்கந்'தானே? கவி பாடவும் பழகினார். பெருங்காப்பியங்களையும் மிக எளிதில் பாடும் திறமையும் அவருக்கு உண்டாயிற்று. அந்தகர் ஒருவர் கல்வி கற்ற முறை மிக்க வேடிக்கையா யிருக்கவில்லையா? இதோ! இவ்வுண்மையைக் காட்டும் வாக்கியங்கள்:

> "ஏடாயிரங் கோடி எழுதாது தன் மனந்து
> எழுதிப் படித்த விரகன்
> கவி வீரராகவன் விடுக்கும் ஓலை."

இதனை இயம்பியவர் அவரே.

> "கவி வீரராகவன் கச்சியிலே தன்நெஞ்சம் ஏடெனக்
> கற்று ஹெருமுத் தமிழையுமே."

பிறர் கூற்று இது.

இன்னம் ஐயமா! 'அந்தகக் கவி வீரராகவர்' என்றே அவர் பெயர் வழங்கலாயிற்று.

அவர் செய்த நூல்கள் பல. சந்திரவாணன்கோவை என்பது அவற்றுள் ஒன்று. காஞ்சிபுரத்தில் அதனை அரங்கேற்றினர். கற்றோரும் மற்றோரும் குழுமியிருந்த அரங்கேற்றவையில் மாணாக்கன் ஒருவன் கையேடு பிடித்துக் கவிகளைப் படித்துவர, அவற்றின் பொருளைக் கூறிக் கொண்டிருந்தார் கவிராயர். அப்போது,

"மாலே நிகராகும் சந்திரவாணன் வரையிடத்தே
பாலேரி பாயச் செந்தேன் மாரி பெய்ய நற்பாகு கற்கண்
டாலே யெருவிட முப்பழச் சேற்றி னமுதவயல்
மேலே முளைத்த கரும்போ இம்மங்கைக்கு மெய்யெங்குமே"

என்ற ஓர் செய்யுளை மாணவன் படித்தான். உடனே திடீரென்று, "கவிராயருக்குக் கண்தான் கெட்டது; மதியும் கெட்டதோ!" என்று மேலே குறிப்பிட்ட குரலொலி தோன்றியது. துணுக்குற்றார் புலவர். குரலின் ஒலியால் அவ்வாறு வினவியவர் ஓர் பெண் என்றுணர்ந்தார். ஆம்; ஓர் அம்மையாரே அவர். சிறிது திகைத்தார். "யாவர் இவ்வாறு இயம்பியவர்?" என்றார் பெருமிதத்துடன் ஒலி பிறந்த திக்கை நோக்கி.

"எவராயினும் என்? அப்பாடலில் பிழை உளது. மற்றும் ஓர் முறை அதனைக் கூறுக" என்றனர் அவ்வம்மை, அஞ்சா நெஞ்சுடன். ஏடு படிப்போர் மீண்டும் அதனைப் படிக்கலாயினர். அதில், "எங்கே என்ன பிழை உளது? காண்போம்" எனக் கூர்ந்து பார்த்து வந்தனர் பாவலர்; மாணவர் படித்து முடிக்குமுன், தம் நுண்ணுணர்வால் பிழையை அறிந்துகொண்டார். "தம்பி! கொம்பை வெட்டிக் காலை நட்டுப் படி" என்றார். அவரும் ஆசிரியரின்

குறிப்பைத் தெரிந்துகொண்டு, அவ்வாறே செய்து கவியைப் படித்தார். புன்முறுவல் பூத்த முகத்தோடு, "பிழை நீங்கியது; பொருள் பொருத்தமுற்றது" என்று இன்சொல் இயம்பி அமர்ந்தார் அவ்வம்மையும்.

"இஃதென்ன, ஒன்றும் விளங்கவில்லையே! விடுகதையாக அல்லவோ இருக்கிறது!" என்று அங்குக் கூடியிருந்தவர்கள் விம்மிதமுற்றுக் கவிவேந்தரை வினவினர். "முற்கூறிய பாட்டில் மூன்ருவது அடியில், 'சேற்றில் முளைத்த கரும்போ' எனக் கூறப்பட்டுள்ளது. அது தவறு. ஏனெனில், கரும்பானது நல்ல விளைநிலத்து முளைப்பதாயினும் சேற்றில் முளைப்பதல்ல. ஆகலின் இங்கு, 'சேற்றில் முளைத்த கரும்போ' எனக் குறிப்பிட்டது என்னையுமறியாமல் நேர்ந்துவிட்ட குற்றம். ஒரு முறை படிக்கக் கேட்டவளவில் அந்தப் பிழையைக் கண்டு அறிவுறுத்திய இம் மெல்லியலாரின் கல்வித் திறன் சாலப் போற்றத்தக்கதாகும்' எனப் பலவாறு புகழுரைகளால் அவ்வம்மையை வாழ்த்தினர் கவிப்புலவர். ஆண்டிருந்தாரனைவரும் அவரது புலமையை வியந்து மெச்சினர். அந்த நாள்தொட்டுக் கல்விச் செல்வர்களாகிய அவ் விருவரும் பெரு நட்புக் கொண்டு கச்சியம்பதியில் வாழ்ந்துவந்தனர்.

அந்த அம்மை யார்? அவர் பெயர் என்ன? இதுகாறும் அதை அறிந்துகொள்ளாமலே பேசிக்கொண்டிருக்கிருேமே! ஆம், அம்மைச்சி என்பது அப்பெண்மணியின் பெயர். காஞ்சிவாசி; தாசி வகுப்பினர். செந்தமிழ்ப் புலமைச் செல்வியாக விளங்கியவர். நன்னெறி தவருத நங்கை. கல்விச் செருக்குடன் பிறரை மதியாத் தன்மையும் உடையவர் என்று தெரிகிறது. அவரைப் பற்றிய வேறு வரலாறு ஒன்றும் அறியக்கூடவில்லை.

அம்மைச்சியின் கல்வி மேம்பாட்டையும் தருக்கையும் கண்டு அவர்பால் அழுக்காறு கொண்டிருந்தனர் வரதராசப் பெருமாள் கோயில் பார்ப்பனர் சிலர். தாழ்ந்தவராகத் தம்மால் எண்ணப்படுவோர் எவரேனும் சிறிது உயர்நிலை எய்தின், அது கண்டு பொருது மனம் புழுங்குவதும், அவர்களுக்குக் கேடு சூழ முயல்வதும் இழிகுண மாந்தரின் இயல்பேயாகுமன்றோ!

அம்மைச்சியின் வீடு பெரிய வீதியில் இருந்தது. எவ்வாறேனும் அவ்வீட்டை இடித்துத் தள்ளி அவரை அவ்விடத்தினின்றும் துரத்தல் வேண்டும் என்று முடிவு கட்டிய பொறாமையாளர், வரதராசர் திருவிழாக் காலத்தில் ஊர்வலம் வந்த பெரிய தேரைத் தம் சூழ்ச்சியால் அவ் வீட்டில் முட்டவிட்டனர். ''காஞ்சிபுரம் தேர்'' என்றால் சொல்லவா வேண்டும்! மிக்க உயரமும் பருமனும் உள்ள அது போன்ற தேரை எங்கும் காண்டல் அரிது. (இப்போது குறைக்கப்பட்டுவிட்டது.)

"எடுங்கள், பிடியுங்கள்! வீட்டை இடிக்கவேண்டும்! ஆ! ஊ!'' என ஆரவாரித்தனர். அது கண்ட அம்மைச்சி செய்வதொன்றும் அறியாமல் கவிவீரராகவர்மாட்டுக் கூற, அவர் அங்குச் சென்று,

''பார்ப்பார் குரங்காய்ப் படையெடுத்து வந்தீரோ
தேப்பெருமா ளேகச்சிச் செல்வரே — கோப்பாகக்
கொம்மைச்சிங் காரலங்கைக் கோட்டையென்று வந்தீரீது
அம்மைச்சி வாழும் அகம்.''

"பெருமாளே! பார்ப்பனராகிய குரங்குப் படையோடு வந்தீரே. இலங்காபுரிக் கோட்டை என்று எண்ணியோ இதை இடிக்க வந்துவிட்டீர்! இல்லை, இல்லை! இலங்கைக்

கோட்டையல்ல இது இஃது அம்மைச்சியின் வீடு" என்று வசைக்கவி ஒன்று பாடினர். அப்பாடலைச் செவி யுற்றதும் அவர்கள் வெள்கித் தங்கள் எண்ணத்தைக் கைவிட்டுப் போயினர். அம்மைச்சியும் அகமகிழ்ச்சி கொண்டு இனிது உறைந்தனர்.

"பெரும்புலவர் பாட்டிலும் குற்றம் காணும் அளவிற் குத் தமிழ்நாட்டுப் பெண்மணிகள் கல்வி கேள்விகளில் சிறந்திருந்தனர்" என்பதற்குச் சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் இருந்த அம்மைச்சியின் வரலாறு ஓர் எடுத்துக்காட்டாகும்.

மாதர்க்கும் இன்றியமையாது வேண்டப்படுவன வாகிய கல்வி, கடமை, உரிமை முதலியவற்றைத் தரச் செந்தமிழ் நாடு எக்காலத்தும் மறுத்ததில்லை. உண்மை நாகரிகத்தைத் தன் வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்ட தமிழ்நாடு, மக்கள் தொகுதியின் ஒரு பகுதியின ராகிய பெண்பாலார்க்கு, நாகரிகத்தின் கூறுபாடுகளாக வுள்ள கல்வி முதலியவற்றை யளிக்க மறுக்குமோ! மறுக்கின், அது நாகரிக நாடு என்னும் மதிப்புரைக்கு எங்ஙனம் உரியதாகும்?

"முற்காலத்தில் இந்நாட்டில் பெண்கள் கல்வியறி வற்றவர்களாகவே இருந்தனர். கல்வி கற்க விடாமல் ஆண்மக்கள் அவர்களைத் தம்மினும் தாழ்ந்தவர்களாகக் கருதி அடிமைகளைப்போல அடக்கி ஆண்டு வந்தனர்" எனப் பலர் இதுபோது ஏளனமாகப் பேசுவர். அது சரி யன்று. ஏறத் தாழ இருநூறு ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தை முற்கால மெனவும், அதற்குப் பிற்பட்ட காலத்தை இடைப்பட்ட காலமெனவும் கொண்டு இதனை ஆராய்தலே நேரிது. அங்ஙனம் ஆராயின், அந்த இடைக் காலத்தில் அரசியல் மாறுதல்களால் நிகழ்ந்த குழப்பங்

களின் காரணமாக, மாதர் அச்சமின்றி வெளியில் செல்லவும் கூடாத நிலைமையும், மாந்தர் ஓரிடத்தேனும் நிலைத்த வாழ்க்கையராகாமல் இடம் விட்டு இடம் மாறும் நாடோடிகளாக அலையத் தக்க நிலைமையும் நேர்ந்தமையின் இக்குறைபாடுகள் விலக்க இயலாதனவாயின என்பது புலனும். ஆகவே, தமிழ் நாட்டில் ஆண்களையொப்ப, பெண்களும் கல்வியும் சுதந்தரமும் உரிமையும் வீரமும் உடையவர்களாகவே முற்காலத்தில் திகழ்ந்தார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை என்று கொள்வதே ஏற்புடைத்தாகும். ஏன்?—இன்னம் பெண்டிரை ஆடவர் தம்மினும் உயர்ந்தோராக மதித்து வந்தனர் என்றும், குடும்பங்களில் மாதர்கள் முடிசூடா அரசிகளாக விளங்கினர் என்றும் கூறுவதே தமிழ்நாட்டுப் பெண்களின் முற்காலத்து உண்மை நிலையைக் குறிப்பதாகும்.

"பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பது போல, அம்மைச்சியின் வரலாறு அமைந்திருக்கவில்லையா?

7. மதம் அழியாமல் காத்த மங்கையர்க்கரசியார்

செந்தமிழ்ப் புலமைச் செல்வியார் எனத் தகும் சிறப்பு வாய்ந்த மங்கையர்க்கரசியாரின் மாண்பினைத் தமிழுலகம் நன்கு அறியும். அஞ்சா நெஞ்சும், நீதிவழுவா நேர்மையும், தலைசிறந்த சமயப் பற்றும், களங்கம் அற்ற தூய உள்ளமும், நூல் ஆராய்ச்சித் திறனும் உடைய சோழன் குலக் கொழுந்தாகிய அந்த மங்கை நல்லாளின் அருஞ் செயலன்றோ தமிழ் நாட்டில் சைவ சமயம் அழிந்து படாமல் அந்நாளில் காத்தது!

தமிழ்நாட்டில் சைவம், வைணவம் என்னும் இரு பெருஞ் சமயங்களே முன்னுளில் பெரும்பான்மையோரால் கைக்கொள்ளப்பட்டு வந்த சமயங்கள். பின்னர்ச் சமணம் மெல்லத் தலைகாட்டத் தொடங்கியது. அச் சமயத் துறவிகள் பள்ளிகளையும் பாழிகளையும் ஆங்காங்கு அமைத்துக்கொண்டு, தங்கள் சமயத்தைப் பரப்புவதில் முனைந்து நின்றனர். அவர்கள் முயற்சி பயன் தராமற் போகவில்லை. அச்சமயத்தில் புகுவோர் தொகை நாளுக்கு நாள் பெருகுவதாயிற்று.

பாண்டிய நாட்டை ஆண்டுவந்த மாற பாண்டியன் சமண முனிவர் போதனையின் உணர்ச்சியால் ஆட் கொள்ளப்பட்டான். நன்மை தீமைகளை ஆராய்ந்து உண ரும் பகுத்தறிவின் ஒளி மங்கியது; சமண சமயத்தைத் தழுவினன். வைதிக சமயமாகிய சைவ சமயத்தைத் துறந் தான்.

மன்னவன் நெறி தவறிச் செல்லின் அங்ஙனம் செல்லவிடாது தடுத்துச் செந்நெறிப்படுத்தல் அமைச்சர் முதலானோர் கடமை. "அவ்வாறு, இடித்து உரைப்பாரைப் பெற்றிராத அரசன், 'பாகன் இல்லாத யானை போல்' நெறியல்லா நெறிச் சென்று தானே கெடுவான்"என்பது மறைமொழி. வேந்தன் வெகுண்டு ஒறுப்பினும் பின்னி டாது தம் கடமையில் ஊன்றி நிற்கும் மனத்திட்பம் உடையோரே அவ்வாறு செய்ய வல்லவராவர். ஆனால், இக் கடமை உணர்ச்சி எல்லோரிடத்தும் எதிர்பார்க்கக் கூடியது அன்று. தந்நலத் தியாகிகள் மாட்டே இது காணப்படுவதாகும். அங்ஙனமின்றி, பிறர் நலம் கருதாது தந்நல நோக்குடையோர், மன்னவன் மனம் மகிழுமாறு இச்சகம் பேசி, தம் பயன் கொளவே விழைவதன்றி, அவன் வெகுளிக்குப் பாத்திரராகச் சிறிதும் துணியார். ஆகலின், பாண்டியனைச் சூழ்ந்துள்ள தந்நல நாட்டம் கொண்ட அரசியல் ஆயத்தாரும் மன்னனை மகிழ்வித் தலையே பொருளாகக் கருதி, அவனைப் பின்பற்றிச் சமண சமயம் புக்கனர். இனி ஏனைய குடிமக்களைப்பற்றிக் கூறுவானேன்!

பாண்டி நாட்டில் தனிச் செங்கோல் ஓச்சி வந்த சைவ சமயம் பறந்தோடியது. சமண சமயமே யாண்டும் பரந்து நின்றது. இந்நிலையில், "கொற்றவன் சீற்றத்தால்

யாது விளையினும் விளைக!" என, அன்பு நெறி நின்று எதிர்த்துப் பொருது பாண்டிய நாட்டையும் அதன் காவலனையும் உய்விக்கத் துணிவுகொண்டு நின்ற வீரப் பெருமக்கள் பங்கயச் செல்வியாம் மங்கையர்க்கரசியும் அவரைத் துணை செய்யும் புணையெனக் கொண்ட அமைச்சர் குலச்சிறையாருமே ஆவர்.

"கணவன் சொல் கடவாமல் ஒழுகுதலே கற்புடைய மாதர் கடமை: ஆடவர் ஆணையை மறுப்பது அரிவையர்க்கு அடுக்குமோ?" என்று எண்ணி வாளா இருந்தனரோ மங்கையர்க்கரசியார்? இல்லை, இல்லை! அவ்வாறு இருப்பது அவர் தம் கடமையினின்றும் தவறியதாகுமே. அல்வழிச் செல்லும் ஆடவரை அறவுரையால் நல்வழிப் படுத்தும் பெரும் பொறுப்பைப் பெண்டிர்க்கே உரியதாக்கி மகிழ்ந்த இந்த நாட்டில், அங்ஙனம் வாளா கிடத்தற்கு மகளிர் அடிமை வாழ்க்கையினர் அல்லரே.

"அரசர் பெரும! தாங்கள் செய்யத் துணிந்தது தக்கதோர் செயலன்றே. அறிவுடையோர் வெறுக்கும் இக் காரியத்திற்குத் தங்கள் உள்ளம் இசைந்ததும் வியப்பே. வேண்டா! கல்வியிலும், அறிவிலும், சமய ஆராய்ச்சியிலும் வல்லுநராகிய நம் முன்னோர்களை அவமதிப்பதாகிய இக்காரியத்தைக் கைக்கொள்ளாமல் இருக்குமாறு தங்களைப் பணிவுடன் வேண்டுகின்றேன். இந்த எனது வேண்டுகோளைப் புறக்கணிப்பது என் மனத்தைப் பெரிதும் புண்படுத்துவதாகும் வாழையடி வாழையாக வழங்கி வரும் ஒப்பற்ற நமது சமயத்தில் நீங்கள் கண்ட குறைபாடு யாது? எவ்வாற்றால் சமண சமயம் ஏற்றமுடையதெனக் கொண்டீர்கள்?"

சமண சமயத்தில் புகாதபடி தடுக்கப் பாண்டிமா தேவியார் மொழிந்த இம் மாற்றங்களால் மாறவழுதி சிறிதும் மனம் மாறப் பெற்ருன் இல்லே. அதனுல் மாதரசியாரின் உள்ளம் வெதும்பியது. கண்களில் நீர் பெருகியது. என் செய்வார், பாவம்! "அந்தோ! அறியாமையால் அரசன் இழைத்த இத்தவறு நாட்டையே பாழ்படுத்துமே! மாசற்ற பாண்டிய குலம் பழிக்குள்ளாக நேர்ந்ததே! எம்பெருமானே! நீதான் எமது இறைவனேயும் நாட்டையும் காத்தருளவேண்டும்" என, ஆலவாய் அமர்ந்த அவிர்சடை அண்ணலே வழுத்தினர். பின்னரும் அவர் பார்த்திபனே நோக்கி, "வெற்றி வேல் கொற்றவ! தங்கள் விருப்பம் இதுவாயின் அடியாள் செய்யத் தகுவது யாது? எனினும், எனது வேண்டுகோளுக்கும் சிறிது செவிசாய்த்தருள்க. நமது சமயத்தின்பால் எனக்கு உளதாகிய பற்று என்றும் என்னே விட்டு விலகுவதன்று. சமண சமயமோ வேறு எச் சமயமோ, என் உள்ளத்தில் இடம் பெருது. ஆகலின், யான் பெரிதும் விரும்பிப் போற்றும் சைவ சமயத்தையே கைக்கொண்டு ஒழுக அன்போடு என்னே அனுமதியுங்கள். நெறிமுறை பிறழும் செயலில் ஈடுபடுமாறு என்னே வற்புறுத்தல் வேண்டா. தங்கள் கருத்தோடு மாறுபாடு கொள்ள நேர்ந்தமைக்கு உண்மையாகவே வருந்தும் என்னே மன்னிப்பீராக" எனக் கூறிச் சென்ருர். கருத்து வேறுபாட்டின் காரணமாக அவ்விருவரும் ஒருவர்மாட்டொருவர் வெறுப்போ பகைமையோ கொண்டிலர்.

ஒன்ரேடு ஒன்று ஒவ்வா இரு வேறு வகைப்பட்ட சமய நெறிகள் அரசன் அரசியரது இன்ப அன்பு வாழ்விற்கு இடையூறு விளேத்தில. மற்றெல்லா வகையானும் கருத்து ஒருமித்த அவர்களின் காதல் வாழ்க்கைத் தாணி இனிது நீந்தியவண்ணம் இருந்தது. எனினும்,

செந்தமிழ் நாட்டின் அவல நிலைமை பாண்டிமாதேவியின் உள்ளத்தை மிக்க கவலைக்குள் ஆழ்த்தியது. நாட்டிற்கு நேர்ந்த சிறுமையைத் தீர்க்கும் நெறிகளைக் காண அவர் பெரிதும் அவாக் கொண்டார். தாம் மேற்கொண்ட தொண்டில் பங்கு கொள்ளுமாறு அமைச்சர் குலச்சிறை யாரையும் தூண்டினர்.

சின்னாட்களுக்குப் பின்னர்ச் சிவனடியார் சிலர் வாயிலாகத் திருஞான சம்பந்தரின் பெருமை குலச்சிறையாருக்கு எட்டியது. ஓதற்கரிய உயர்ஞானச் செல்வராகிய சம்பந்தப் பெருமான் என்னும் கதிரவன் தோன்றின் சமண சமயமாகிய காரிருள்தொலையும் என்று எண்ணினர் அவர். அரசியார்க்கும் தம் கருத்தைக் கழறினர். அந்நற் செய்தி செவிப்பட்ட அளவில், அரசியார் கண் பெற்ற குருடன்போலக் களிப்பு மிகப் பெற்றவராய், அப்பெருமானை எவ்வாறேனும் அழைத்து வருமாறு அமைச்சரை வேண்டிக்கொண்டார். அவரும், அதற்கு இசைந்து அப்பெருமான் எங்கு உள்ளார் என வினவி, திருமறைக் காட்டில் இருப்பதாக அறிந்தார். சமணர்களால் நாட்டிற்கு உண்டான தீங்கினைக் குறிப்பிட்டு, அதனைப் போக்க இங்கு எழுந்தருளவேண்டும் என விண்ணப்பத் திருமுகம் ஒன்று வரைந்து விடுத்தார்.

திருமுகம் கண்ட சீகாழிப் பிள்ளையார் அடியார்கள் புடைசூழ எழுந்தருளிப் போந்து மதுரையம்பதியை நண்ணினர். சிவஞானச் செல்வரின் வருகையை அறிந்த அமைச்சர் விரைந்தோடிச் சென்று சேவடி பணிந்து நல் வரவு கூறி வரவேற்றார். கோப்பெருந்தேவியும் ஆண்டடைந்து, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான வேந்தரைக் கண்குளிரக் கண்டார். பக்திவெள்ளம்பெருக்

கெடுப்பது போல் கண்கள் நீர் பெருக்க, இரு கை கூப்பி இறைஞ்சி, ஒருபுறம் ஒதுங்கி நின்ருர். செந்தாமரைச் செல்வி போன்ற பாண்டிமா தேவியாரின் சிவபக்திப் பொலிவும் அவரது தொண்டின் சிறப்பும் கண்ட சம்பந்தர் வியப்புற்று,

"மங்கையர்க் கரசி!
வளவர்கோன் பாவை
வரிவளைக்கை மடமானி!
பங்கயச் செல்வி!
பாண்டிமா தேவி!"

என, உளம் கனிந்த அன்புடன் வாயாரப் புகழ்ந்தார். அமைச்சர் அமைத்திருந்த விடுதியில் அடியவர் குழாத்துடன் சென்று தங்கினர்.

திடீர் என வேந்தனை வெப்புநோய் தோன்றி வெதுப்பலாயிற்று. நோயின் கொடுமையைத் தாங்கலாற்ருது தவித்தான் பாண்டியன். அலறினன்; புரண்டான்; கூவினன். அரண்மனையில் உள்ளார் அனைவரும் அங்குத் திரண்டனர். அரசியாரும் அரசனை அணுகினர். அமைச்சரும் ஓடினர். சமண முனிவர்கள் இறைவன்பால் சென்று கூடினர். "அரசர் ஏறே! அஞ்சற்க. கொடிய இப் பிணியை நொடியில் ஒழிப்போம்" எனத் தேற்றினர். மயிற் பீலி கொண்டு அவனது உடலில் தடவினர். மந்திரம் ஓதினர்; கற்ற வித்தையெல்லாம் காட்டினர். என்ன செய்தும் என்ன? நோய் மிகுந்ததே யன்றித் தணிந்திலது. நோயின் வெம்மையால் வெதும்பும் வேந்தன் அம் முனிவர்கள்பால் வெறுப்பும் சீற்றமும் கொண்டான். "எனது நோயைப் போக்கும் ஆற்றல்

நீவிர் பெற்றிலீர்; விலகிச் செல்லுமின்'' என வெகுண்டான்.

அந்நிலையில், அரசியார் சிவனடியாராகிய திருஞான சம்பந்தர் மகிமையை எடுத்தியம்பி, "அவரே இப்பிணியைப் போக்கவல்லார்'' எனவும் பகர்ந்தனர். "அவரை அழையுங்கள்'' என ஆர்வத்தோடு கூவினன் மன்னவன். உடனே, குலச்சிறையார் விரைந்து ஓடி, வேண்டி, சம்பந்தரை அரசன்மாட்டு அழைத்துச் சென்றார். அப்பெரியாரது திருநோக்குப்பட்ட அளவில் வெப்புநோயின் வேகம் தணிவதாயிற்று. ஆண்டவன் அருள்பெற்ற அடியார்களின் பெருமை அளவிடற்கரியதன்றோ! வழுதியின் உடல் குளிர உள்ளமும் குளிர்ந்தது. முகம் மலர்ந்தது. கைகளைக் கூப்பி ஞான வள்ளலை இறைஞ்சினன் இறைவன். அது கண்டு தாங்காத சமணர்கள், "இச் சிறுவனை வாதினல் வெல்லுவோம்'' என விருது பேசி ஆர்ப்பரித்து எழுந்தனர். வாதம் பல செய்தனர். அனைத்தினும் தோல்வியுற்றனர். சம்பந்தரே வெற்றி கண்டார். சமணர்கள் நாணித் தலை வணங்கப் பெற்றனர். அரசனும் அவர்களைப் புறக்கணித்தான். அதனல் அவர்கள் மதியிழந்து வாயிழந்து திசை தெரியாது ஓடி ஒளிந்தனர்.

"அண்ணல்! அடியேன் அறியாமையால் இழைத்த பிழையைப் பொறுத்து அருள்புரிக'' என வேண்டினன் வேந்தன். சம்பந்தர் திருநீறு அளிக்க, பாண்டியன் அதை வணங்கி வாங்கி நெற்றியில் அணிந்து சைவசமயச் சார்பினன் ஆயினன். பாண்டிய நாடு சமண் இருள் அகல, சைவ ஒளி பரவிப் பண்டுபோல் பொலிவுற்று விண்ணுடொப்ப விளங்கியது. மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை அமைச்சரும் கவலைக் கடலினீங்கிக் களிப்புக் கடலில் மூழ்கினர்.

புரட்சிகரமான வீரச் செயலால் தமிழ்நாட்டிற்கு நேர்ந்த தீமையை விலக்கிக் காத்த மங்கையர்க்கரசியாரின் கீர்த்தி எங்கும் பரவியது "தமிழ் நாட்டைக் காத்த தாய்" எனவும், "சைவ சமயம் தழைக்கச் செய்த தெய்வம்" எனவும் எல்லோரும் அவரை மனமார, வாயாரப் புகழ்ந்து வாழ்த்தினர்.

முதுகு சிறிது வளைந்திருந்தமையால் கூன் பாண்டியன் என்று அழைக்கப்பெற்ற மாற பாண்டியன் திருஞான சம்பந்தரின் திருவருளால் கூன் ஒழிந்து நின்ற சீர் நெடு மாறன் ஆயினன். எங்கும் சைவம் தழைத்தோங்கவும், திருநீற்றின் ஒளி விளங்கவும், சிவபக்தி அடியார் பக்திகளில் சிறந்து, அமைச்சர் குலச்சிறையாரின் துணையால் நாட்டை நல்ல முறையில் பாதுகாத்து வந்தான்.

மங்கையர்க்கரசியாரின் இந்த வரலாறு, முற்காலத்தில் தமிழ் நாட்டுப் பெண்டிர் கல்வியிற் சிறந்தவர்களாய், வீரம், உரிமை, சுதந்தரம் முதலிய பண்பாடுகளுடன், சீரிய வாழ்க்கை பெற்றிருந்தனர் என்பதைப் புலப்படுத்துவதாக உள்ளது அல்லவா? அன்றியும், அவர்கள் தெய்வமாகப் போற்றப்பட்டு வந்தனர் என்பதையும் இவ் வரலாறு உணர்த்துகின்றது. திருத்தொண்டர் புராணம் இயற்றிய தெய்வப் புலவராகிய சேக்கிழார், அவ்வரசியாரை அன்பு வெள்ளம் கரைபுரண்டோட உள்ளமுருகி, "எங்கள் தெய்வம்" எனப் பாடிப் பரவியிருப்பதைப் பாருங்கள்.

"மங்கையர்க்குத் தனி அரசி எங்கள்தெய்வம்,
வளவர்திருக் குலக்கொழுந்து, வளைக்கைமானி,

செங்கமலத் திருமடந்தை, கன்னிநாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை,

எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ்நாடு உற்றஇடர் நீக்கித்தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்றல்ஆமே!"

(வளவர்-சோழ அரசர்; கன்னி நாடு-பாண்டிய நாடு; தென்னர்-பாண்டிய மன்னர்; சண்பையர்கோன்-சம்பந்தர்; கழல்-பாதங்கள்.)

8. கணவனுடன் தீப் பாய்ந்த கனிமொழியாள்

பூத பாண்டியன் செந்தமிழ்ப் பாண்டிய நாட்டை ஆண்ட பாண்டிய மன்னர் மரபினனான ஓர் அரசன். அவன் குடிகளை ஒரு குறையும் நேராதவாறு காப்பதில் கண்ணுங் கருத்தும் உடையவன். செங்கோலினன். வீர உணர்ச்சி மிக்கவன். பகைவரைப் போரில் அஞ்சாது எதிர்த்து வெல்லும் ஆற்றல் பெற்றவன். கல்வியில் தேர்ந்த புலமை வாய்ந்தவன். சிறந்த பாடல்கள் இயற்றும் திறனும் அவனுக்கு இருந்தது. ஒல்லையூர் என்னும் இடத்தைப் பகைவரை வென்று கைப்பற்றினமையின் ஒல்லையூர் தந்த பூத பாண்டியன் எனவும் அவன் அழைக்கப்பட்டான்.

புகழின் மிக்க அந்தப் பூத பாண்டியன் மனைவி பெருங்கோப் பெண்டு, பொற்பும் கற்பும் பொருந்திய மாதர் மணி; கணவனோடொப்பக் கல்வி நலனும் கவிபாடும் திறனும் கொண்ட கவியரசி. புலவர் பெருமக்களால்

நன்கு மதிக்கப்படுபவர். மானத்தை உயிரினும் ஓம்பும் உயர் பண்பினர். கணவன்பால் கரையற்ற காதல் உடையவர்.

அழகிலும் கல்வியிலும் அறிவிலும் அன்பிலும் ஒத்த பண்பாடு உடையார் இருவர், கணவனும் மனைவியுமாகக் கலந்து வாழும் காதல் வாழ்க்கை யல்லவா இன்ப வாழ்க்கை! பூத பாண்டியனும் அவன் தேவியாகிய பெருங் கோப் பெண்டும் ஈருடலுக்கு ஓருயிர்போல, உளம் ஒரு மித்த அன்புடையோராய், துறக்க வாழ்வும் வெறுக்கத் தக்கதாம் என்னுமாறு சிறக்க இன்ப வாழ்வில் திளைத் திருந்தனர்.

எத்தகைய வாழ்வும் - இன்ப வாழ்வோ, துன்ப வாழ்வோ-நெடுங்காலம் நிலைபேறுடையதாக இருத்தல் இல்லையே. மாறுபடும்- அழியும்- இயல்பினதே. இதுவே உலக நியதி. எதிர்பாராவண்ணம் சில நாட்களாகக் கொடு நோய் பற்றி வருத்தியது பூத பாண்டியனை. பல்லாற்ருனும் முயன்றும் அஃது எவ்வகையாலும் நீங்காமல் முடிவில் அவன் உயிரையே உடலினின்றும் நீக்கிவிட்டது. இணைபிரியாத காதலியைத் தனியே தவிக்கவிட்டுச் சென்ருன் பூத பாண்டியன், பாவம்!

அன்புருவாய ஆருயிர்க் காதலனைப் பிரிந்து எவ்வாறு உயிர் தரித்திருப்பாள் அம்மாதரசி! அழுவதால் பயன் யாது? கணவனுடன் தீயில் விழுந்து உயிர் துறத்தலே தக்கதாம் என உறுதிகொண்டார். அதுகாலை அருகி லிருந்த மதுரைப் பேராலவாயர் முதலிய புலவர்கள் பெருங்கோப் பெண்டின் துணிவு கண்டு துணுக்குற்றனர். தம்மை யொத்த பெரும் புலமை வாய்ந்த மெல்லியலா ரைத் தமிழுலகம் பெருப் பேருகப் பெற்று வைத்தும்

இழக்க நேர்ந்ததே என வருந்தினர். இரு பெரும் புலவர்களை ஒருசேர இழப்பதென்றால் எவர் உள்ளந்தான் உருகாது! செந்தமிழ்ப் புலமைச் செல்வியாகிய அரசியை எங்ஙனமேனும் தீப் பாய விடாமல் தடுத்தல் வேண்டும் எனத் தீர்மானித்து, "அம்மையே! வேண்டா. உமது துணிவு கடிது! தீப் பாய்தல் ஒழிக. எமது வேண்டுகோளை மனங் கொள்க" எனக் கூறித் தடுத்தனர். அங்ஙனம் தம்மை விலக்கிய அறிஞர்களை நோக்கிப் பின்வருமாறு (பாடலாகக்) கூறினார் செந்தமிழ்ச் செல்வி.

"உன் கணவனோடு நீயும் செல்க எனக் கூற வேண்டிய நீங்கள் அங்ஙனம் கூறாது, 'வேண்டா' என விலக்குகின்றீர்களே! எனது நிலையை நன்கு ஆராய்ந்தறியாத அறிஞர்களே! கணவனை இழந்தவள் கைக்கொள்ள வேண்டிய கைம்மை நோன்பின் தன்மையை நீங்கள் அறியீர்களோ! அணிலினது வரிபோலும் வரியையுடைய வளைவான வெள்ளரிக்காயை அரிந்து இடப்பட்ட விதைகள் போன்ற, தண்ணீரிலிருந்து பிழிந்தெடுத்த சோற்றுருண்டைகளை எள்ளின் துவையல், புளியிட்டு வேகவைத்த வேளைக் கீரை இவற்றோடு உண்டு, பாயில்லாமல் பருக்கைக் கற்களின்மீது படுத்து உறங்குதல் வேண்டுமே! இவ்விதத் துன்ப வாழ்வை நான் அடையவேண்டும் என்பதோ உங்கள் விருப்பம்! அவ்விதக் கைம்மை நோன்பால் வருந்தும் பெண் அல்ல யான். பருத்த கட்டைகளால் அடுக்கப்பட்ட இப் பிணப் படுக்கை உங்களுக்குத் துன்பம் தருவதாகலாம்; ஆனால் எனக்கு, பெரிய தோள்களையுடைய எனது கொழுநன் இறந்துபட்டானாக, இதழ்கள் விரிந்த தாமரை மலர்கள் நிறைந்த குளிர்ந்த பொய்கை போல இத்தீயும் குளிர்ச்சியாகவே இருப்பதாம். ஆதலின், என்னைத் தடுத்தல்

வேண்டா” எனக் கூறியவாறே தீயில் பாய்ந்து உயிர் துறந்தார்.

அதுகண்டு புலவர்கள் அடங்காத் துயரமும் வியப்பும் கொண்டனர். கைம்மை நோன்பின் கொடுமையை வெறுத்தனர். அரசியார் தம் காதலன்மாட்டுக் கொண்டிருந்த அன்பின் பெருக்கையும், சுடு தீயையும் தண்புனலெனக் கொண்டு தீயில் குதித்த பெருமையையும், அவரது கற்பின் மாண்பினையும் எண்ணி எண்ணிப் பலவாறு புகழ்ந்து, கையறு நிலையினராகப் புலம்பிச் சென்றனர்.

மாணவர்களே! அம்மெல்லியலார் மொழிந்த செய்யுள் வடிவிலுள்ள அந்த நல்லுரையையும் நீங்கள் பார்க்க வேண்டுமே. இரண்டொரு முறை திரும்பத் திரும்பப் படியுங்கள். அதன் பொருளும் நன்கு விளங்கும். இதோ அது:

“பல்சான்றீரே! பல்சான்றீரே!
செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே!
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந்திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்எள் சாந்தொடு புளிபெய்து அட்ட
வேளை வெந்தை வல்சியாகப்
பரல்பெய் பள்ளிப் பாய்இன்று வதியும்
உயவல் பெண்டிரேம் அல்லேம் மாதோ!
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்

நுமக்கு அரிது ஆகுக தில்ல எமக்கு எம்
பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்புஅற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயும் ஓரற்றே.''

(காழ்-விதை; அடை-இலை; சாந்து- துவையல்; வல்சி-உணவு; உயவல்-கைம்மை நோன்பு.)

9. நைடதத்தின் நயங் காட்டிய நற்றமிழ்ச் செல்வி

"ஆம். உமக்குத் தகுந்த பரிசு இதுவே. போதிய கல்விப் பயிற்சியின்றிப் புலவர் பட்டம் சூட்டிக்கொண்டு வருவோர்க்கு என்னுல் தரப்படும் பரிசு இத் தலைக்குட்டே. அதில் ஒன்றும் இதில் ஒன்றுமாக இரண்டொரு நூல்களைக் கற்றுவிடுவதனுல், எவரும் கற்றவர் குழாத்துள் ஒருவராகக் கணிக்கப் படமாட்டார். நுண்ணுணர்வு உடையராய், ஆன்ற ஆராய்ச்சியோடு ஐயம் திரிபு அற நூல் பல கற்றுப் புலமை நிரம்பப் பெற்ருரே, கற்ருர் என்னும் பெயருக்கு உரியராவர். கல்வி கேள்விகளில் வல்லுநராய், படிக்குந்தோறும் புதிய புதிய கருத்துக்களைப் புலப்படுத்துவதாயும் படிப்போர் கேட்போர்களின் நெஞ்சை அள்ளுமாறு சொல் நயமும் பொருள் நயமும் பொருந்தியதாயும் விளங்கும் பா இயற்றும் ஆற்றல் வாய்ந்தவராய் உள்ளவர்களே, யாவராலும் போற்றத் தகும் புலவர் பெருமக்களாவர். அத்தகைய நல்லிசைப் புலவர்களை, அவர்கள் வேண்டும் பொருளைத் தந்து மகிழ்விப்பதே எம்போன்ருர் கடமை.

"அங்ஙனமின்றி, அரைகுறைக் கவிஞரைப் பொருள் ஈந்து ஊக்கின் நாட்டில் கல்வியின் தரம் குறையும். குறை கல்வியாளர், மேலும் கற்க மனங் கொள்ளாது, தன்னை மயிலாகப் பாவித்துச் சிறகு விரித்து ஆடும் வான்கோழி போல, பெரும் புலவராகத் தம்மை மதித்துத் தருக்குற்றுத் திரிவர். நிரம்பிய கல்விச் செல்வமுடைய புலவர்கள் நன் மதிப்பு இழந்து வருந்துவதற்கும் இச்செயல் காரண மாகும். ஆகலின், நீரும் நல்லாசிரியரை யடைந்து கற்று, புலமை மிக்கவராய் வரின் பரிசில் பெற்றுப் பெருமை பெறுவீர். இனி, செல்வீராக."

தம் வினவிற்குத் தக்க விடை இறுக்க அறியாத புலவர்களைத் தலையில் குட்டி, இங்ஙனம் அறிவுறுத்தி அனுப்புவார் அதிவீரராம பாண்டியர். பள்ளிப் பிள்ளை களின் இச்செயலை மேற்கொண்டிருந்த அவர் 'பிள்ளைப் பாண்டியன்' ஆனார். தமிழ் நாட்டுப் பகுதிகள் மூன்றனுள் ஒன்றாகிய பாண்டிய நாட்டை ஆண்டுவந்த பாண்டிய மன்னர் வழிவந்த ஓர் சிற்றரசர் அவர். கருவூரில் இருந்து அரசுபுரிந்த செங்கோல் வேந்தர். நிரம்ப அழகிய தேசிகர் என்னும் பெரியார்பால் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுப் பெரும் புலமை வாய்ந்தவர். அணிபெறச் செய்யுள் செய்வதில் வல்லவர். வடமொழிப் புலமையும் நிரம்பப் பெற்றவர். தக்க புலவர்களுக்குப் பொருள் வேண்டுவன விருப்புடன் அளிக்கும் இயல்பினர். போலிப் புலவர்களைத் தலையில் குட்டுவதை வேடிக்கையாகக் கொண்ட பிள்ளைத் தன்மையர்.

ஏனைப் புலவர்கள் வியப்புக் கொள்ளுமாறு தம் புலமை தோன்ற ஓர் காவியம் இயற்ற எண்ணினர் அதி வீரராமர். "நைடதம் புலவர்க்கு ஔடதம்" என இது

போழ்து யாவராலும் புகழப்பட்டு வழங்கும் நைடதத்தை எழுதத் தொடங்கினர். நள தமயந்தியர் கதையைக் கூறுவது அந்நூல். கதைகளில் அமைக்கப்படுவனவாகிய ஒன்பான் சுவைகளில், அதிவீரராமருக்கு இன்பச் சுவையில் விருப்பம் அதிகம். ஆகவே நைடதத்தின் கதாநாயகர்களாகிய நளன் தமயந்தி இவர்களின் எழில்நலனைச் சிறப்பித்தல் வாயிலாக இன்பச் சுவையை அள்ளிப் பொழியலானர். பாதிநூல் ஆயிற்று. உடனே அவர்க்கு அந்நூலைப் பற்றிய பிறர் கொள்கையை அறிதல் வேண்டும் என ஓர் எண்ணம் உதித்தது. தம் தமையனர் வரதுங்கராம பாண்டியரிடமே காட்டத் தீர்மானித்து அங்குச் சென்ருர்.

வரதுங்கராம பாண்டியரும் நிரம்ப வழகிய தேசிகர் பால் அதிவீரராம பாண்டியரோடு கல்வி பயின்று கவியரசராக விளங்கிய ஓர் சிற்றரசர். ஒழுக்கத்தை உயிரினும் உயர்வாகக் கொண்ட உயர் குணக்குன்றம். அவர்தம் வாழ்க்கைத் துணைவியா யமைந்த தேவியார் கற்பரசி; கல்விக் கடல். அவ்விரு காதலரும் கடவுள் வழிபாட்டையே வாழ்க்கைப் பயனுகக் கொண்டு இறைவனைப் பூசித்தல், இனிய செந்தமிழ்ப் பாக்களால் புகழ்ந்து போற்றல், ஞான நூல்களை ஆராய்தல் முதலிய நற்செயல்களில் தம் காலத்தின் பெரும் பகுதியைச் செலவிட்டு ஞானச் செல்வர்களாய்த் திகழ்ந்தனர்.

பின்னேன் வரைந்த காவியத்தைக் கண்ட வரதுங்கர் மனம் கவன்ருராயினும் அதனை வெளியிடாது அடக்கிக் கொண்டு, "தம்பி! உன் மதனி மதிப்புரை கூறும் தகுதி வாய்ந்தவள்; அவளிடம் காட்டுக" என்ருர். அவ்வாறே கோப்பெருந்தேவிபால் சென்று, சுவடியைக் காட்டினர் அதிவிரராம பாண்டியர். அரசியாரும் அதனை வாங்கிப் படித்தார். மட்டிலா மகிழ்ச்சி கொண்டார். "தம்பி! என்

நூல் முடிக்கப்படவில்லை?" என வினவினர். 'கவிஞர் உலகம் இதனை எவ்வாறு மதிக்கிறது என ஓரளவிற் கேனும் அறிந்துகொண்ட பின்னர், மேலே செல்லுதலே தக்கதோர் செயலாகும் என்று எண்ணி, அவ்வளவோடு நிறுத்தியுள்ளேன்; உங்கள் கருத்தை அறியும் அவாவுடையேன்; கூறுக" என்றார் அதிவீரராம பாண்டியர்.

"தம்பி! உனது நூலின் குணம் குற்றங்களைக் கூறும் திறமை உடையவளோ யான்! கல்வி கற்க விழைவோர் அனைவரும் இலக்கியமாகக் கொண்டு கற்கவேண்டிய பெருமை பெற்றதன்றோ இது! தமயந்தி வர்ணனை, 'வேறு எந்நூலினும் இல்லை' என்னுமாறு தனிச் சிறப்புற்றுப் பொலிகின்றது. சுருங்கக் கூறின், நன்கு அணி செய்யப் பெற்று, எவர்க்கும் மேலும் காணவேண்டும் என்னும் ஆவலை எழுப்புவதாய், கம்பீரமான நடையோடு வேட்டைமேற் செல்லும் வேட்டைக் குதிரையோடு ஒப்பிடலாம்படி இருக்கிறது இந்நூல்" என இன்சொல் இயம்பினர் அம்மென்மொழிப் பாவையார்.

பிறர் தம்மைப் புகழ்வதைக் கேட்டு மகிழ்ச்சி கொள்ளுதலை விரும்புவது பெரும்பாலோர்க்கு இயல்பு தானே? பாண்டிமா தேவியாரின் புகழுரையால் உவகையுற்று அரசியை வணங்கி விடைகொண்டு தமையனரிடம் சென்று அண்ணியார் நவின்றதை உரைத்தார் அதிவீரராமர்.

வரதுங்கராமர், "தம்பி! உன் அண்ணியாரின் நன் மதிப்பைப் பெற்ற இந்நூலில் குற்றம் காண்போரும் உளரோ? இது யாவரும் 'பொன்னேபோல் போற்றத் தகும் இலக்கியம்' என்பதில் எட்டுணையும் ஐயமின்று. எனினும், யான் கூற விரும்புவது ஒன்று உளது" எனப் பின்வருமாறு உரைத்தார்:

"தம்பி, உன் கல்வித் திறமை முழுதும் தோன்றப் புகழ்ந்து பாடியது எவரை? நளனையும் தமயந்தியையும். நம் போன்ற மானிடர்களைச் சிறப்பித்துப் புகழ்வதில் உனது ஒப்பு உயர்வு அற்ற கல்வியையும் காலத்தையும் செலவழித்திருக்கிறாய். இது தக்கதோ? எண்ணிப் பார். கல்வியின் மேன்மை அதனைக் கற்பதில் இல்லை; அதனைச் செயல்படுத்தும் முறையில் உள்ளது. அரிதின் முயன்று பெற்ற அமுதத்தை ஆற்றில் பெய்து அழித்தல் அடுக்குமோ? இதனால் உளதாம் பயன் யாது? கற்றோரின் புகழுரையோ? புகழ்வோர் சிலராயின் பொருமையால் இகழ்வோரும் பலராவரே! இருமை இன்பங்களையும் ஈய வல்ல இறைவனது இணையடிகளைப் புகழ்ந்து பாடித் துதித்தலன்றோ கல்வியின் பயனாவது!

'கற்றதனால் ஆய பயன் என்கொல்? வாலறிவன்
நல்தாள் தொழாஅர் எனின்'

என்னும் தமிழ் மறையின் பொன்மொழி நீ அறியாததோ!"

முன்னவர் மொழிந்த மாற்றத்தால் மனமாற்றமுற்ற அதிவீரராமரின் ஊக்கம் குன்றியது. கற்பனை யூற்றுப் பெருக்குக்குறைந்தது. தொடங்கியதைமுடிக்கவேண்டுமே; அதற்காக ஏதோ ஒரு விதமாய் எழுதி முடித்தார். "இந் நிலையில் அண்ணியார் யாது கருத்துக் கொள்ளுகின்றனரோ, காண்போம்" என, அந்நூலைப் பாண்டி மாதேவியாரிடம் அனுப்பினார்.

முதற் பகுதியின் வேகம் பிற்பகுதியில் இல்லை என்பதை அந்த அம்மையார் கண்டார்; கவன்றார். "சென்று தேய்ந்து இறுதல் என்னும் குற்றம் அமையுமாறு இந் நூலின் உணர்ச்சி ஓட்டம் குறைவு பட்டது ஏன்?

வேட்டைக் குதிரையின் நடைபோல் இருந்தது இப் பொழுது வேட்டை நாயின் நடை போல அன்றோ இருக்கின்றது!" என்று எண்ணினர்.

இந்நூல் வேட்டைநாய் போல இருக்கிறது என, ஒரு வாக்கியத்தினுல் தம் கருத்தைக் குறிப்பிட்டு அனுப்பினர் மைத்துனருக்கு.

"முயல் முதலிய விலங்குகளைப் பிடிக்கச் செல்லுங்கால் தாவிப் பாய்ந்து வேகமாக ஓடுவதும், மீளுங்கால் அவ் வேகங் குன்றிச் சோர்வுற்றுத் திரும்பி வருவதும் வேட்டை நாயின் இயல்பு."

கோப்பெருந்தேவியின் இம் மதிப்புரை அவமதிப் புரையாகத் தோன்றியது, அரசர் பெருமானுக்கு. வேண்டு மென்றே தம்மை அவமதித்ததாக அவர் நினைத்தார். கோபக்கனல் மூண்டு எழுந்தது. இஃது இயற்கைதானே! கோபங் கொள்ளாமல் இருத்தல் எங்ஙனம் கூடும்! பரிசில் நாடி வரும் பாவாணர்களைப் பரிசோதித்துத் தலையில் குட்டித் துரத்தும் தம்மைப் பிறர் குற்றங் கூறி அவமதிப்ப தென்றல் - அதிலும் ஓர் பெண்பால் அப்படிச் செய்வ தென்றல்-எவ்வாறு பொறுப்பது! 'நம் தமையன் சாற்றிய அறவுரைகள் அனைத்தும், அழுக்காற்றால் நூலைப் பிழை யுளதாக்கிப் பின் தம் மனைவியைக் கொண்டு அவமதிக் கக் கருதிச் செய்த சூழ்ச்சியே போலும்' என்றும் கொண் டார் அவர். அண்ணன் மேல் பகைமை கொண்டார். பழி தீர்க்க எண்ணிப் போர்க்கோலம் பூண்டார்.

வரதுங்கராமருக்குத் தம்பியின் போர்க் கோலச் செய்தி எட்டியது. உடனே அவர் கருவூரை அடைந்து, தம்பியைக் கண்டு, அவரது அறியாமையில் கனன்று

எழுந்த வெகுளியைத் தமது இன்சொல் மாரியால் அவித்து. நன்மதி புகட்டிச் சென்ருர். அதிவீரராம பாண்டியரும் அது முதல் தம் தவருன செய்கைக்கு நாணி, கடவுளன்பு மிக்கவராய், பக்திச் சுவை ததும்ப, கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய பக்தி நூல்களை இயற்று வதில் மிகுந்த ஆர்வங் கொண்டு புலவர் பெருமானுய் வாழ்ந்துவந்தார்.

காலமானது எவராலும் கடக்கவொண்ணுத வன்மை யுடையது. பண்டிதரோ பாமரரோ-பெரியாரோ சிறி யாரோ-அரசரோ ஆண்டியோ-நல்லாரோ தீயாரோ எவரையும் அது பொருட்படுத்துவதில்லை. இம்மியும் தவரு மல் தன் காரியத்தைச் செய்தே தீர்க்கும். மனம் ஒருமித்த மாசற்ற வாழ்க்கையால் தூய இன்பம் துய்த்துவந்த வரதுங்கராமரையும் அவர் மனைவியாரையும் பிரித்துவிட எண்ணியது அது. அரசருக்கு முடிவை உண்டாக்கியது. அரசியார் அவரது திருமுகத்தை நோக்கிய வண்ணம் அருகில் அமர்ந்திருந்தார். கணவரது அன்பு முகத்தில் அச்சக்குறி தோன்றியதாகக் கண்டார். அரசியார், "மரண காலத் தோற்றங்களாகச் சொல்லப்படும் பயங்கரத் தோற்றங்கள் இவருக்கு அச்சம் விளைவிக்கின்ற னவோ?" என்று ஐயுறவு கொண்டவராய், "ஏன், அஞ்சுகின்றீரோ?" என வினவினுர். பாண்டிய மன்னர் நகைத்தார். "தேவி, யான் எதற்கு அஞ்சவேண்டும்? இரவும் பகலும் இடையருது நான் தொழுது துதிக்கும் பெருமான், என் உள்ளக் கோயிலில் எழுந்தருளிக் காட்சியளித்துக்கொண் டிருக் கையில் பயம் ஏன் உண்டாகும் எனக்கு!" எனத் தாம் காணும் சிவபெருமானது திருவுருவக் காட்சியை விளக்கிக் கூறினுர்.

உயிர்களுக்குப் பிறப்பினும் வித்தாக இருப்பது அவாவே என்பதும், மரணகாலத்தில் கொள்ளும் அவாவுக்கு ஏற்றவாறே அவ்வுயிர்கள் மறுபிறப்படைந்து துன்புறும் என்பதும் மறு பிறவி நம்பிக்கையாளர் கொள்கை. பிறவித் துன்பத்திற்கு அஞ்சும் பெரியோர் உலகப் பொருள்களில் அவாவற்றுக் கடவுள் நினைப்போடு மரணமடைய விரும்புவர். வாழ்வின் பெரும் பகுதியில் கடவுளைப் பேரன்போடு தியானித்துப் பழகினோர்க்கே அந்நிலை கைகூடும். உலகப் பொருள்களில் பற்றுக் கொண்டு உழல்வோர்க்கு அது சாத்தியமாவதின்று. மனம் எப்பொருளில் அதிக ஆசை வைத்துப் பழகியிருக்கிறதோ, அப்பொருளையே உயிர் நீக்கத்தின் போதும் கொண்டு நிற்பதே அதன் இயல்பு.

வரதுங்கராம பாண்டியரும் அவர்தம் அன்பின் உருவாய தேவியாரும் கல்விச் செல்வம் பொருட் செல்வங்களோடு பக்திஞானச் செல்வங்களும் பூரணமாகப் பெற்றிருந்தவர்கள். வழிபாட்டுப் பயிற்சியின் முதிர்ச்சியால் தம் உபாசனாமூர்த்தியின் திருவுருவை மரணகாலத்தில் தம் மனக் கண்ணால் கண்டு களிக்கும் பெரும்பேறு வரதுங்கராம பாண்டியருக்கு எளிதில் உளதாயிற்று. தாம் கண்ட சிவபெருமான் திருக்கோலக் காட்சியை, அரசியார்க்கு அவர் வரைந்து காட்டிய கவிச் சித்திர ஓவியம், தன்னைக் காண்பாரது உள்ளக் கிழியிலும் பதிந்து காட்சியளிப்பதை ஊன்றி நோக்குங்கள். அந்த ஓவியம் இதுவே:

"அஞ்சலென்ற கரதலமும், கணபண கங்கணமும்,
அரைக்கிசைந்த புலி உடையும் அம்புலிச் செஞ்சடையும்,
கஞ்சமலர்ச் சேவடியும், கனைகழலும், சிலம்பும்,
கருணைபொழி திருமுகமும், கண்கள் ஒருமூன்றும்,

நஞ்சைஉண்ட மணிமிடறும், முந்நூலும், மார்பும்,
நலந்திகழ் வெண்ணீற்றொளியும், மறிமானும் மழுவும்,
பஞ்சடிசிற்றிடை உவமையாள் ஒப்பனை பாகமுமாய்ப்
பால்வண்ணர் உளத்திருக்கப் பயமுண்டோ எனக்கே?''

(கண பணம்- கூட்டமாகிய பாம்பு; அம்புலி- சந்திரன்.)

இது உருவத் தியானம். இதனினும் சிறந்ததாகப் பிறிதொரு நிலை உளது. அதனை அருவத் தியானம் என்பர். வாக்கு மனம் கடந்ததாய், குணம் குறிகள் இன்றி, ஞானப் பெருவெளியாய் விளங்கும் பரம் பொருளின் உண்மை நிலையை உளத்திருத்தி, அதனோடு ஒன்றுபட்டு நிற்கும் நிலையே அருவத் தியான நிலை என ஞான நூல்கள் நவிலாநிற்கும். உருவத் தியானத்தின் முடிவான அந்த நிலையை எய்தினோர் பிறவிப் பெருங் கடல் கடப்பர்.

அந்த மேலான நிலையை மன்னர் பிரானுக்கு நினைவுறுத்தக் கருதினார் தேவியார். அவரை உற்று நோக்கிச் செவிப் புலன்மாறு இன்னிசையோடு அப் பரம்பொருளின் நிலையை ஓர் பாடலால் மொழிந்தார்.

''யாக்கைபெனும் புழுக்குரம்பை அணைந்தணையாப் பொருளை
அருளொளியை, பராபரத்துக்கு அப்புறமாம் அறிவை,
நீக்கமற மயிர்முனைக்கும் இடமற எங்கெங்கும்
நிறைந்து நின்ற முழுமுதலை, நினைவில்எழும் சுடரை,
பாக்கியங்கள் செய்து அனந்தம் தவக்குறைகள் முடிக்கும்
பழவடியார் தமக்குதவும் பசுந்துணர்க் கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தால் அளவுபடா ஒன்றை,
மாசற்ற வெறுவெளியை, மனவெளியில் அடைப்பார்.''

இதுவே அந்த ஞானப் பாடல்.

அவ்வளவில் அரசர் அவ்வுயிர் நிலையினின்று பேரின்பப் பெருவாழ்வு எய்தினர். இம்மையில் மாத்திர மன்றி மறுமையின்பத்துக்கும் தம் கொழுநர்க்கு உறு துணையாக இருந்து உதவிய அவ்வுத்தமப் பெண்ணரசி யின் மாண்புதான் என்னே!

"புணர்ந்தன பிரியும்; பிறந்தன இறக்கும்; இது மாற்ற முடியாத இயற்கையின் நியதி. அன்றியும் ஆன்மா அழிவற்றது. அதற்குப் பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை" என அறிவு நூல்கள் நவிலும் உண்மையை உணர்ந்த ஞானச் செல்வியாகிய அரசியார் தம் கணவர் மாண்டார் எனக் கொண்டு மனம் மாழ்குவரோ!

காவலர் பிரிவுக்குப் பின்னர் அவ்வம்மையார் தம் இறுதிநாள்காறும் சச்சிதானந்தத் தனிப் பொருளை வழி படும் ஞான நெறியில் தம் மனத்தை இடையருது செலுத்துவதாகிய ஞானப் பெரு வாழ்வை மேற்கொண்டு ஒழுகுவராயினர்.

முற்காலத்தில் தமிழ்நாட்டில், மாதர்கள் எத்துணைச் சிறப்பு வாய்ந்து யாவராலும் புகழ்படத்தக்க உயர் நிலை யுற்று விளங்கினர் என்பதற்கு வரதுங்கராம பாண்டிய ரின் மனைவியாரது இவ்வரலாற்றினும் வேறு சான்று வேண்டுமோ!

10. முடிவேந்தரை அவமதித்த மொய்குழலாள்

வறுமையால் வாடிய புலவர் ஒருவர் பரிசில் வழங்கும் வள்ளல்களைத் தேடி ஓர் சாலை வழியே போய்க் கொண்டிருக்கிறார். இடைநெறியில் யானை குதிரை முதலிய பரிவாரங்களோடு எதிர்ப்பட்ட ஒருவரைக் காண்கிறார். கண்டதும், 'இவர் ஓர் குறுநில மன்னர்; தம்மினும் மேலான அரசனுக்குக் கப்பம் கட்டப் போகிறார் போலும்' என்னும் எண்ணம் உண்டாகிறது அவருக்கு. அவர் எதிர்சென்று வணங்கி, "ஐயா! உமது தேசம் எது? உமது பெயர் என்ன? இத்திறைப் பொருள்களை யாருக்குக் கொண்டு போகின்றீர்?" என்று வினவுகிறார். அவர் சிரித்து, "ஐயா புலவரே! யானும் உமது வகுப்பைச் சேர்ந்தவன்தான்; ஒரு புலவனே! இவை யனைத்தும் திறைப் பொருள்கள் என்று நினைத்துவிட்டீரோ! இல்லை, இல்லை. பரிசிலாகப் பெறப்பட்டனவே. என்ன ஐயா விழிக்கின்றீர்! 'இவ்வாறு அளிக்கும் வள்ளல்களும் உளரோ!' என்னும் வியப்போ! ஒன்றும் வியப்பில்லை. இவற்றை வழங்கிய வள்ளல் ஆறை நகர்க் காவலன் ஏகம்பவாணன்தான். அவனிடம் சென்றால் நீரும் பெற லாம்; வேறு யாரும் பெறலாம்" என்றார்.

"அப்படியா! ஐயா! அந்தப் பிரபுவை எங்கே எப்படிக் காணலாம்? சற்றுக் கூறுவீர்களா?" எனக் கேட்டார் புலவர்.

"நான் சொல்லும் அடையாளத்தின்படி சென்ருல் அவனைக் காணலாம். ஆறை நகர் அவன் உறைவிடம். அங்கே பெரிய மாளிகை ஒன்று உளது. அதன் அருகில் ஆத்தி, உயர்ந்த வேம்பு, பனை, அரசு, அரசைச் சுமந்த வாறு சில அத்தி இவை நிற்கும்; இதுவே அடையாளம். இந்த அடையாளங்களால் எளிதில் தெரிந்துகொள்ள லாம்; விரைவாகச் செல்லும். உமது அவா அடங்கச் செல்வம் பெற்று வரலாம்" என்றியம்பி அனுப்புகிருர் வந்தவர்.

ஆத்தி என ஆத்திப் பூ மாலை தரித்த சோழனையும், வேம்பு என வேப்பம்பூ மாலை யணிந்த பாண்டியனையும், பனை எனப் பனம்பூ மாலை சூடிய சேரனையும், அரசு என மற்ற அரசர்களையும், அரசைச் சுமந்த அத்தி என அரசர் களைச் சுமந்து நிற்கும் யானைகளையும் குறிப்பிட்டு, இவர் கள் அனைவரும் ஏகம்பவாணன் அரண்மனை முன்றிலில், அவனைக் காணும் அமயம் எதிர்பார்த்துக் காத்திருப்பார் கள் என்று அடையாளம் காட்டினுர் அவர்.

இவ்வாறு புலவர் இருவர் பேசிக்கொண்டதாகக் கற்பனை செய்துகொண்டு அதன் வாயிலாக ஏகம்பவாண னின் பெருமையைச் சித்திரித்துக் காட்டுகின்ருர் ஒரு புலவர்.

ஏகம்பவாணன் சோழ நாட்டில் உள்ள ஆறை என வழங்கும் ஆற்றூரில் ஆயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்துவந்த ஓர் பிரபு. வேளாள மரபினன். பேரரசர்க்கு ஒப்பாகக் கூறத் தகுந்த திரண்ட செல்வமும் செல்வாக்

கும் உள்ள பெருநிலக் கிழவன். சேர சோழ பாண்டியர்களாகிய முடி மன்னரும் நட்புக்கொண்டு அளவளாவிப் பாராட்டும் சிறப்புடையவன். தன் குலத் தொழிலாகிய வேளாண் தொழிலையே மேன்மையாகக் கருதி நடத்தி வந்தான். கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பரிடம் கல்வி கற்கும் பேறு பெற்றவன். ஆசிரியர்பால் அளவிலா அன்பு பூண்டவன். நன்றி பாராட்டலாக அவரது பெயரைத் தன் பெயரோடு இணைத்து வழங்கி வந்தான். (ஏகன் - கம்பன் - வாணன்.) தமிழ்ப் புலவர்களோடு பேசிப் பழகுவதில் தனி ஆர்வம் அவனுக்கு இருந்தது. அருங் கலை வாணர் பலர் என்றும் அவன் மனையில் குழுமி யிருப்பர். தன்னை நாடி வரும் தண்டமிழ் வாணரைப் பெரும் பொருள் ஈந்து மகிழ்விக்கும் வள்ளல் என அவனைப் புகழாதார் இலர். அன்றியும், பேரரசர்களையும் அவர்கள் அஞ்சுமாறு அடக்கும் ஆற்றல் வாய்ந்தவன் ஏகம்பவாணன் எனக் கம்பர் கூறியதாகச் சில பாக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றை ஈண்டுக் காட்டுவோம்:

"அலங்கல் அணிமார்பன் ஆறையர்கோன் வாணன்
விலங்கு கொடுவருக என்றான் — இலங்கிழையீர்!
சேரற்கோ, சோழற்கோ, தென்பாண்டி நாடாளும்
வீரற்கோ, யார்க்கோ விலங்கு?"

"எங்கே, அந்த விலங்கை இங்கே கொண்டுவா" என்று கூறினான் ஏகம்பவாணன், ஏவலாளனை நோக்கி. உடனே இவர் திகில் கொண்டுவிட்டாராம். "ஐயோ, 'விலங்கை எடுத்துவா' என்றானே. அது எவர்க்காகவோ! சேரனுக்கோ, சோழனுக்கோ, பாண்டியனுக்கோ, வேறு யாருக்கோ?" என்று சந்தேகம் வந்துவிட்டதாம் அவருக்கு! இதுதான் இச் செய்யுளின் பொருள்.

புலவர்களின் இப் புகழுரைகள் சற்று மிகைப்படுத்திக் கூறுவனவாக இருக்கலாம்; ஆனால், முழுமையும் பொய் எனத் தள்ளத் தக்கன அல்ல என்பதை மறத்தல் ஆகாது. இவ்வாற்றால் ஏகம்பவாணன் கொடையிலும் கல்வியிலும் வீரத்திலும் சிறந்தவன் என்பது புலனாகின்றது.

ஏகம்பவாணனின் வாழ்க்கைத் துணைவியாகிய பெண்மணியும் உயர்குடிப் பிறப்பும், அதற்கேற்ற செவ்விய ஒழுக்கமும், மனையறம் வழுவா மாண்பும் வாய்ந்தவர். கொழுனன்பால் குறையா அன்பும் பெருமதிப்பும் கொண்ட கற்பரசி. வரும் விருந்தினரை ஓம்பும் வேட்கை மிக்குடையவர். இலக்கண இலக்கியங்களைத் தக்க ஆசிரியரிடம் முறையாகப் பயின்று நிரம்பிய புலமையுடையவர். தன்மதிப்பு, பழிக்கு நாணுதல் முதலிய பண்புகள் மிகுதியும் அவரிடம் குடிகொண்டிருந்தன.

ஏகம்பவாணன் வைகறையில் துயிலெழுவான்; எழுந்ததும் வயல்களைச் சுற்றிப் பார்க்கச் செல்வான். அவன் முதல் வேலை இதுதான். வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்டோரின் முதல் கடமையும் இதுவேயன்றோ! பண்ணையாட்கள் உண்மை உழைப்பாளிகளாய் இருப்பினும், நிலத்துக்கு உரியோரின் கண்காணிப்பு இல்லையெனில், நிலங்கள் நல்ல பயனைத் தர மாட்டா. "அதைச் செய்தாயா? இதைச் செய்தாயா? அப்படிச் செய், இப்படிச் செய்" என, இருந்த இடத்தில் இருந்தவாறே கட்டளை இடுவதோடு தம் வேலை முடிந்ததாக எண்ணித் திரியும் சோம்பரின் வாழ்க்கை, இருப்பது போலக் காணப்பட்டு உண்மையில் இல்லாததாய் விரைவில் அழிவுறும் உடையவனைக் கண்டால்தான் நிலத்திற்கு மகிழ்ச்சி உண்டாகும்; ஆகையால், அவன்

நாடோறும் சென்று பார்த்து, செய்ய வேண்டியதைச் செய்யவேண்டும்; அங்ஙனம் செய்யாதொழியின், கணவன் உபசரிப்பைப் பெருத மனைவி அவன்மேல் வெறுப்புக் கொண்டு கோபித்துக் கொள்வதுபோல, அந்த நிலமும் பயன் தராதொழியும் என்பது வள்ளுவப் பெரியார் வாக்கு. தவிர, காலையில் கதிரவன் தோன்றுமுன் உறக்கம் நீங்கி எழுந்ததும் வயல்களைப் பார்க்கச் செல்லுதல், காலை உலாவல், கதிரொளியின் மூழ்கல், நல்ல காற்று உட்கொள்ளல் முதலியன உடற் பயிற்சிச் சாதனமுமாகும். அதனுல் உடல் வன்மை பெறுதல், பிணிகள் அணுகாமை முதலிய நன்மைகள் பல உளவாகும். நம் முன்னோர்கள் உடல் உரமும் நீண்ட ஆயுளும் கொண்டிருந்ததற்கு அவர்களின் வாழ்க்கை நெறி இவ்வித நன்முறையில் அமைந்திருந்ததுதான் காரணம். இன்றும் அம்முறைகளைக் கைக்கொண்டிருக்கும் கிராம மக்கள் உடல் கட்டும் வலிமையும் உள்ளவர்களாயிருத்தலையும், பலவகைச் சூழ்நிலைகளால் அந்த முறைகளைக் கைக்கொள்ளும் வாய்ப்புப் பெருத நகர மக்கள் வலிகுன்றி மெலிந்த யாக்கையராய் நிற்றலையும் கண்கூடாகக் காண்கின்ருேமே!

வழக்கம்போல் ஏகம்பவாணன் ஒரு நாள் வயல்களைச் சுற்றிப் பார்க்கப் போயிருந்த சமயம் முடி மன்னர் மூவரும் அவனைக் காண அவனது மாளிகைக்கு வந்தனர். தலைவன் இல்லாமையால் கருமத் தலைவர்கள் அவர்களை வரவேற்று, அணி செயப் பெற்ற பெரிய மண்டபத்தில் இருக்கச் செய்தனர். "ஐயா அவர்கள் வெளியில் வயலுக்குப் போயிருக்கின்ருர்கள்; வரும் வேளை ஆயிற்று; அவசரமாகப் பார்க்க விரும்பினுல் ஆள் அனுப்புகிருேம்" என்றனர். அது கேட்டு அரசருள்

ஒருவர், "ஓ ஓ! முடி நடப் போயிருக்கின்ருர்களோ! குலத் தொழில் அல்லவா!" எனக் கூறி நகைத்தார். மற்றவர் களும் 'கலகல' எனப் பேரொலி எழச் சிரித்தனர்.

பிரபுவின் இல்லக்கிழத்திக்கு எட்டியது அரசர்கள் உரைத்த செய்தி. அந்தப் பரிகாச வார்த்தை தம் கணவரை அவமதிப்பதாக அவர் கருதினர். "என்ன, முடி நடப் போயினரோ என்று கேட்கிருர்கள்! என்ன செருக்கு இம்மன்னர்களுக்கு? முடிநடல் இழிவான தொழில் என எண்ணினர் போலும்! முடி நடப் போயினரோ என்றுதானே கேட்கிருர்கள்? ஆம். முடி நடத்தான் போயினர்; என்ன முடி! என்ன முடி! நாற்று முடியல்ல. மூவேந்தர் தங்கள் முடி! மூவேந்தர் தங்கள் முடி" எனத் திரும்பத் திரும்ப மொழிந்தது சீற்றத்தால் அவர் வாய். அந்த வாக்கியம் ஓர் வெண்பாவின் ஈற்றடி யாக அமைந்திருந்தது. அவர் சீற்றம் தணியாமையால் மேலும், "ஆம். போர்க்களமாகிய வயலில் மூவேந்தரின் சேனைகளை வெட்டித் தழையாக இட்டு, அவற்றின் உடலினின்று பெருகும் குருதியாகிய நீரைத் தேங்கப் பாய்ச்சி, தான் ஏறிச் செலுத்தும் யானையின் காலால் மிதிப்பித்த சேற்றில் மூவேந்தரின் முடியை ஏகம்ப வாணன் பறித்து நட்டான்" என ஓர் கருத்து அந்தச் செந்தமிழ்ப் புலமைச் செல்வியின் உள்ளத்தில் உருப் பெற்று,

"சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த அடிச்சேற்றில் — மானபரன்
மாவேந்தன் ஏகம்பவாணன் பறித்து நட்டான்
மூவேந்தர் தங்கள் முடி"

என்னும் வெண்பாவாக வெளிப்போந்தது. உடனே

அவர் ஏடும் எழுத்தாணியும் எடுத்தார். அப் பாடலை வரைந்தார். வேந்தர்களுக்கு அனுப்பினார்.

ஏவலர் நீட்டிய ஓலையை வேந்தர் ஒருவர் வாங்கி, "இது என்ன! செய்யுளாக உள்ளதே" எனப் படித்தார். முகம் சாம்பியது. மற்றவர்களிடம் காட்டினார். அவர் களுக்கும் விஷயம் விளங்கிவிட்டது. ஒருவரை யொருவர் பார்த்து விழித்தார்கள். உடல் வியர்க்க, உள்ளங் கலங்க, அச்சம் ஒருபால் தோன்ற, "விளையாட்டு வினையாய் முடிந்ததே" என வருந்தினர். "முதலியார் இச் செய்தியை அறியின் யாது விளையுமோ!" என வெருவினர். "இனி இங்கிருத்தல் தவறு; விரைவின் நீங்குதலே நலம்" எனக் கொண்டனர். "அவசரமாகக் கவனிக்கவேண்டிய அலு வல்கள் சில எங்களை எதிர்நோக்கி யிருத்தலால் முதலி யார் வருமளவும் தங்கியிருக்க இயலவில்லை. அவர் வந்த பின்னர் எங்கள் வருகையைத் தெரிவியுங்கள்; நாங்கள் விடை பெற்றுக்கொள்கிறோம். மேலும், முதலியாரைக் குறித்து வேடிக்கையாக நாங்கள் பேசியது அம்மையாரின் மனத்தைப் புண்படுத்தியதாக அறிகிறோம். அதற்காக மிகவும் வருந்துகிறோம். எங்களை மன்னிக்குமாறு நாங்கள் வேண்டிக்கொண்டதாக அம்மையாரிடம் தெரிவியுங்கள்" எனக் கருமத் தலைவரிடம் சொல்லிவிட்டுச் சென்றனர், மன்னர் மூவரும்.

கருமத் தலைவரால் அரசர்களின் மன்னிப்புச் செய்தியை அறிந்தனர் அம்மையார். அதன் பின்னரே அவர் உள்ளம் அமைதியுற்றது. கணவனை இழிவாகப் பேசியதை வேடிக்கைக்காக இருப்பினும் பொருத மான உணர்ச்சியும், அரசர்க்கும் அஞ்சாத தீரமும், விரைந்து கவியியற்றும் ஆற்றலும் வாய்க்கப் பெற்ற அந்த அம்மையார் முற்காலத் தமிழ்ப் பெண்டிரின் பண்பாட்டு நிலைமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கின்றாரன்றோ!

11. தந்தையையும் நாட்டையும் இழந்து தவித்த தையலர்

பண்டைத் தமிழகத்தின் வரலாற்று நூல்களை நுனிப் புல் மேய்ச்சலாக நோக்குவார்க்கும், அக்காலத் தமிழ் மக்களிடத்துக் கொடை, தாய்மொழிப் பற்று, மானம், வீரம் ஆகிய பண்புகளே தலை சிறந்து விளங்கினமை நன்கு புலனுகும். ஒன்ருேடொன்று நெருங்கிய தொடர் புடைய அந்நான்கனுள்ளும் 'கொடை மடம்' கொண்டு வள்ளல்களாக வாழ்ந்தோர் இந்நாட்டிற் போல வேறு எந்நாட்டிலும் இருந்திலர் என்பதும் மறுக்க முடியாத உண்மையாம். கொடையிடத்து அறியாமைப்படுதலே கொடை மடம் ஆகும். எவர்க்கு எப்பொழுது எதைக் கொடுக்கலாம் என்னும் வரையறை இல்லாது, எவர்க்கும் எப்பொழுதும் எதையும் ஈதலே வரையாதளிக்கும் வள்ளன்மை எனப்படும். அத்தகைய வள்ளன்மை உடையோரே வள்ளல்கள்.

"இளவேனிற் கால மாலைப் போழ்தில் உயர்தரப் புரவிகள் பூட்டிய தேரில் இவர்ந்து ஓர் அரசன் ஊர்க் கருகில் உள்ள மலர்ப் பொழிலை நோக்கி உலாப் போய்க் கொண்டிருக்கிருன். எதிரில் சிறுசெடியில் படர்ந்து ஏறிய

முல்லைக் கொடி யொன்று, பற்றுக்கோடு இல்லாமையால், மேற் செல்ல இயலாது நெறியில் குறுக்கே தாவி அலைந்துகொண்டிருக்கிறது. அதைக் கண்ட அந்த அரசன் உள்ளம் உருகியது. தன் தேரினை அதனருகில் செலுத்தி நிறுத்துகிருன். குதிரைகளைக் கட்டவிழ்த்து விட்டு, கொடியை மேலே எடுத்து அத் தேரின்மீது படர விடுகிருன். மனக் களிப்புடன் கால் நடையாகவே அரண்மனை சேர்கிருன்.

இவ்வரலாறு நமக்கு நகைப்பைத்தான் விளைக்கிறது. "இஃதென்ன மடமை! இப்படியும் ஒருவன் இருப்பானே!" என்று இதனை நம்பவும் மறுக்கிறது நமது மனம். ஆம்; அவன் மன நிலை வேறு; நம் மன நிலை வேறு. "ஓர் உயிர் அலைகிறது, ஐயோ!"- கனிந்த இரக்க உள்ளத்தில் தோன்றுவது இதுதான். இதுதான் கொடை மடம். இவ் வாறு செய்தோன் யார்? அவன்தான் பாரி வள்ளல்.

வள்ளல்களைக் குறித்து நினைக்க நேருங்கால் - அவர் கள் எண்ணிறந்தோராயினும் முதலில் நம் மனத்தில் இடம் பெறுபவன் வேள் பாரியே யாவன். சைவ சமயப் பெரியோர்களில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அவனையே குறிப்பிட்டு, "கொடுக்கிலாதானைப் பாரியே எனக் கூறினும் கொடுப்பாரிலை" எனப் புகழ்ந்துள்ளார். "வண்புகழ்ப் பாரி" என்ருர் அருணகிரியாரும்.

பாரி ஓர் குறுநில மன்னன்; பாண்டிய நாட்டின் ஓர் பகுதியாகிய பறம்பு நாட்டுத் தலைவன். பறம்பு நாடு முந்நூறு ஊர்களையும், அவற்றின் நாப்பண் விண்மீன் களால் சூழப்பெற்ற திங்கள் போல ஒளிரும் பரம்பு மலையையும் கொண்டது. குறுநில மன்னனுயினும் போரில் பெருநில வேந்தரையும் புறங்காணும் ஆற்றல்

மிக்க வீரன் பாரி. கொடைமடமல்லது படை மடம் படாதவன். கல்வியிற் சிறந்தவன். தமிழ்ப் புலவரை ஆதரிக்கும் ஆவல் மிக்குடையவன். தமிழ்ப் பேரறிஞராகிய கபிலரை ஆருயிர் நண்பராகக் கொண்டிருந்தவன். பாணர், விறலியர், புலவர் ஆயினோர்க்குத் தன் முந்நூறு ஊர்களையும் பரிசிலாகக் கொடுத்துவிட்டு எஞ்சிய பரம்பு மலையை மாத்திரம் தனக்குரியதாகக் கொண்டிருந்தவன்.

இரு கண்மணிகள் போன்று இரு பெண்மணிகள் இருந்தனர் பாரிக்கு. அவனது ஆருயிர் நண்பரும் அவைப் புலவருமாகிய கபிலரே அம் மகளிர்க்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியராக இருந்தார். அடக்கம், அன்பு, பெரியோர் வழிபாடு, கல்வியில் ஆர்வம் முதலிய பண்புகள் நிறைந்த அப் பெண்மணிகள் இருவரும் தம் சிந்தையைப் பிறவிடங்களில் சிதற விடாமல் ஆசிரியர் கற்பிப்பதில் ஊன்ற நிறுத்துதல், கற்பித்தபின் அவற்றைச் சிந்தித்தல், ஒருவரையொருவர் வினுதல்,விடையிறுத்தல், ஐயம் நேர்ந்துழி ஆசிரியரை அடுத்துக் கேட்டல் முதலிய தலை மாணுக்கர்க்குரிய இயல்புகளுமுடையோராய், ஆசிரியர் கபிலர் இன்றியமையாத இலக்கண இலக்கியங்களை யெல்லாம் முறைப்படி கற்பிக்க, விரைவில் கற்றுத் தேர்ச்சியுற்றனர். செய்யுள் யாத்தலிலும் நன்கு பயின்று வல்லராயினர்.

எழிலும் ஒழுக்கமும் ஒருங்கே கொண்டிருந்த அம் மகளிரை மணப் பருவமும் எய்தியது. பாரி மகளிரின் செவ்வியைச் செவியுற்ற தமிழ்நாட்டு மூவேந்தரும், அவர்களை மணக்க விரும்பித் தம் கருத்தைத் தனித் தனியாகப் பாரிக்குத் தெரிவித்தனர். பாரி அதற்கு உடன்பட்டிலன். ஆகலின், அவர்கள் அவன்பால் பகை கொண்டு ஒன்று கூடிப் போருக்கெழுந்தனர். பாரியும் படைகளோடு

சென்று எதிர்த்தான். போர் கடுமையாக நடந்தது. பறம்பு மலை முற்றுகையிடப்பட்டது. பல நாட்கள் வரை முற்றுகை நீட்டித்தமையின், உணவுப் பொருள்களைப் பெற இயலாமல் பறம்பு மலையிலிருந்தோர் துன்பமுறலாயினர். இந்நிலையில் கபிலர் மூவேந்தரெதிர் சென்று, வாள் வலியால் பாரியைக் கைப்பற்ற அவர்கள் செய்யும் முயற்சி பயன் தராது என்றும், பரிசிலராகப் பாடி வரின் பறம்பு மலையையும் பாரியையும் கைப்பற்றல் எளிதாம் என்றும், தன்னைப் பாடிவரும் பரிசிலர்க்கு எதனையும் - தன் இன்னுயிரையும் - இல்லை என்னாது ஈயும் வள்ளலாகிய அவன், தன்னையே பரிசிலாகத் தந்திடுவான் என்றும் இயம்பினார். அவர்களும் அவ்வாறே செய்து பாரியைக் கைப்பற்றிச் சென்று தம் பகையை முடித்துக்கொண்டனர்.

பாரியின் இழப்பால், பறம்பு நாட்டு மக்கள் பட்ட துயரத்திற்கு அளவில்லை. வேடன் அம்பால் எறியுண்ட இளமான்கள் போல, பாரியின் பெண்கள் தந்தையின் பிரிவாற்றாது அலமறலுற்று, கண்ணீர் ஆறாய்ப் பெருக்கி அழுதனர். கபிலரோ பெருங்கொடை வள்ளலும் அருட்கடலும் பெறலரும் நண்பனுமாகிய பாரியைப் பறிகொடுத்த பின்னர் உயிர் வாழ்ந்திருக்கவும் மனங்கொள்ளாது, தாமும் அவனுடன் இறக்கத் துணிவுகொண்டனர். எனினும், பாரி மகளிரின் இரங்கத்தக்க நிலைமை அவ்வாறு செய்ய விடாமல் அவரைத் தடுத்தது. "நாமும் இறப்பின், அந்தோ! தந்தையை இழந்து தவிக்கும் இத்தையலர் ஆதரிப்பாரின்றிக் காற்றால் அலைப்புண்ணும் கொழு கொம்பில்லாக் கொடிபோல் தவிப்பரே!" எனக் கலங்கினார். 'இவர்களை எங்கேனும் அழைத்துச் சென்று, எவர்க்கேனும் மணம் புரிவித்த பின்பு உயிர்

துறத்தலே தகுதியாம்' என்றெண்ணி, அவர்களை அழைத்துக்கொண்டு பறம்பு மலையை விட்டுப் புறப்பட்டார். மலையினின்றும் நீங்க மனமின்றி அதன் அழகையும் செழுமையையும் பாரியின் ஆட்சி முறையையும் பன்முறை எண்ணி எண்ணிக் கண்ணீர் பெருக்கியவாறு அம்மூவரும் சென்றனர்.

ஒரு சிறு கிராமத்தின் ஒதுக்குப் புறத்தில் சிறு குடில் ஒன்று. முழு நிலாக் கால இரவு. வெள்ளிய குடத்தினின்றும் பாலைப் பொழிவதுபோல், தண்கதிரோன் வெண்ணிலாவை நாற்புறமும் எங்கும் வஞ்சனையின்றிச் சொரிந்துகொண்டிருக்கிருன். அக்குடிசையின் வெளிப்புறத்தில் கவலைக் குறி படர்ந்த முகத்துடன் சோர்ந்து உட்கார்ந்திருந்தனர் பாரியின் பெண்கள். வெள்ளொளி பரந்த அமைதியான சூழ்நிலையின் அவ்வின்பக் காட்சி, கடந்த திங்களின் முழுமதி நாளன்று பறம்பு மலைக்கண் தம் தந்தை உடனிருக்கத் துய்த்த இன்பக் காட்சியை நினைப்பூட்டியது. உள்ளம் கொதித்தது. கண்களில் நீர் ததும்பியது. "ஆ! சென்ற திங்களில் அந்த நிலாவின்போது, எம் தந்தையோடிருந்தோம்! அருமையான பறம்பு மலையும் எமதாக இருந்தது. இந்தத் திங்களில் இவ்வெள்ளிய நிலவின்போதோ?—வெற்றி முரசினையுடைய அரசர்கள் எமது மலையைக் கைக்கொண்டுவிட்டனர்; நாங்கள் தந்தையையும் இழந்தோம் ஆயினேம்" என வருந்திக் கூறினர். அக்கூற்று, அச்செந்தமிழ்ப் புலமைச் செல்வியர் வாயினின்று,

"அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்
எந்தையும் உடையேம், எம் குன்றும் பிறர் கொளார்;
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே"

என்னும் பாவாக வெளிப்பட்டது. அச் செய்யுளை அருகில் இருந்த அந்தணர் பெருமானாகிய கபிலர் செவியுற்றார். அவர் மனம் வெயிலிடைப்பட்ட புழுப்போல் துடித்தது. "அந்தோ! கொடுமை! கொடுமை! இம்மகளிரின் வெந் துயர் கண்டும் உயிர் வாழும் நான் துன்பமுறுவேனாக. என் வாழ்நாள் அழிவதாக" என உளம் வெதும்பினார்.

கபிலர் பாரி மகளிரை அழைத்துச் சென்று மலை நாடு சேர்ந்தார். ஆங்கு விச்சிக்கோன் என்பானை, பாரி மகளிரின் சிறப்பைக் கூறி, அவர்களை மணம் புரிந்துகொள்ளுமாறு வேண்டினார். முடியுடை வேந்தனின் கோபத்திற் கஞ்சிய அக்குறுநில மன்னன் மறுத்துவிட்டான். பின்னர் இருங்கோவேள் என்பானுழைச் சென்று கூறினார். அவனும் உடன்பட்டானில்லை. இனி எவர்பால் சென்று வேண்டுவார், பாவம்! "இவர்கள் மணம் முடிய எத்துணை காலம் செல்லுமோ? அதுவரை உயிர் தாங்கி நிற்றல் எங்ஙனம்?" எனப் பலவாறு எண்ணி, தமக்குத் தெரிந்த பார்ப்பனப் பெரியார் சிலரிடம், அம்மகளிர்க்கு மண முடிக்குமாறு கூறி, ஒப்புவித்துத் தம் நண்பனை நினைந்து, "இம்மையில் என் நண்பன் என்னைப் பிரிந்து சென்றானாயினும், மறுமையிலேனும் அவனுடன் சேர்ந்து வாழ்தலை விதி கூட்டுவதாக" எனக் கருதியவாறே வடக்கிருந்து தம் நண்பனை நாடிச் சென்றார். பின்னர், பாரி மகளிரும் தகுந்த கணவரை யடைந்து நல்வாழ்வெய்தினர்.

12. பாண்டியன் மாலை பெற்ற பாவையர்

ஏகம்பவாணப் பிரபுவைப் பற்றியும் அவரது மனைவியைப்பற்றியும் முன்னமே நீங்கள் படித்திருக்கிறீர்கள் அல்லவா? சேர சோழ பாண்டிய மன்னர்கள், "முதலியார் முடி நடப்போயிருக்கின்றாரோ?" என ஏகாம்பவாணரைக் குறித்துக் கூறியதையும், முதலியாரின் மனைவியார், அவர்கள் தம் கணவரை அவமதித்ததாக எண்ணிச் சினங் கொண்டு, "மூவேந்தரின் முடிகளைப் பறித்து நடப் போயிருக்கிறார்" எனப் பொருள் படுமாறு ஓர் வெண்பா எழுதி விடுத்ததையும், அப்பாடல் கண்ட அவர்கள் அம்மையாரிடம் மன்னிப்புக் கேட்டுச் சென்றதையும் அந்தப் பாடத்தின் வாயிலாக அறிந்திருப்பீர்கள். அரசர் மூவரும் சென்றபின்னர் யாது நிகழ்ந்தது என்பதை இந்தப் பாடத்தில் படித்துப் பாருங்கள்.

நிலங்களைச் சுற்றிப் பார்த்த பிறகு ஏகாம்பவாணர் நன்னீராடிப் புனித நீறணிந்து இறைவழிபாடு முடித்துக் கொண்டு இருக்கை எய்தினர். வீட்டுக் காரியங்களை மேற்பார்வையிடும் செயலாளர் தலைவர்களாகிய கருமத்

தலைவர்கள் அரசர்களின் வருகையை அறிவித்ததோடு, அவர்கள் பரிகாச வார்த்தைகளையும் அதைக் கேட்டுச் சினங்கொண்ட அம்மையார் ஓர் பாடலின் வாயிலாக அவர்கள் நாணும்படி செய்ததையும், அம் மன்னர்கள் மன்னிப்புக் கேட்டுச் சென்றதையும் விவரமாக விளம்பினர்.

மன்னர்களின் நடத்தை பிரபுவைத் திடுக்கிடச் செய்தது. மனைவியார்பால் ஏகி வினவினர். ''மன்னிக்கு மாறு வேண்டுகோள் விடுத்தபின் அச் செய்கை மறந்து விடத் தக்கதாகும்; ஆகலின், அதனை மனத்திற் கொண்டிலேன்; இதுவே தங்கள்பால் இயம்பாமைக்குக் காரணம்'' எனத் தம் மனக்கோளைத் தெரிவித்தனர், அம்மையார். எனினும், ஏகம்பவாணர்க்கு அவ்வளவோடு அவர்களை விட்டு விட மனம் இசைந்திலது. அவர்களது ஏளனப் பேச்சை எண்ணுந்தோறும் சினம் மிகுவதாயிற்று. அவர்களது செருக்கை அடக்கத் தீர்மானித்தார்.

குறிய கால்களும் நெடிய கைகளும், பருத்து முன் சரிந்துள்ள சாலொத்த வயிறும், ஒளிவிட்டு எரியும் நெருப்புருண்டைகள் போன்ற கண்களுமுடைத்தான பூதம் ஒன்று, ஏகம்பவாணர் ஆட்சிக்கு அடங்கித் தொண்டு பூண்டு ஒழுகி வந்தது. அரிய பெரிய காரியங்களையும் எளிதில் செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தது அது. அந்தப் பூதத்தின் உதவியைக் கொண்டு அவனியாள் வேந்தரின் அகந்தையை அடக்குவது அவர்க்கு அரிதன்று. ஆகவே, அந்தப் பூதத்தை ஏவினர். அவரது ஏவலை ஏற்ற அந்தப் பூதம் இரவில் உறக்க நிலையில் ஒருவருக்கும் கட்புலனாகாதவாறு படுக்கைக் கட்டிலோடு அவர்களைத் தூக்கிவரக் கருதியது. முதலில் சேரவரசனைத்

தூக்கி வந்து சிறையில் சேர்த்தது. மறுநாள் சோழனைக் கொணர்ந்தது. பின்னர், பாண்டியன்பால் சென்றது. அவனுக்கு அண்மையில் செல்லவும் அதனால் ஆகவில்லை. பாண்டியன் தரித்திருந்த வேப்பமாலை அதற்கு இடையூறாய் இருந்தது. வேம்பு பேய் பூதங்களுக்குப் பகையல்லவா? ஆகவே, ஏகம்பவாணருக்குத் தன் நிலைமையை நிகழ்த்தி நீங்கியது, அப்பூதம்.

இனி, பாண்டியனைச் சிறைப்படுத்த வேண்டின் அவன் தரித்துள்ள வேப்பமாலை அகற்றப்படல் வேண்டும். அந்த மாலை அவன் மார்பில் உள்ளவரை அவனைச் சிறைப்படுத்தல் ஆகக்கூடிய காரியமன்று. அதற்கேற்ற உபாயம் யாது என வாணர் ஆராய்ந்தார். தம்மிடம் இருக்கும் பணிப் பெண்களுள் நால்வரை அழைத்தார். எழில் நலமும், கல்வித் தேர்ச்சியும், சொல் வன்மையும் வாய்ந்த அவர்களை, "நீங்கள் விறலியராகப் பாண்டியன்பால் சென்று, ஆடல் பாடல்களால் அவனை மகிழ்வித்து, அவன் அணிந்துள்ள வேப்பந்தாரினைப் பரிசிலாக வேண்டிப் பெற்று வாருங்கள்" எனக் கட்டளையிட்டு அனுப்பினர்.

செந்தமிழ்ப் புலமைச் செல்வியர் நால்வரும் தென்னவர்கோன் அவைக்களம் நண்ணி, தங்கள் புலமை தோன்ற ஆடல் பாடல் நிகழ்த்தினர்: மன்னவன் மகிழ்வுடன் பரிசு வழங்கப் பல பொருள்களைக் கொணர்ந்தான். அவற்றைக் கண்டனர் அரிவையர். "வேண்டுவார் வேண்டுவ அளிக்கும் வேந்தே! நீர் தரக் கருதும் முத்தும் மணியும் பொன்னும் ஆகிய இவை எம்மால் வேண்டப்படுவன அல்ல" என விளம்பி, அப்பொருளில் விருப்பம் காட்டாராயினர். "ஆயின், உம்மால் வேண்டப்படுவன யாவை? உரைமின்" எனக் காவலன் கேட்டலும்,

அம்மாதருள் ஒருத்தி, "தலைவியின் விருப்பத்தைத் தலைவனிடம் நற்றாய் கூறல்" என்னும் பாவத்தில் பின் வரும் பொருள் பொதிந்த ஓர் அழகிய செந்தமிழ்ப் பாடல் கூறுகின்றாள்.

"தென்னவனே! மீனக் கொடியை உடையவனே! சிறந்த வில் வீரனே! மதுரைக்கரசனே! வளம் மிகுந்த பாண்டிய நாடனே! வண்டுகளுக்கு மாலையைக் கொடுத்த தமிழ் நாடனே! கரும்பு போல்பவளாகிய என் பெண் உன் வேப்ப மாலையில் நோக்கம் உடையவளாக இருக்கிறாள். அவள் நோக்கம் மற்றப் பொருள்களின் மேல் இல்லை."

"தென்னவா! மீனவா! சீவிலிமாறு! மதுரை
மன்னவா! பாண்டி வளநாடா!—முன்னம்
சுரும்புக்குத்தாரளித்த துய்யதமிழ் நாடா!
கரும்புக்கு வேம்பிலே கண்."

இப்பாடல் செவிப்பட்டதும் வழுதிக்குத் திகைப்பு உண்டாயிற்று. "இவள் ஏன் வேப்ப மாலையை விரும்புகிறாள்? பாண்டிய மரபினர் சின்னமாகிய இதனைப் பெறுதலால் இவள் அடையும் பயன் யாது?" என எண்ணியவாறே மற்றவளை நோக்கினான் அரசன். உடனே அவளும் அதே பாவத்தில், "பசுமையான மலர்ப் பொழில்கள் சூழப் பெற்ற நெல்வேலிக்கு இறைவனே! தமிழாராய்ச்சி மிக்கவனே! எனது மகள் மலர் மாலையையோ முத்து மாலையையோ விரும்புகின்றாள் இல்லை. உனது வேப்ப மாலையின்மீதே ஆசை கொண்டிருக்கிறாள்" என்னும் கருத்து அமைய ஓர் செய்யுள் கூறினாள்.

"மாப்பைந்தார்க் கல்ல,முத்து வண்ணத்தார்க் கல்ல, என்பெண்
வேப்பந்தார்க் காசைகொண்டு விட்டாளே— பூப்பைந்தார்
சேர்ந்திருக்கும் நெல்வேலிச் சீவிலிமா றே!தமிழை
ஆய்ந்திருக்கும் வீரமா றே!"

அவள் அதைக் கூறி முடிக்குமுன் மற்றொருத்தி,

"வேம்பா கிலுமினிய சொல்லிக்கு நீபுனைந்த
வேம்பா கிலும் உதவ வேண்டாவோ?— மீன்பாயும்
வேலையிலே வேலைவைத்த மீனவா, நின்புயத்து
மாலையிலே மாலைவைத்தாள் மான்."

"மீன்கள் தாவிப் பாயும் கடலின்மேல் வேலாயுதத்தை எய்த பாண்டியனே! என் பெண்ணானவள் நீ தோளில் அணிந்துள்ள மாலையின் மேல் விருப்பங் கொண்டிருக்கிறாள். காய்ச்சிய சர்க்கரைப் பாகினும் இனிமையான சொற்களையுடைய அவளுக்கு வேப்ப மாலையையாகிலும் தரலாகாதா?" என வேண்டிக் கூறினாள்.

அனைவரும் ஒரு படித்தாக வேப்ப மாலையை வேண்டி நின்றது, பாண்டியன் உள்ளத்தில் சிந்தனை அலையை எழுப்பியது; அச்சம் தோன்றியது. 'ஏகம்பவாணரின் சூழ்ச்சியோ இது!' என்னும் ஐயமும் எழுந்தது. இந்த எண்ணங்களினூடே ஒரு புரட்சியையே அவன் மனத்தில் உண்டாக்கிவிட்டது நாலாமவள் மொழிந்த மாற்றம். அவள் கூற்று இது—

"ஐயோ! மாதர்களே! உங்கள் வேண்டுகோள் ஒரு பலனையும் பயவாது. நீங்கள் வேண்டும் வேப்ப மாலை தர அரசர் துணிவு கொள்வாரா? ஏகம்ப வாணரின் பூதத்துக்கு அஞ்சியிருக்கும் அரசர் எவ்வாறு உங்களுக்கு

அதனைக் கொடுப்பார்? அந்த மாலையல்லவா அவரைக் காத்து நிற்பது?" என வேந்தன் வெள்குமாறு பரிகாச மாகக் கூறினாள்:

"இலகு புகழாலை ஏகம்ப வாணன்
அலைகை வரும்வரும் என் றஞ்சி—உலகறிய
வானவர்கோன் சென்னிமிசை வண்கை வளையெறிந்த
மீனவர்கோன் கைவிடான் வேம்பு."

அவமதிப்பாக அவள் கூறியது அரசனால் பொறுக்க முடியாததாக இருந்தது. அன்றியும், பரிசில் வேண்டிப் பாடி வரும் பாவாணர்க்குக் கொடை மறுப்பது மன்னர்க்கு மாண்புடைச் செயலாகாதென்றும் கருதினான். உடனே துணிவு கொண்டான். தன் உயிரையே தருதல்போல் மாலையை எடுத்துக் கொடுத்துவிட்டான்.

மாலை கைவரப் பெற்ற மங்கையர் மன்னனை வணங்கி விடை பெற்றுச் சென்றனர். அன்றிரவே ஏகம்பவாணரின் சிறைக் கோட்டம் அடைந்தான் பாண்டியன்.

பின்னர், தமிழ் வேந்தர் மூவரும் ஏகம்பவாணனிடம் தம் செய்கைக்கு வருத்தம் தெரிவித்துக் கொள்ளவே, அவரும் சிறை வீடு செய்ததுமின்றி, அவர்களைத் தம் விருந்தினராகக் கொண்டு நட்புப் பாராட்டி உபசரித்து அனுப்பினர். காவலரும் களிப்புடன் தம் தம் நாடு நோக்கிச் சென்றனர்.

பெரிய குடும்பத்தைச் சேர்ந்த செல்வச் சீமாட்டிகளேயன்றிச் சாமானிய எளிய நிலைமையில் உள்ள மாதரும், முன்னாளில் கல்வி பயின்று புலமை பெற்

றிருந்தனர் என்பதற்கு இந்த வரலாறு ஓர் எடுத்துக் காட்டாக இருத்தல் காண்க.

கவி இயற்றுவதென்பது- அதிலும், நின்ற நிலையில்- நினைத்தவுடன் - ஏடும் எழுதுகோலுமின்றி - தட்டுத் தடுமாற்றம் இன்றி - எழுதுதல் கற்றூர் எனப்படுவோர் யாவர்க்கும் கைகூடுவதன்று; நெடுங்காலப் பயிற்சி யாளர்க்கே அது சாத்தியமாகும். அன்றியும் சொல்லழகும் பொருளழகும் பொருந்த, கற்றோரும் போற்றத் தக்க கவி களைச் சிறந்த புலமை வாய்ந்தோரே இயற்ற வல்லவ ராவர்.

பணிப் பெண்கள் பாடிய மேலே கண்ட பாடல்கள் எத்துணை சிறந்தவை என்பதை நோக்குங்கள். கம்பர், காளமேகம் போன்ற புலவர்களின் பாடல்களாக மதிக்கத் தக்கவாறு சொல்லழகும் பொருளழகும் பொருந்தப் பெற்றுள்ளன. அரைகுறைப் படிப்பாளிகள் - கற்றுக் குட்டிகள்- பாடிய பாடல்கள் இவை என்று எவரேனும் சொல்லத் துணிவரோ?

"கரும்புக்கு வேம்பிலே கண்", "வேலையிலே வேலை வைத்த மீனவர்", "மாலையிலே மாலை வைத்தாள் மான்" என்பன போன்ற சொற்றொடர்களில் அமைந்துள்ள நயத்தை நோக்குங்கள். அது கொண்டு அப் பெண்மணி களின் கல்வியின் அளவை நீங்களே மதிப்பிடுங்கள்.

13. மற்றும் சில மணிகளும் மறக்குடி மங்கையரும்

சங்க மருவிய நூல்கள் எனப்படும் புறநானூறு முதலிய நூல்களைத் தங்கள் மணி மொழிகளால் அணி பெறச் செய்த புலவர் பெருமக்களுள் பெண்மணிகளும் பலராவார். அவர்கள் மாறோக்கத்து நப்பசலையார், காக்கைபாடினியார் நச்செள்ளையார், ஒக்கூர் மாசாத்தியார், வெண்ணிக் குயத்தியார், குறமகள் இளவெயினி, வெறியாடிய காமக் கண்ணியார், மாற்பித்தியார், பேய் மகள் இளவெயினி, காவற்பெண்டு, தாயங் கண்ணியார், பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார், ஔவையார், பாரிமகளிர், பூத பாண்டியன் தேவியார் என்னும் பெயரினராவர். அவர்களுள் ஔவையார், பாரிமகளிர், பூத பாண்டியன் தேவியார் என்போரைப்பற்றி முந்திய பாடங்களில் நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆக, ஈண்டு, மற்றும் சில பெண்மணிகளைக் குறித்து இந்நூலின் தன்மைக் கேற்பச் சுருங்கச் சொல்லலாகச் சிறிது வரைவாம்.

1. நப்பசலையார்

இவர் பாண்டிய நாட்டில் கொற்கையைச் சூழ்ந்த மாறோக்கம் என்னும் நாட்டைச் சேர்ந்தவர். ஆகலின் மாறோக்கத்து நப்பசலையார் என அழைக்கப்படுவாராயினர். இவர் இளமையில் தக்க ஆசிரியரை அடுத்துக் கல்வியில் தேர்ச்சி பெற்றதோடு கவி பாடுவதிலும் வல்லுநராயினர். பெரும் புலவரோடு ஒப்பப் புலமை நிரம்பப் பெற்ற அம்மையார் தம் கல்வித் திறனைக்கொண்டு புவி மன்னரும் புகழுமாறு வாழக் கருதினர்.

மறங்கடிந்து அறம் வளர்க்கும் அரசர்களை நாடிச் சென்றார் நப்பசலையார். சோழநாட்டரசனாகிய கிள்ளிவளவனும், மலையமானாட்டின் இறைவன் மலையமான் திருமுடிக்காரியும், சோழியவேனாதி திருக்கண்ணனும் ஆகிய வேந்தர்களின் வள்ளன்மை, வீரம், தமிழ் மொழிப் பற்று, புலவர்களைப் போற்றும் இயல்பு•முதலிய குணச் சிறப்புக்களைச் செவியுற்று, ஆங்காங்குச் சென்று, தம் இனிய பாக்களால் அவர்களை மகிழ்வித்துப் புகழும் பொருளும் பெற்று வாழ்ந்து வருவாராயினர்.

கிள்ளி வளவன், பெரிய முதலைகள் நிரம்பிய ஆழமான அகழி சூழ்ந்த் கருவூர்க் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றிச் சேரனைப் புறங் கண்டு வாகை சூடி மீண்ட சமயம் அது. ஆகலின், நப்பசலையார் அவ்வளவனது கருவூர் வெற்றியைச் சிறப்பித்துப் பாடினர். அன்றியும், சோழ அரசர்களின் நீதிவழுவா நெறிமுறையினையும், பாவலர்க்குப் பரிந்தளிக்கும் பண்பினையும் புகழ்ந்து பாமாலை வேய்ந்தார். பாடல்களின் அழகைக் கண்ட

வளவனும் கவியரசியாரிடம் அளவற்ற அன்பு பாராட்டி ளுன். சிறப்புப்பல செய்தான். என்றும் உறையூரில் தங்கி யிருந்து தன் அவையை அலங்கரிக்குமாறு பன்முறை வேண்டினன். அவன் வேண்டுகோட்கிணங்கி அருந் தமிழணங்கும் அங்குத் தங்கியிருப்பாராயினர்.

சின்னுட்களுக்குப் பின்னர்ச் சோழன் கிள்ளிவளவ னுக்கு இறுதிக்காலம் வந்தெய்தியது. விண்ணவர்க்கு விருந்தினனுயினன். நங்கையர் மணியும் அவன் பிரிவை யாற்ருது வருந்தினர். அதன் பின்னர் உறையூரின் நீங்கி னர். வளவனைக் குறித்து அச்சமயம் கையறுநிலையாக அவர் பாடிய பாடல் படிப்போர் மனத்தை உருக்கும் தன்மையதாகும். அப்பாடல் இது:

"செற்றன் ருயினும் செயிர்த்தன் ருயினும்
உற்றன் ருயினும் உய்வின்று மாதோ!
பாடுநர் போலக் கைதொழு தேத்தி
இரந்தன் ருகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்கும் தானைத்
திண்டோள் வளவற் கொண்ட கூற்றே."

இதன் பொருள்: "வளவனது உயிரைப் பற்றிச் சென்ற எமன் அவனை எங்ஙனம் கொண்டிருப்பான்? பகைமை கொண்டோ, வெகுண்டோ, கையால் அவன் உடலைத் தீண்டியோ பற்றிச் சென்றிரான். ஏனெனின், அங்ஙனம் செய்யின் அவன் உயிரோடு தப்பிச் சென் றிரான். ஆகலின் அவன், பாடுவரைப்போலத் தோன்றிக் கைதொழுது வாழ்த்தி, இரந்து உயிர் கொண்டிருத்தல் வேண்டும்."

இப் பாடலில் வளவனது ஆண்மையினையும் வண்மை யினையும் வியந்து இரங்கிக் கூறியிருத்தலைப் பாருங்கள். மேலும் இம்மாதரசியார் புலவர் பெருமாளுகிய கபிலரை,

"புலனழுக்கற்ற அந்தணாளன்", "பொய்யா நாவிற் கபிலன்" எனப் பலவாறு புகழ்ந்து பாடியிருத்தலால், பெரியோர்களை நன்கு மதித்துப் போற்றும் பெருந்தன்மையுடையார் என்றும் அறிகிறோம்.

2. ஒக்கூர் மாசாத்தியார்

தண்டமிழ் நாட்டுக் குடிகளுள் மறக்குடி என்பதும் ஒன்று. அஃது இன்ன காலத்துத் தோன்றியதென்று அறியக்கூடாத மிகப் பழமையான குடி. அக் குடி மக்கள் அனைவரும் அஞ்சா நெஞ்சம் கொண்ட அரியேறு போன்ற வீரர்கள். போர்புரிதலே அவர்கள் தொழில். மறக்குடி என்பதற்கு வீரக்குடி என்பதே பொருளாகும். (மறம்-வீரம்.) ஆடவரேயன்றிப் பெண்டிரும் இளஞ்சிறுரும் வீரம் செறிந்தோராய்த் திகழ்வர் அக்குடியில்.

மாதர்கள் வீரமற்றவர்களாக இருப்பின் அவர்களிடம் தோன்றும் மக்கள் வீரமுற்றவர்களா யிருத்தல் எங்ஙனம் இயலும்? பூனையின் வயிற்றில் பிறப்பது புலியாகுமோ! ஆகலின், ஆடவரின் பண்புகள் அனைத்திற்கும் அவர்களின் தாய்மார்களாகிய மாதர்களே காரணம் என்பதை நாம் மறத்தலாகாது. பெண்கள் பயங்கொள்ளிகள், கோழைகள், பேதைகள், பின்புத்திக்காரர் எனப் பலவாறு இழித்துரைப்போர் தங்களை அறியாமல் தங்களைத் தாங்களே இழிவுபடுத்திக் கொள்பவராகின்றனர் என்பதை உணர்தல் வேண்டும். ஏனெனில், பயங்கொள்ளிகள் வயிற்றில் பிறப்போரும் பயங்கொள்ளிகளே; கோழைகளின் மக்களும் கோழைகளே; பேதைகளின் பிள்ளைகளும் பேதைகளே; பின்புத்திக்காரர் பெற்றவர்களும் பின்புத்திக்காரரே என்பதை அவர்கள் அறிவதில்லை.

காலைப் பொழுது; போர்ப் பறையின் ஓசை நாற்றிசையும் செவிடுபடுமாறு முழங்குகிறது. மறக்குடி மங்கை ஒருத்தி தன் வீட்டினுள்ளிருந்து பரபரப்புடன் வெளி வந்து வீதியின் இருமருங்கினும் பார்க்கிருள். சிறுவன் ஒருவன் அங்கு விளையாடிக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்து ஓடிச் சென்று அவன் கரம்பற்றி ஈர்த்துச் சொல்கிருள். "குழந்தாய்! முரசொலி உன் செவிப்பட்டிலதோ? போர்க்குச் செல்ல இன்று உன்னையன்றி வேறு யாருளர்? பகைவர் சேனை நமது நகரைக் கைப்பற்றிக் குடிமக்களைத் துன்புறுத்தாவண்ணம், அப்பகைவர்களை எதிர்த்துப் பொருது அழிப்பது நமது கடமையல்லவா? விரைந்து போர்க்களம் செல்க" எனக் கூறுகிருள் அச்சிறுவனிடம்.

ஒக்கூர் மாசாத்தியார் என்னும் செந்தமிழ்ப் புலமைச் செல்வியார் பயங்கரமான அச்செயலைக் காண்கிருர். அம் மங்கையின் அருகிற் சென்று, "அம்மையே! இஃதென்னே? இச்சிறுவனே போர் புரியத் தக்கான்! பகைவரை எதிர்த்துப் போர்புரியும் ஆற்றல் வாய்ந்த ஆண்மையாளர் வேறெவரும் உமது இல்லின்கண் இலரோ?" என வினவுகின்ருர். அதற்கு விடையாக அவ்வீர மங்கை மொழிந்த மாற்றம் இது:

"தாயே! முதல் நாள் போரில் என் தமையன் மாண்டான். நேற்றைய செருவில் என் கணவன் மாண்டான், இன்று என் ஒரே மகனை இவனைத் தவிர வேறு யாரும் இல்லை. மன்னியுங்கள்; கால தாமதமாகிறது" என மொழிந்தவாறே சிறுவனை அழைத்துப்போய், விரிந்த தலைமயிரை எண்ணெய் தடவி அமர்த்தினுள். வெள்ளிய ஆடை அணிவித்து வேலாயுதத்தைக் கையிற் கொடுத்தாள். "உன் நாட்டிற்காக- நாட்டு மக்களுக்காக- உயி

ரைத் துரும்பாக மதித்து மகிழ்ச்சியோடு அமர்புரியச் செல்க" என்றுரைத்து அனுப்புகிருள்.

அம்மறக்குடி மங்கையின் செயலைக் கண்டு மனம் மாழ்கிய மாசாத்தியார், "ஆ! என்னே, இவள் நெஞ்சத் துணிவு! இவளே மறக்குடி மங்கை என்பது தகும்; தகும்!" என வியந்து, அவளது வீரச் செயலை ஓர் பாடலால் சித்தி ரித்துக் காட்டுகின்ருர்.

அந்தச் சித்திரத்தைப் பாருங்கள்:-

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதில் மகளிர் ஆதல் தகுமே.
மேல்நாள் உற்றசெரு விற்குஇவள் தன்ஐ
யானை எறிந்து களத்தொழிந் தனனே
நெருநல் உற்றசெரு விற்குஇவள் கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட் டனனே,
இன்றும்,
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே."

(மூதில்- முதிய மறக்குடி; ஐ - தமையன்; செரு- போர்; வெளிது- வெள்ளுடை; பாறுமயிர்- விரிந்த மயிர்.)

இம் மறக்குடி மங்கையின் வீரச் செயலை எடுத்துக் காட்டிய செந்தமிழ்ப் புலமைச் செல்வியாகிய ஒக்கூர் மாசாத்தியாரைக் குறித்து- இதனைக் கூறினர் என்பதைத் தவிர- வேறொன்றும் தெரிந்திலது. இனி, மற்றொரு மறக் குடி மங்கையின் வீரச் செயலையும் வேறொருவர் விளக்கி யுள்ளார். அதனையும் ஈண்டுக் காண்போம்.

3 காக்கைபாடினியார் நச்செள்ளையார்

நச்செள்ளையார் என்பார் நற்றமிழ்ப் புலமை வாய்ந்த நங்கையர் மணி. அவர் ஒரு சமயம் காக்கை கரைந்தமையைப் பாராட்டிக் கூறிய அருமை பற்றிக் காக்கைபாடினியார் என்னும் சிறப்புப் பெயர் பெற்றனர். கல்விச்செல்வம் நிரம்பப் பெற்று, பெரும் புலமை வாய்ந்தவராயினும் அப் பெண்மணியார் பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டிருந்ததாகவோ, தம் கல்வித் திறனைப் புலப்படுத்தற்காகவேனும் பல பாடல்கள் பாடியதாகவோ தெரியவில்லை. அத்தகைய வாய்ப்பை அவரது வாழ்க்கை நிலை பெற்றிலது போலும். எனினும், குமட்டூர்க் கண்ணனார், பரணர் முதலிய பெரும் புலவர்கள், சேரமன்னர் சிலரைப் பாடிப் பரிசு பெற்றிருத்தலை யறிந்து, தாமும் அங்ஙனம் பெற விரும்பித் தம் காலத்தில் அரசாண்டிருந்த ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் என்னும் இறைவனைச் சிறப்பித்துப் பத்துப் பாடல்கள் பாடினர். அப்பாக்களின் செவ்வியைக் கண்ட சேரன் அவரது கல்வி மேம்பாட்டை வியந்து, பெண்பாலாராகிய அவருக்கு அணிகலனுக்கென்று ஒன்பது துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசும் பரிசாகக் கொடுத்து உபசரித்தான்.

ஒக்கூர் மாசாத்தியாரைப் போன்று இவரும் தாம் கண்ட மறக்குடி மங்கையின் மறச் செயலைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். இவர்கண்ட காட்சி இது:-

ஓர் கிழவி உலர்ந்து மெலிந்த யாக்கையுடைய முதியோள். போர்க்குப் போன தன் மகன் வெற்றி வீரனாகத் திரும்பி வருவான் என்று எதிர்பார்த்து நிற்கிறாள். எக்காரணத்தாலோ அந்நெறிச் சென்றார் சிலர், "பாட்டி! உன் மகன் போரில் புறமிட்டான்" என்றியம்பிப் போயினர். கோப வெறிகொண்டு சீறி எழுந்தாள் கிழவி. "மறக்குடிக்குக் கேடு சூழ்ந்த கோழைக்கா என் வீரப் பாலை

ஊட்டினேன்! அவன் போரில் புறமிட்டது உண்மை யாயின், அவன் பால் உண்ட இம் மார்பை அறுத்தெறி வேன்'' என வஞ்சினம் கூறி, வாளேந்திய கையளாய்ப் போர்க்களம் புக்காள். பிணங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். தன் மகன் உடலைக் கண்டாள்; மார்பில் வேல் தைத்திருந்தது. அதுதான் அவன் ஆவியைக் கவர்ந்தது என்று உணர்ந்தாள். ஆ! உவகையால் நிரம்பியது அவள் உள்ளம். அவனைப் பெற்ற நாளினும் பெரிது உவந்தனள் அம் மூதாட்டி.

நச்செள்ளையார் எளிய இனிய பாடலால் அவ்வீர மாதின் வியத்தகு செயலை நமக்கு அறிவிக்கிறார். ஏன்? தமிழ்ப் பெருமக்கள் ஆடவர் பெண்டிர் இருபாலாரும் பண்டை நாளில் கல்வி, வீரம், ஒழுக்கம், மானம் இவற்றில் எங்ஙனம் சிறப்புற்று விளங்கினர் என்பதை உணர்ந்து, அவர்கள் வழித் தோன்றல்களாகிய நாமும் நம் பண்டைப் பெருமைக்கு இழுக்கு நேராதவாறு ஒழுகுதல் நம் கடன் எனக் காட்டுதற்கேயன்றோ? ஆகவே, அவரது பாடலை நாம் படித்தறிதல் அவசியமல்லவா!

''நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்று பலர்கூற
மண்டமர்க்கு உடைந்தன னாயின் உண்டஎன்
மார்பறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.''

(சினைஇ - கோபித்து; செங்களம் - குருதி நிறைந்த போர்க்களம்; காணூஉ - கண்டு.)

முற்றும்

TAMIL NON-DETAILED BOOKS

APPROVED BY THE MADRAS TEXT BOOK COMMITTEE

1. ஜாவா யாத்திரை - டாகுர்	84/19-5-54
2. போஸ்ட் மாஸ்டர் - டாகுர்	85/19-5-54
3. போர் நீக்கிய புலவர்கள் - முத்துக்கிருட்டின நாட்டார்	,, ,,
4. வேதாளக் கதைகள் - த. நா. சேனபதி	,, ,,
5. மல்லிகை மாலை - கி. வா. ஜகந்நாதன்	,, ,,
6. முதல் நாள் - காண்டேகர்	,, ,,
7. பழந்தமிழர் பண்பு - முத்துக்கிருட்டின நாட்டார்	120/19-5-54
8. பன்மலர்ப் பொய்கை - ஸ்ரீனிவாசாச்சாரி	,, ,,
9. அறிவுலக வளர்ச்சி - பொன். சுப்ரமணியப் பிள்ளை	,, ,,
10. தமிழ்ப் பெண் கவிகள் - ஸ்ரீமதி கமலவதனம்	29/4-5-55
11. புலவரும் புரவலரும் - திரு. ராமநாதன்	,, ,,
12. கல்வியின் சிறப்பு - ம. கி. ஜயராம் நாயு[illegible]	

பள்ளி மாணவர்களுக்கேற்ற பு[illegible]
எம்மிடம் கிடைக்கும். வி[illegible]
தயை செய்து எழுதக் கே[illegible]

THE ALLIANCE C[illegible]

EDUCATIONAL PUBLISHERS & B[illegible]

Post Box No. 617[illegible]

MYLAPORE,